
அடுத்த இதழில்

சரணம் கணேசா!

சித்திரத் தொடர் ஆரம்பம்




KALKI
25-7-82
ரூ.1 20

கல்கி


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO
HES. G. 6. TM

நீங்கள் எழுதிய ஜோக்!

(ஜோக் இல்லாத ஜோக் – போட்டி முடிவு)



அ. குமார், பெங்களூர் பரிசு ரூ 10

பரிசு ரூ 5

''அய்யய்யோ! என் நிழல் ஏன் இப்பிடி இருக்கு?''

''பயப்படாதீங்க! தினம் கூடவே பேசாம நடந்து வர போரடிக்கிது. அதான் இன்னிக்குப்பேசிக்கிட்டேவரலாமேன்னு திரும்பினேன். வேறொன்றுமில்லே.''

-டி. எஸ். லக்ஷ்மி, சென்னை-44

''ஆஹா! நான் இந்த நிழலாக மட்டும் இருந்தால் வாழ்க்கையில் கஷ்டங்களே தெரியாதே!''

''ஆஹா, நான்மட்டும் நிஜமாகவே இவனு இருந்தால் ஒழுங்காகப் படித்து வாழ்க்கையில் முன்னேறி சந்தோஷமா இருப்பேனே! ஒருத்தன் கூடவே போய் மிதிபட வேண்டியதில்லையே!''

-எஸ். லலிதா, சென்னை-33

''என் ஸார், 'நிழல் நிஜமாகிறது' பார்த்தீங்களா? படம் எப்படி ஸார்?''

''ஐயோ நீ திரும்பிப் பார்க்காதயேன். எனக்குக் கொலே நடுக்கமா இருக்கு!''

-பி. சுவாமிநாதன், பூனா

''என்னப்பா! எங்கே போனாலும் என் னூடவே வர்றியே?''

''என்னது நான் கேட்க வேண்டிய கேள் வியை நீ கேட்கிறே?''

-செல்வரத்தினம், வடகாடு

வன்முறை அரக்கனை வணங்குகிறார்கள்

மன ஆரோக்கியம் பேணும் தேசிய நிறுவனம் ஒன்று அமெரிக்காவில் இருக்கிறது. அது அண்மையில் சில ஆய்வுகளை நடத்தி வெளியிட்டிருக்கும் அறிக்கை திடுக்கிடச் செய்வதாக உள்ளது.



✖ அமெரிக்க ஜனாதிபதியைத் தொலை நோக்கி பொருத்தப்பட்ட துப்பாக்கியால் சுடுவதற்கான கொலைகாரனின் எல்லாஏற்பாடுகளையும்விரிவாகக் காட்டிய திரைப்படம் 'டு மினிட் வார்னிங்!'

டி. வி.யில் காண்பிக்கப்படும் சினிமாக்களில் மிக அதிகமான வன்முறைக் காட்சிகள் இருப்பதால் அமெரிக்கக் குழந்தைகளிடமும் வாலிபப் பருவத்தினரிடமும் வன்முறைப் போக்கு அதிகரித்து வருகிறது என்பதே இந்த அறிக்கை. இதற்கு விஞ்ஞானபூர்வமான ஆதாரம் அபரிமிதமாகஇருப்பதாக அறிக்கை கூறுகிறது. இது ஏற்கனவே நாம் அறிந்தது தானே என்று ,எண்ணுவோருக்கு ஒரு புதிய செய்தி: சாதாரணமாக நாம் குற்றமற்றவை என்று எண்ணும் கார்டூன் சித்திரங்கள் கூட வன்முறை அதிகமிருந்தால் ஆபத்தானவையே! உதாரணமாக டாம் அண்ட் ஜெர்ரி என்ற கார்ட்டூனைக் குறிப்பிடுகிறது இந்த அறிக்கை. இதில் டாம் என்ற பூனை

✖ இதை விடவும் மோசமான வன்முறைக் காட்சிகள் இன்று திரையுலகில் மலிந்துவிட்டன.



சதா ஜெர்ரி, டஃபி என்ற எலிகளைத் துரத்திப் பிடித்துச் சமைத்து உண்ண முயலும். அந்த எலிகள் தப்பி வந்து அந்தப் பூனையைத் தந்திரமாகத் தாக்கிப் படாத பாடு படுத்தும். இந்தக் கார்ட்டூன் சித்திரங்களை அடிக்கடி பார்ப்பதாலும் காமிக்ஸ்களைப் படிப்பதாலும் சிறுவர்களின் மனங்கள் வன்முறையில் நாட்டம் கொள்கின்றன என்கிறது அந்த அறிக்கை!

சென்ஸார் போலீஸ்!

நம் நாட்டிலோ நமது படாதிபதிகள் ஸெக்ஸ் வன்முறைகளை நிறையவே புகுத்துவதுடன், அயல் நாட்டிலிருந்தும் ஆரோக்கியமற்ற திரைப்படங்களையும் காமிக்ஸ்களையும் நாம் நிறையவே தருவிக்கிறோம்! ஆபாசம் மலிந்த புத்தகங்கள், பத்திரிகைகளும் அதிகரிக்கின்றன.

இந்தச்சூழ்நிலையில்தான் சென்ஸாருக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்துகிறார்கள் நமது படாதிபதிகள்!

''சென்ஸார் என்பது கிட்டத்தட்ட போலீஸ்மாதிரிதான். போலீஸ்காரர் பாபுலராக இருக்க முடியாதல்லவா? அது போலத்தான் சென்ஸாரும்!'' என்று சொன்னார் அசோகமித்திரன். இவரைப் பொறுத்தவரையில் சில படங்கள்தாம் பிரச்னை உண்டாக்கும். அவைதாம் ஆர்ப்பாட்டத்துக்குக் காரணமாகவும் அமைந்து விடுகின்றன. இவற்றில்கூட அளவுக்கு மீறிய ஆபாசம், அதிகமான வன்முறை இவற்றுக்காகவே அப்படிப்பட்ட காட்சிகளை வெட்டி விடுகிறார்கள் சென்ஸார்.

படத் தயாரிப்பாளர்கள் எந்த உரிமைக்காகப் போராடுகிறார்கள்? இன்னும் கொஞ்சம் கூட ஆபாசமாகப் படம் எடுப்பதற்கு உரிமை கேட்கிறார்கள். உன்னதமான லட்சியங்களுக்காக அல்ல!

'தியாகி' படம் அதிகமான வெட்டுக்களுக்கு உள்ளாகியது. லஞ்ச ஊழலைச் சாடும் முறையில் அல்லது போர்வையில், ஆபாசமும் வன்முறையும் அளவுக்கு மீறித் திணிக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்துவிட்டு இதற்கு அனுமதி மறுத்தவர்கள் அசோகமித்திரன் போன்ற உறுப்பினர்கள் அல்ல, படத் துறையைச் சேர்ந்த எம். டி. வாசுதேவன் நாயர், எம். பி. சீனிவாசன், எல். வி. பிரசாத் போன்ற அங்கத்தினர்களே! அத்தனை கொடூரமும் ஆபாசமும் படத்தில்!

சென்னையில் படம் சென்ஸார் ஆனவுடன் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளைச் சந்திக்க முடிகிறது. பம்பாயில் இது சாத்தியமில்லையாம். தபால் மூலமே சர்ட்டிபிகேட்டைக் கூடப் பெற முடியும்'

'இளஞ் சோடிகள்' படத்தில், குளியல் தொட்டியில் கதாநாயகனும் கதாநாயகியும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் காட்சி இருந்தது. சென்ஸார் வெட்டிய பிறகும் ('இதிலே என்ன ஸார் ஆபாசம்?' — படத் தயாரிப்பாளர்!) பல இடங்களில் பல கொட்டகைகளில் இந்தக் காட்சி காட்டப் படுகிறது. சென்ஸாரிடம் காண்பிக்கிற பிரதியில் மட்டுமே இந்த வெட்டு. மற்ற பிரதிகளில் அப்படியேதான் இருக்கிறது. பல மலையாளப் படங்களைப் பொறுத்தவரை இதுதான் உண்மை.

''இடதுசாரிக் கருத்துக்களைச் சொல்லுவதில் ஆகட்டும், சட்டம் எப்படி சில வேளைகளில் உதவாமல் போய்விடுகிறது என்று சொல்லும் 'சட்டம் ஒரு இருட்டறை' போன்ற படங்கள் ஆகட்டும் — நாங்கள் அதிகம் குறுக்கிடுவதில்லை!'' என்கிறார்

✕— கற்பழிப்புக் காட்சி இடம்பெறாத திரைப்படமே இன்று அநேகமாகக் கிடையாது!



✕ பெண்களை வெறும் சதைப் பற்றுள்ளவர்களாகக் காட்டி இழிவுபடுத்தும் போக்குக்கு முடிவே இல்லையோ?



அசோகமித்திரன். இத்தனையெல்லாம் இருந்தும், இந்தத் திரைப்படத் தொழில் துறையைச் சேர்ந்தவர்கள் ரொம்ப இன்ஃப்ளுயன்ஸ் உள்ளவர்களாம். 'தியாகி' படத்துக்குக் கடைசியில் சான்றிதழ் வழங்கி விட்டதிலிருந்தே இது தெரியவில்லையா?


பாரபட்சம் ஏன்?

இவை எதையுமே ஒத்துக்கொள்ளும் நிலையில், தென்னிந்தியத் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் திரு சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தி இருக்கவில்லை. இந்தியா முழுக்க ஒரே மாதிரியான சென்ஸார் விதிமுறைகள்தானே? அப்படி இருக்க, ஆங்கில, இந்திப் படங்களுக்கு ஒரு நியாயம்; தமிழ்ப் படங்களுக்கு ஒரு நியாயமா? என்று ஆத்திரத்தோடு கேட்கிறார் இவர். 'டார்ஜான் த ஏப்மேன்' போன்ற படங்களை

"காசிக்குப்போறேன் எதை விட்டுட்டு வர...?"

"எதை வேணுமானாலும் விட்டுட்டு வா... ரிட்டர்ன் டிக்கெட்டைத் தவிர!"

-உ.ராஜாஜி



வெளி நாட்டினர் மட்டுமே பார்க்கலாம் என்று இங்கே திரையிடுகிறார்கள்? நம் ஊர் குப்பனும் சுப்பனும்தானே அதையும் பார்க்கிறார்கள்? அப்படி இருக்கும்பொழுது ஆங்கிலப் படத்தில் ஆபாசம் இருந்தால் அதை அனுமதிக்கலாம் தமிழில் மட்டும் கூடாதோ? 'ஃபிஸ்ட் ஆஃப் ஃப்யூரி' என்கிற ப்ரூஸ்லீ படத்தில் இல்லாத வன்முறைக் காட்சிகளா? அவற்றைப் பார்த்துவிட்டுமட்டும் வன்முறையில் ஈடுபாடு கொள்ள மாட்டார்களா?...

''பிராந்தியத் தணிக்கைக் குழு அதிகாரி திரு ராமகிருஷ்ணன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். சில உயரிய லட்சியங்களும், நாட்டின் பொதுவான நன்மையும் முக்கியமானவை என்று கருதுபவர்.

''படங்களில் வன்முறையையும் ஆபாசத்தையும் எதிர்த்து நாங்கள் செய்யும் தார்மீகப் பணியில் பத்திரிகைகளும், மக்கள் இயக்கமும் ஒத்துழைப்புத் தராத வரையில் எங்கள் பணி மிகக் கடினமான ஒன்று!'' என்கிறார் திரு ராமகிருஷ்ணன். இந்தியாவில் ஐம்பத்தேழு வகையான குற்றங்களுக்கு 'ஷோலே' படம் காரணமாயிருந்திருக்கிறதாம்! பல மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், பல குற்றங்களுக்கும் வன்முறைகளுக்கும் திரைப் படங்களில் காண்பிக்கப்படும் காட்சிகளே தூண்டுகோலாய் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

டைரக்டரும், தயாரிப்பாளரும், சென்ஸார் போர்டு சேர்மனும் ஆன திரு ரிஷிகேஷ் முகர்ஜி ஒரு நிகழ்ச்சி சொன்னார்:

ராஜ்பப்பர் என்கிற நடிகரை வெளிப்புறப் படப்பின்போது ஏராளமான சிறுவர்கள் சூழ்ந்துகொண்டு அவரிடம் கையெழுத்துக் கேட்டனர். அவரது நடிப்பைப் புகழ்ந்தனர். நடிகர் அந்தப் பள்ளிக்கூடச் சிறுவர்களைப் பார்த்து, 'என்னை எந்தப் படத்தில் பார்த்தீர்கள் நீங்கள்?' என்று கேட்டாராம். சிறுவர்கள் உடனே 'இன்ஸாஃப் கா தராசு'என்றார்கள்! இது ஒரு 'ஏ' படம். ராஜ்பப்பர் இதில் வில்லன்!

அமிதாப் பச்சனுக்குக் கடிதம்

சமீபத்தில் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றில் ஒரு தமிழ் நாட்டுப் பெண்மணி நீண்ட கடிதம் ஒன்று எழுதியிருந்தார். யாருக்குத் தெரியுமோ? அமிதாப் பச்சனுக்கு.

'ஒரு நாள் என் நாலு வயது மகன் மூன்று சக்கர சைக்கிளை ஓட்டிக் கொண்டு வீட்டை விட்டு வீதிக்கு வந்து விட்டான். எதிரே வருகிற காரை நோக்கி ஆவேசமாக இவனும் தன் சைக்கிளை ஓட்டினான். நான் பதறிப் போய் ஓடிப் பிடித்து அவனைச் சைக்கிளோடு இழுத்துக் கொண்டேன். 'என்னை ஏன் நிறுத்தினாய்? நானும் அமிதாப் பச்சன்மாதிரி எதிரே வந்த அந்தக் காரை அப்படியே எகிறித் தாண்டிப் போயிருப்பேனே!' என்று என்னிடம் சண்டைக்கு வந்து விட்டான்! உங்கள் பையன் விஷயத்தில் மட்டும் நீங்கள் நடித்த படங்களில் எதை அவனுக்குக் காட்டலாம் என்று அறிய நீங்கள் மன இயல் நிபுணரை நாடி ஆலோசனை பெறுவதாகக் கேள்விப்பட்டேன். எங்கள் குழந்தைகளோ நீங்கள் நடிக்கும் எல்லாப் படங்களையும் பார்த்துவிட்டு, இது போன்ற முயற்சிகளில் இறங்குகிறார்களே ஐயா, அமிதாப்! என்ன செய்கிறீர்கள் நீங்கள், எங்கள் குழந்தைகளுக்கு?' என்று கேட்டிருக்கிறார் இந்தப் பெண்மணி.

இங்கிலாந்தில் நடைபெற்ற அகில உலக சென்ஸார் குழுவினர் மகாநாட்டில் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதை, ஒரு பதினாறு பக்க ரிப்போர்ட்டில் பம்பாய் சென்ஸார் போர்டு தலைவி, ஸ்ரீமதி அபர்ணா மொஹிலே தெரிவித்திருக்கிறார். வன்முறை, ஆபாசம் பற்றி இந்த மகாநாட்டில் இருபத்தெட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு இது

'திரைப் படங்கள் நிச்சயமாக மனித இயல்பை மாற்றும் சக்தி படைத்தவை. குறிப்பாக 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் இந்த மாற்றும் சக்திகளுக்கு இரையாகக் கூடியவர்களே!' என்கிறார் லண்டன் பல்கலைக் கழக மன இயல் பேராசிரியர் ஹெச். ஜே. ஐசன்க்.

போர்னோகிராபியில் நிறைய ஆராய்ச்சிகள் செய்துள்ள அறிஞர் டாக்டர் கச்சின்ஸ்கி, 'செக்ஸ்'ம், வன்முறையும் சேர்ந்த காட்சிகளைக் காணும் பல மக்களை இவை இக்குற்றங்களைச் செய்ய நிச்சயம் தூண்டும்' என்று கருத்துத் தெரிவிக்கிறார்.

சூப்பர் சென்ஸார்!

நம் இந்திய சென்ஸார் முறை பல நாடுகளிலிருக்கும் சென்ஸார் முறையை விட எத்தனையோ சீரானது, நியாயமானது என்பது இந்த மாநாட்டிலிருந்து தெரிய வருவதாக ஸ்ரீமதி மொஹிலே சொல்லுகிறார்: பாராளு மன்றம், பத்திரிகைகள், பிற அமைப்புக்கள் மூலமாக சமுதாயம் ஒரு சூப்பர் சென்ஸாராகச் செயல்பட்டு வருகிறது என்பதும் இவரது கருத்து.

பத்திரிகைகள், புத்தகங்கள், நாடகம் போன்ற பல்வேறு கலைகளுக்கு இல்லாத சென்ஸார் திரைக் கலைக்கு மட்டும் ஏன்? இதிலிருந்தே இந்தக் கலை மூலம் மக்களின் மனம் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவதை அகில உலகமும் உணர்ந்திருக்கிறது என்பது புரிகிறது. அதுவும் வளர்ந்து வரும் ஒரு நாட்டில் மக்களைத் தேச பக்தியும் உழைப்பார்வமும் லட்சியப் பிடிப்பும் உள்ளவர்களாகச் செய்து நாடு முன்னேற வழி வகுக்கலாம் அல்லது அவர்களைப் பகற் கனவு காண்பவர்களாகவோ, வன்முறையில் நாட்டம் உள்ளவர்களாகவோ உருவாக்கித் தேசத்தைச் சீரழிக்கவும் செய்யலாம்.

மக்களுக்குப் பிடித்ததை மட்டும் தராமல் மக்களுக்கு எது பிடிக்க வேண்டுமோ அதையும் தருவது கடமை என்பதும்.


அமெரிக்கா போன்ற பொருளாதார முன்னேற்றமும் கல்வி வளர்ச்சியும் மிக்க நாட்டிலேயே வன்முறை, ஆபாசம் மலிந்த சினிமாக்களால் மக்களின் மனங்களில் ஏற்படும் பாதிப்பை எண்ணிப் பொறுப்பில் உள்ளவர்கள் கவலைப்படுகிறார்கள். எனில் புதிதாகச் சுதந்திரம் பெற்று வளர்ச்சி அடைந்து வரும் ஒரு நாட்டில் படிப்பறிவு அதிகமில்லாத மக்கள் சமூகத்தைக் கொண்ட தேசத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதும்.

கலைகளின் வளர்ச்சிக்குச் சுதந்திரம் தேவை எனினும், அவற்றைப் பொறுப்புணர்வோடு பிரயோகிக்க வேண்டும் என்பதும்.

நமது படாதிபதிகளுக்குத் தெரியாதவை அல்ல.

ஆனால் வியாபார நோக்கத்துக்கும் தேச நலனுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் லாப நோக்கு வெற்றி பெற்று விடுகிறதே!

- சாருகேசி



"காங்கோ நாட்டு நீக்ரோ அழகியின் காபரே டான்ஸிலே ஒரே கலாட்டாவாமே?"

"ஆமாம், கடைசில பாத்தா அவ நம்ம கூடுவாஞ்சேரி அஞ்சலை தானும்! அதான் ஒரே கலாட்டா...!" - பிரகாஷ் முரளி

உங்கள் நண்பரைச் சற்றுக் குழப்புங்களேன்!

உங்கள் நண்பரை அழைத்து அவரின் பிறந்த மாதத்தின் எண்ணை 100ஆல் பெருக்கச் சொல்லுங்கள். பெருக்குத் தொகையுடன் அவர் பிறந்த தேதியைக் கூட்டச் சொல்லுங்கள். கூட்டி வரும் எண்ணை இரண்டால் பெருக்கச் சொல்லுங்கள். விடையுடன் 4ஐக் கூட்டி 5ஆல் பெருக்கச் சொல்லுங்கள். வரும் விடையுடன் 8ஐக் கூட்டி 10ஆல் மீண்டும் பெருக்கச் செய்யுங்கள்.


நண்பர் உங்களை முறைக்கலாம்! பரவாயில்லை. தொடர்ந்து மீண்டும் ஒரு 8ஐக் கூட்டச் சொல்லுங்கள். இவ்வளவுக்கும் பிறகு அவர் குழம்பாமல் இருந்தால் ஆச்சரியமே! விடாதீர்கள் அவரை! கடைசி விடையுடன் அவர் வயதையும் கூட்டச் சொல்லி வரும் எண்ணை உங்களிடம் தெரிவிக்கச் சொல்லி அந்த எண்ணிலிருந்து நொடியில் நீங்கள் அவரின் வயது, பிறந்த தேதி, மாதம் ஆகியவற்றைக் கூறுகையில் அவர் மகிழ்ந்து, பிரமிப்பார்! நீங்கள் எவ்வாறு நொடியில் அவரை மகிழ்விப்பீர்கள்? யூகியுங்கள் பார்க்கலாம்!

விடை 14 ம் பக்கம்

— எம். அண்ணாமலை




இந்திய-அமெரிக்க உறவு


கள்ளச் சாராயம் ஒழிந்ததும் மது விலக்கை அமுல்படுத்தியே தீருவேன்!
மது விலக்கு வரவே வராதுன்னு மட்டைக்கு ரெண்டு கீத்தாகச் சொல்லிப் போட்டாரு, வாத்யாரு!
சாராய ஊழல்! சாராய ஊழல்!
சாராய ஊழல்! சாராய ஊழல்!

கஷ்டம் போதாதா? நஷ்டம் வேறு?

எஸ்.டி.ஸி. என்று செல்லமாக அழைக்கப்படும் அரசு வர்த்தக கார்ப்பரேஷன், பத்திரிகைக் காகிதம் இறக்குமதி செய்யக் கடைப்பிடிக்கும் முறைகள் பற்றி ஓர் ஆய்வு நடைபெற்றுள்ளது. அபிடிபி கார்ப்பரேஷன் என்ற அமெரிக்க நிறுவனம் நடத்திய இந்த ஆய்வுப்படி நமது எஸ். டி. ஸி. 100 டன் காகிதம் தருவித்தால் அதில் 12 டன் சரியானபடி கையாளப்படாததால் அச்சகங்களை அடையுமுன்னரே பாழாகிவிடுகின்றன! இந்த நஷ்டத்தை ஈடுகட்ட எஸ்.டி. ஸி. இங்கு பத்திரிகைக் காகிதத்தின் விலையை உயர்த்துகிறது. இதோடு போயிற்று? காகிதம் தருவிக்கக் கப்பல்களை வாடகை பேசும் விதம் சரியில்லாததாலும் ஏகப்பட்ட பணம் விரயமாகிறது. இதனாலும் விலை கூடுகிறது.

எஸ். டி. ஸி. தான் தருவிக்கும் காகிதத்தை இங்கு அதன் கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. பத்திரிகைகள் தங்களுக்குரிய காகிதத்தைக் கப்பலிலிருந்து நேரே தங்கள் கிடங்குக்கு எடுத்துச் சென்றால் ஒரு விலை; எஸ். டி. ஸி. கிடங்கிலிருந்து எடுத்தால் கிடங்கு வாடகையும் தரவேண்டும் என்பதால் கூடுதல் விலை என்று முன்பு இருந்தது. இப்போது இரண்டையும் அதிகபட்ச விலையில் கிட்டத்தட்ட சமமாக்கிவிட்டது எஸ். டி. ஸி.! கிடங்கிலிருந்து எடுத்தால் சுங்க வரி, மாநில அரசின் விற்பனை வரி ஆகியன வேறு. போதாக் குறைக்கு மத்திய அரசின் 15 சதம் இறக்குமதி வரி இருக்கவே இருக்கிறது!

பத்திரிகைக் காகிதத்தின் விலையை இந்தியாவில் எஸ்.டி.ஸி. எந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறது என்பது வஸந்த்-கணேஷினால் கூடக் கண்டுபிடிக்க முடியாத மிகப் பெரிய மர்மம்! சர்வதேச விலைக்கும் இந்தியாவில் அதன் விலைக்கும் சம்பந்தமே இல்லை.

நம் நாட்டில் அச்சாகும் ஒரு பெரிய தேசிய நாளிதழ் நேரடியாகப் பத்திரிகைக் காகிதம் தருவித்தால் ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் மிச்சமாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதிலிருந்தே தேசம் முழுவதிலும் உள்ள பத்திரிகைகளுக்கு எஸ்.டி. ஸி. மட்டுமே காகிதம் இறக்குமதி செய்து தரும் என்ற பிடிவாதக் கொள்கையால் தேசத்துக்கு எத்தனை அந்நியச் செலாவணி நஷ்டமாகிறது என்பதை யாரும் உணர்ந்து மலைக்கலாம், திகைக்கலாம்!

உள்நாட்டில் தயாராகும் பத்திரிகைக் காகிதத்தின் விலையும் அதிகம்; தரமானதாகவும் இல்லை. இதனால் அச்சு இயந்திரங்கள் பாழாகின்றன என்பதுடன் காகிதத்தின் கனம் காரணமாகக் குறிப்பிட்ட எடையுள்ள காகிதத்துக்குக் குறைந்த எண்ணிக்கையில்தான் பத்திரிகைப் பிரதிகள் கிடைக்கின்றன. சிறப்பாகக் காகிதம் உற்பத்தி செய்யத் தேவையான மூலப் பொருளே நம் தேசத்தில் இல்லாதபோது எதற்கு இந்த வீண் முயற்சி? பத்திரிகைகளுக்கு அயல்நாட்டுக் காகித ஒதுக்கீட்டைக் குறைத்து உள்நாட்டுக் காகித ஒதுக்கீட்டை 50 சதமாக உயர்த்த அரசு உத்தேசித்திருப்பது கலவர நிலையைத் தோற்றுவித்துள்ளது.

பத்திரிகைக் காகிதப் பிரச்னை மண்டை இடி என்றால் அரசைத் தாக்கி எழுதும் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்களை நிறுத்துவது போன்ற சில்லறைத் தலைவலிகள் வேறு! அப்படியே விளம்பரம் தந்தாலும் பத்திரிகையின் விளம்பர விகிதத்தை லட்சியம் செய்யாமல் அரசு தானே ஒரு விளம்பர விகிதத்தை நிர்ணயிக்கிறது!

அரசாங்கத்தின் இத்தகைய போக்குகளெல்லாம் குறைந்த செலவில் மக்கள் செய்திகளை அறிய முடியாமல் தடுப்பதால் இவை பத்திரிகைச் சுதந்திரத்தையும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதிப்பவை.

ஜனநாயக நோக்கிலும் சரி, பொருளாதார நோக்கிலும் சரி, பத்திரிகைத் துறையை அரசு சுற்றி வளைத்துக் கட்டுப்படுத்துகிற இந்தக் கொள்கைகள் நல்லதல்ல.

கல்கி
1982 ஜூலை 25
துந்துபி ஆடி 9
மலர்: 40 இதழ்: 52

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடீ பாப்பா -பாரதியார்





சாதூரணா

'லக்ஷ்மி'

ஞாயிற்றுக் கிழமை காலை பத்திரிகையில் வீடு மனை விற்பனைப் பகுதியில் அவள் கொடுத்த விளம்பரம் வந்து விட்டிருந்தது. பத்திரிகையை ஆவலுடன் சந்தியா புரட்டினாள்.

'பெரிய தோட்டத்துக்குள் அமைந்த இரண்டு கட்டு வீடு விற்பனைக்குத் தயாராக உள்ளது. புரோக்கர் உதவி இன்றி வீட்டுச் சொந்தக்காரருடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டு கிரயத்தைப் பேசிமுடிக்கலாம். முகவரி: செல்வி சந்தியா, 'நந்தவனம் வீடு', காவேரிப்பாக்கம், திருச்சி மாவட்டம்.'

வாங்கப் போகிறவர்கள் அப்படி ஒன்றும் கியூவில் வந்து குவியப் போகிறதில்லை. வருகிற சிலருக்கு அத்தை வீட்டைச் சுற்றிக்காட்டி அலுத்துப் போக நேரும் என்று முன்னதாக அவள் தன் வேலையிலிருந்து ஒரு வார காலத்துக்கு விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள்.

கட்டாயம் அன்று மாலையே அத்தான் குமரேசன் அலறிப் புடைத்துக் கொண்டு வந்து நிற்பார் என்று எண்ணிய மாத்திரம் அவள் சிரித்து விட்டாள்.

''கொஞ்சம் எனக்கும் சொல்லிவிட்டுத்தான் சிரியேன்.'' அத்தை ஜகதா சமையலறையிலிருந்து எரிச்சலுடன் எட்டிப் பார்த்தாள்.

''நம் வீட்டு விற்பனை பேப்பரில் வந்திருக்கு அத்தை'' என்றாள் சந்தியா.

ஜகதாவின் முகத்தை இருள் கப்பிக் கொண்டது. நெஞ்சை என்னவோ அடைப்பது



மனிதன்

போன்றவேதனை. கண் இமைகளைச் சுட்ட நீரைச் சமாளித்துக் கொண்டு மெல்ல கூடத்துக்கு வந்தாள்.

''இந்த வீட்டை வித்து அப்படி நமக்கு என்ன தான் கிடைக்கும்னு நினைக்கிறே?'' ஏளனமும் எரிச்சலுமாகக் கேட்டாள்.

''தோட்டமே கிட்டத்தட்ட இரண்டு ஏக்கருக்குப் பரவிக் கிடக்கு. கல் கோட்டை போல வீடு.... ஒரு லட்சத்துக்கு மேலே கணிசமாக் கிடைக்கும் அத்தை.''

''வீடு பூதலூரிலிருந்தா ஒருவேளை அத்தனை பணம் கிடைக்கும். இது சின்னக் கிராமமாச்சே!''

''யார் சொன்னா? விரைவில் இங்கே ஒரு ஹைஸ்கூல் வரப்போகிறது. ஒரு மருத்துவமனை கட்டப் போறாங்க. காவிரித் தண்ணி குழாயில் கொட்டுது. மின் விளக்கு வசதி இருக்கு. கொஞ்ச நாளில் இந்த ஊர் பூதலூரை மிஞ்சிவிடும். அதனாலே இந்த வீட்டுக்கு நல்ல விலை கிடைக்கும்னு நான் எதிர்பார்க்கிறேன்....'' தெம்பாகப் பேசினான் சந்தியா.

அத்தை மௌனமாகக் கூடத்துச் சுவரில் தொங்கிய தன் அண்ணன் படத்தை வெறித்தாள்.

அவர் மட்டும் உயிருடன் இருந்தால்... நந்தவனம் வீடு விற்பனைக்கு நிற்கிறது என்ற விஷயம் அச்சில் ஏறியிருக்குமா?... பெருமூச்சுடன் காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்றுவிட்டாள்.

சந்தியா எதிர்பார்த்தபடியே அத்தான் குமரேசன் தெருப் புழுதியைப் பரக்க விட்ட வண்ணம் ஒரு கறுப்புப் பியட்டில் சிறிது பொழுதில் வந்து இறங்கினார். அவர் தனியாக வரவில்லை. எண்ணெய் வழிந்த முகத்துடன் நடுத்தர வயதைத் தாண்டியவர், பழுப்புநிற வேட்டிக்காரர் ஒருவருடன் வந்திருந்தார். காலைப் பத்திரிகையைப் பார்த்ததுமே கிளம்பி விட்டிருக்கிறார் ஆத்திரக்கார மனிதன்!

''சந்தியா! என்னம்மா ஒரு வார்த்தை என்கிட்டச் சொல்லாம நீயே பெரிய விஷயத்தைஎடுத்துச் சமாளிக்கப் பார்க்கிறே? பரவாயில்லை.... இவர் டவுன்லே வெத்தலை மண்டி வச்சிருக்கார். இவர் மகன் பார்மஸி படிச்சவன் இங்கே ஒரு மருந்துக் கடை வைக்க ஆசைப் படறான். அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் ஒரு நல்ல வீடு தேவைப் படுகிறது. விளம்பரத்தைப் பார்த்ததும் காரை எடுத்துக் கொண்டு என்கிட்ட ஓடி வந்தார்.''

சந்தியாவுக்கு நன்றாகவே புரிந்தது.— வீட்டை விற்கும் பணியில் அவள் மூலம் தனக்குக் கமிஷன் கிடைக்கா விட்டாலும் வாங்குகிறவர் தலையைத் தடவி தட்சணை பெற்றுக் கொள்ள முடியும் என்கிற தைரியத்தில் அந்த வெற்றிலை மண்டிக்காரரை விடிந்ததும் தள்ளிக் கொண்டு வந்திருக்கிறார் குமரேசன்!

''யார் வாங்கினால் எனக்கென்ன அத்தான்? நான் கேட்கும் தொகையைக் கொடுத்துட்டு எனது நிபந்தனைக்கு உட்பட்டால் சரி.''

''என்ன தொகை எதிர்பார்க்கிறே? நிபந்தனைகள் என்னவோ?'' தோள் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு பரபரத்தார் குமரேசன்.

வந்தவர் கூடத்திலே தொங்கிய ஊஞ்சலை வியப்புடன் பார்த்தார். பல நாள் உபயோகத்திலே பளபளத்த அந்தத் தேக்கு மர ஊஞ்சல் அவர் ஆசைகளை அப்படியே தேக்கிக் கொண்டு விட்டது.

''இந்த ஊஞ்சலையும் வீட்டோடு சேர்த்து எடுத்துக்கலாம் இல்லையா?'' ஆவலுடன் கேட்டார்.

''ஆமாம்! அதை எடுத்துக் கொண்டு நாங்க எங்கே போகப் போறோம். விரும்பினால் மேஜை, நாற்காலி இதுகளுக்கும் ஒரு விலை போட்டு எடுத்துக்கலாம்.''

''வீட்டுக்கும் தோட்டத்துக்கும் லக்ஷத்து இருபதாயிரம் கொடுத்திடணும். மத்த மத்த சாமான்களுக்குத் தனி விலை. அத் தோட எங்க வீட்டுப் பசுங் கன்னுக் குட்டியையும் நாய் ஒன்றையும் வீட்டை வாங்குகிறவர்கள் கடைசிவரை வைத்துக் காப்பாத்தணும்... வீட்டை வாங்கின பிறகு அவைகளை வேறே இடத்துக்கு அனுப்பினால் நான் ஒப்புக்க மாட்டேன். கிரயப் பத்திரத்தில் இந்த நிபந்தனையைச் சேர்த்துத்தான் எழுதப் போறேன்.''

விலையையும் நிபந்தனையையும் கேட்டதும் வெற்றிலை மண்டிக்காரருக்கு வியர்த்துக் கொட்டி விட்டது. ''வாங்க போகலாம், ஏதோ அஞ்சு ரூபாயிலே முடிச்சுத் தரேன்னு ஆசை காட்டி அழைச்சுக்கிட்டு வந்தீங்க, பெட்ரோல்தான் தண்டமாச்சு...'' அழாக் குரலில் குமரேசனை அதட்டிவிட்டு அவர் புறப்பட்டு விட்டார்.

அத்தையை ஜாடை காட்டித் தாழ்வாரத்தின் பக்கம் அழைத்தார் குமரேசன்.

''இந்தப் பொண்ணுக்குப் புத்தி சொல்லுங்க. கனையா ஐம்பதாயிரத்தை இப்பவே கட்டாகக் கூடத்து ஊஞ்சல் மேலே வைக்கச் சொல்றேன். பிறகு ரிஜிஸ்டிரேஷன் இத்யாதிகளைப் பாத்துக்கலாம்....வேறே இடம் கிடைக்கிற வரை நீங்கள் இருவரும் இங்கேயே தங்கலாம் என்று ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்.''

ஜகதாவுக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது. அரை விலைக்கு வித்துக் கொடுக்கிறானாம். அக்கிரமக்காரன்! இவன் சந்தியாவின் அக்கா புருஷன் — வீட்டுக்கு மாப்பிள்ளை என்ற உறவு வேறே? சமயத்துக்கு நம்பினவங்களைக் குழி பறித்து இறக்கிவிட அஞ்சாத நயவஞ்சகன்!

''குமரேசு! வீடு சந்தியாவுடையது. நான் என்ன பேச முடியும்?'' — கண்டிப்பாகப் பதிலளித்தாள்.

விர்ரென்று கோபத்துடன் வந்தவருடன் புறப்பட்டு விட்டார் குமரேசன்.

''அத்தானுக்கு இந்த ரோஷம் கொஞ்ச நேரத்துக்குத்தான். இன்னொரு ஏமாந்தவன் கிடைச்சால் வெட்கத்தை விழுங்கி விட்டு அழைச்சுக் கொண்டு ஓடி வருவார் என்கிற நினைப்பில் தனக்குள்ளே லேசாகச் சிரித்துக் கொண்டு கதவைத் தாளிட்டாள்.

குமரேசன் முயற்சியை விடவில்லை. தினமும் ஒரு காரில் ஒரு புது ஆளுடன் வந்து இறங்கினார். தொண்டை கிழியப் பேரம் பேசினார்.

விடாப் பிடியாக விலையிலும் நிபந்தனைகளிலும் சந்தியா உறுதியாக இருந்ததைக் காண அவருக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.


''இந்த ஜன்மத்தில் இந்த வீட்டை உன்னால் விற்க முடியாது. பந்தயம் கட்டறியா?'' என்று ஆவேசத்துடன் கத்திவிட்டு மார்பைத் தட்டிக் கொண்டு உத்தரீயத்தை உதறிப் போட்டுக் கொண்டு போனவர் பின்னர் வரவேயில்லை.

வேறு சிலர் தனிப்பட்ட முறையில் வந்து போனார்கள். சிலருக்கு விலை அதிகமாகப் பட்டது. சிலருக்கு அவளது நிபந்தனைகள் எரிச்சலை ஊட்டின.

அத்தைக்கு ஒரு வழியில் மனத்தில் திருப்திதான். சந்தியா எடுத்துக் கொண்ட காரியங்களைச் செவ்வனே முடிப்பதில் சாமர்த்தியக்காரிதான். ஆனால் வீடு விற்கும் முயற்சியில் அவளது ஜம்பம் பலிக்கவில்லை. வீடு விற்காதவரை நிம்மதிதானே... அத்தைவாளா இருந்தாள்.


வியாழக் கிழமை காலை. வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டது. ஸாம்சனின் அட்டகாசமான குரைப்பும் தொடரவே ஆவ

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோ இளைஞராக இருந்தபொழுது வரைந்த ஓவியங்கள் புரியும்படி இருந்தன. நாள் செல்லச் செல்ல அவர் வரைந்த ஓவியங்கள் புரியாத மர்மங்களாய் இருந்தன. பிக்காஸோவின் நண்பர் இளைஞர்கள் முதன் முதலாக ஓவியம் வரையும்போது அவர்கள் வரைவது ஒன்றுமே புரியாது. அவர்கள் வரைந்து பழகிய பிறகு புனையும் ஓவியங்கள் அழகாக இருக்கும். ஆனால் ''உங்களைப் பொறுத்த மட்டில் இது நேர் மாறாக உள்ளதே!'' என்றார். அதற்கு வயது முதிர்ந்த பிக்காஸோ ''நான் இப்பொழுது மீண்டும் இளமையை அடைந்து கொண்டிருக்கிறேன். எனவே இளைஞனாகிய நான் வரையும் ஓவியங்கள் புரியாது'' என்றார். - சொர்ணலதா வேதியன்




திரையுலகின் நட்சத்திரக் கூரை

''ராம்கோ'' — எழில்மிகு
திரையரங்குகளுக்கு.
''ராம்கோ'' சிக்கனத்திற்கும்,
சீரிய தரத்திற்கும், நீடித்து
நிற்கும் தன்மைக்கும்.



பெரும் பொருட்செலவில், பொலிவுடன் கட்டப்படும் திரையரங்குகளுக்கு உன்னத பாதுகாப்பளிப்பது — "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளே. "ராம்கோ" முத்திரைக்கு மேன்மேலும் புகழ் சேர்ப்பது, அதிநவீன தொழில் நுட்பமும், மிகக் கடுமையான தரக்கட்டுப்பாடுமே. "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் நிரந்தரப் பாதுகாப்பைத் தருவதன் இரகசியமும் இதுவே.

நாடெங்கிலும் உள்ள கட்டிடக்கலை வல்லுநர்களின் அபிமானத்தைப் பெற்றது "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளே.



Ramco

''ராம்கோ'' அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளும் மற்ற உபகரணங்களும்— தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல நிரந்தரமான பாதுகாப்புக்கும்கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை, சென்னை-600 002. போன் : 82006
பரிபூரண விற்பனையாளர்கள் : ராஜா சாரிடி டிரஸ்ட்
அலுவலகங்கள் : பெங்களூர் ● எர்ணாகுளம் ● ஹைதராபாத் ● பூனா ● விஜயவாடா
தொழிற்சாலைகள் : அரக்கோணம் (தமிழ் நாடு), கரூர் (கர்நாடகம்)

CAS-SACL-4-82.TAM A

னுடன் வெளியே எட்டிப் பார்த்தாள் சந்தியா.

கிரிதரன் கேட்டைத் திறந்து கொண்டு வேகமாக உள்ளே வருவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

''வீடு விற்பனைக்கு இருப்பதைப் பற்றி விளம்பரம் பார்த்தேன். இன்னமும் யாருக்கும் இதை விற்கவில்லை என்று மாரப்பன் சொன்னான்....''

''ஓ!'' என்றாள் சந்தியா. மேலே பேசத் தோன்றாது.

அத்தை ஜகதா பதை பதைப்புடன் சமையலறைக் கதவின் மூலையில் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''வீட்டை எனக்கு விற்பதில் ஆட்சேபனை ஏதும் இல்லையே?'' — புன்முறுவலித்தான் கிரிதரன்.

''விலையும் நிபந்தனையும் ஒத்துப்போனால் என்ன ஆட்சேபனை?''

கோபமும் பரவசமுமான உணர்வு நெஞ்சை இறுக்க நெற்றியில் வியர்வை பொடிக்க — உடல் நடுங்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நிபந்தனைகளைப் பற்றியும் விலையைப் பற்றியும் கேள்விப்பட்டேன். மாரப்பன் தினமும் வந்து தகவல் கொடுத்துக் கொண்டிருந்தான். நீங்க கேட்கும் லக்ஷத்து இருபதாயிரத்தைக் கொடுத்து வீட்டை வாங்க நான் தயார்'' என்றான்.

உதட்டை அழுந்திக் கடித்துக் கொண்டாள் சந்தியா. அவளால் பேசவே முடியவில்லை.

''இந்த ஊரிலேயே ஒரு பெரிய கிளினிக்கைத் திறக்க ஆசைப்படுகிறேன். அதற்கு இந்த வீடு சௌகரியமாக இருக்கும். கொஞ்சம் சீர்திருத்தம் செய்து கொண்டால் போதும். — தோட்டத்தை ஒரு முறை நன்றாகப் பார்க்க விரும்புகிறேன். சுற்றிக் காண்பிக்க மறுப்பு உண்டா?''

இதுவரை வீட்டை வாங்க வந்தவர்களுக்கெல்லாம் வீட்டைச் சுற்றிக் காட்டிக் கால் ஓய்ந்து விட்டிருந்தாள். ஆனாலும் எப்படி மறுக்க முடியும்? ''அதற்கென்ன... வாங்க... வந்து பாருங்க...''சொல்லியபடி முன்னால் நடந்தாள்.

''இங்கே நின்று பார்த்தால் போதும்.'' சிரித்தபடி அந்த மல்லிகைக் கொடி பந்தல் அருகே வந்து நின்று கொண்டான் கிரிதரன். மொட்டவிழ்த்துத் தென்றலில் சிரித்துக் கொண்டிருந்த பூக்கள் சிலவற்றைக் கிள்ளி எடுத்தான்.

''வீட்டை வாங்க முதலில் இருபதாயிரம் ரொக்கமாகக் கொடுத்து விடறேன். என் தாயார் என் வருங்கால மனைவிக்காக விட்டுப்போன நகைகள் சிலவற்றை விற்றுத்தான் அந்தப் பணத்தைப் புரட்டப் போகிறேன். — மீதியை சில வாரங்களில் என் சகோதரி மகன் மூலம் கடன் வாங்கிக்கட்டி விடுகிறேன். நிபந்தனைப்படி லாம்சனையும் கன்றுக்குட்டியையும் நான் கடைசி வரை காப்பாத்த ஒப்புக்கொள்கிறேன்.''

''மிக்க நன்றி'' என்றாள் மெல்லிய குரலில் சந்தியா.

''ஆனால் ஒரே ஒரு நிபந்தனைக்கு நீங்கள் கட்டுப்பட்டால்தான் வீட்டை நான் வாங்க இயலும்.''

திடுக்கிட்டு அவள் நிமிர்ந்தாள்.

கையில் வைத்திருந்த அத்தனை மலர்களையும் அவளிடம் நீட்டினான்.

''ஞாபகமிருக்கா?... இந்தக் கொடியில் இருந்த மல்லிகையைப் பறித்துக் கொடுத்தேன். இதன் பெயரைக் கோயில் அர்ச்சகர் சொன்னார் என்று குறிப்பிட்டபோதே நான் இந்தப் பூவின் பெயருடையவளால் பாதிக்கப்பட்டு விட்டேன். — உன் மனத்தைப் புரிஞ்சு கொள்ள முடியவில்லை. தாய் போல என்னை வளர்த்து ஆளாக்கின என் சகோதரி கிட்ட என் ஆசையைச் சொல்லி அனுமதி வாங்க வேண்டியிருந்தது. பெண்ணைப் பார்க்காமலேயே நான் சொன்னதைக் கொண்டு அவங்க ஒப்புதல் கொடுத்துவிட்டாங்க. ஆனால் பெண்ணுக்குப் பையனைப் பிடிச்சிருக்கோ இல்லையோன்னு தெரியலை— அதனால்தான் இந்த நிபந்தனை. என்னை இந்த வீட்டுக்குடையவள் கல்யாணம் செய்துக்க ஒப்புக்கொண்டால் இந்த வீட்டை அவள் கேட்ட தொகைக்கு வாங்கி நிபந்தனைக்கும் கட்டுப்படுவேன்....'' உல்லாசமாகச் சிரித்தான்.

தாங்க முடியாத மகிழ்ச்சியில் சந்தியாவுக்கு அழுகை வந்து விட்டது. அவளது கைகளில் மலர்களை வைத்து மெல்லக் கைகளையும் சேர்த்து அவன் பிடித்துக்கொண்டிருப்பதைக்கூட உணராது ஆனந்தக் கண்ணீரைக் கன்னங்களில் ஓடவிட்டு முகம் சிவந்து... நெஞ்சு பதற... தடுமாறிக் கொண்டு நின்றாள்.

''பதில் சொல்லலையே?'' அவன் கைகளைக் குலுக்கியபோது திடுக்கிட்டுப் போனாள்.

''ஒப்புக்கொண்டால் ஒழிய விட மாட்டேன்'' என்று அவன் கொஞ்சியபோது, இன்பப் பரவசத்தின் புதுமையில் அவளால் பேச முடியவில்லை. தலையை மென்மையாக அசைத்துக் கைகளை விடுவித்துக் கொண்டாள்.

பின்னால் காலடிச்சப்தம் கேட்க இருவரும் திகைப்புடன் திரும்பினர்.

''தம்பி! காப்பி பலகாரம் சாப்பிடலாமே... உனக்குப் பிடிச்ச குழாய்ப் புட்டு செய்திருக்கேன்....'' ஜகதா மகிழ்ச்சியுடன் புன்னகைத்தாள்.

''அத்தையம்மா! உங்க கிட்டேயும் அனுமதி தேவை. உங்க அண்ணன் மகள் சந்தியாவை நான் கட்டிக்க விரும்பறேன். உங்களுக்குச் சம்மதம்தானே? ஒரு நல்ல நாள் பார்த்து அலவாடீஸ்வரருக்கு அர்ச்சனை செய்துவிட்டு வந்து பெண் கேட்கத் திட்டமிட்டிருந்தேன். அதற்குள் இங்கே ரொம்பக் கலாட்டா நடந்து விட்டது....'' சிரித்தான்.

''வீட்டை விற்கும் முயற்சியில் வெற்றி பெற வேண்டி அவளும் ஈஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யப் போயிருந்தாளே?''

''கடவுள் இருவருடைய வேண்டுகோளுக்கும் அருள் பாலித்து விட்டிருக்கிறார்.''

வீட்டை நான் வாங்கப் போறேன். சந்தியா என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறு.. எங்களோட நீங்க காலம் முழுவதும் இருக்கப் போறீங்க. அட மறந்துட்டேனே ஸாம்சனும் கன்னுக்குட்டியும் எப்போதும் நம்மோட இருக்கும். நிபந்தனைப்படி... சரிதானே...'' மறுபடியும் உரத்த குரலில் சிரித்தான்.

''உனக்கு ரொம்பப் பொறுமை — நிதானம் — இவளுக்கு அவசரம் ஆத்திரம்!'' ஜகதா புன்முறுவலித்தாள்.

''மாறுபட்ட குணங்கள் இருப்பதால் தான் இந்த ஈர்ப்பு. நீங்க பார்க்கப் போறீங்க இவளது ஆத்திரம் அவசரம் எல்லாம் என் பொறுமைக்கு முன் பொடியாகிடும்... என் நிதானம் இவளது பரபரப்பில் துரிதப் படும். ஒருவருக்கொருவர் உறுதுணையாக இணைந்து இனிமையாக வாழப் போகிறோம். அக்கா வந்து அடுத்த வாரம் முறைப்படி பெண் கேட்டு ஆவன செய்வாங்க.... சந்தியா உள்ளே வா... குழாய்ப் புட்டு சாப்பிடுவோம்'' என்றான் மகிழ்ச்சியுடன்.

அவர்கள் திருமணம் அனலாமல்வரர் கல்யாண மண்டபத்தில் எளிய முறையில் நடக்க ஏற்பாடாகி யிருந்தது. எல்லோரும் வந்து மண்டபத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

''அங்க பாருங்க. என் பள்ளிக்கூடத்து தலைவிகூட கல்யாணத்துக்கு வந்திருக்காங்க. இனி அவங்க வாயைத் திறக்கமாட்டாங்க'' மணமேடையில் இருந்த சந்தியா மெல்லிய குரலில் ஸ்ரீதரனிடம் சொல்லிச் சிரித்தாள்.

''ஸ்!... இப்போ நீ கல்யாணப் பெண். மணமேடையில் தலையைக் குனிந்துகொண்டு மௌனமாக இருக்கணும்.'' கேலியாகச் சொன்னான் அவன்.

''அது அந்தக் காலம். இப்போ பாரது நூற்றாண்டு. மண மேடையானாலும் சரி, வெளி உலகமானாலும் சரி... 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால் செம்மைமாதர் திறம்புவதில்லையாம்.' என்று சொல்கிற புதுமைப் பெண் யுகம்.''

''இங்கேயும் ஆரம்பிச்சுட்டியா?'' லேசாகச் சிரித்தான் ஸ்ரீதரன்.

''இந்தாங்க இதை வாங்கிக்கோங்கோ.'' புரோகிதரின் குரல் அவனை ஈர்த்தது.

அவர் நீட்டிய தட்டிலிருந்த மாங்கல்ய நாணை எடுத்தான்.

''கெட்டி மேளம்..கெட்டி மேளம்..'' அத்தான் குமரேசன் குரல் கொடுக்க மந்திர கோஷம் ஓங்கி ஒலிக்க மேளம் அதிர — பெரியோர்கள் மலர் தூவ... மகிழ்ச்சியுடன் நிமிர்ந்து உட்கார்ந்திருந்த சந்தியாவின் கழுத்திலே தாலியைக் கட்டி மூன்று முடிச்சுகளை வேகமாகவே போட்டான் ஸ்ரீதரன்.

இருவர் பார்வைகளும் இன்பமாகக் கலக்க வருங்காலம் அவர்களுக்கு வெளிச்சமாக வெகு தூரம் தெரிந்தது.

(முற்றும்)



ராஜஸ்தான் மாநிலத்தில் இடாவா மாவட்டம் விதூனு என்ற தாலுக்காவைச் சேர்ந்த இரண்டு மேல்ஜாதி வாலிபர்கள் அப்பகுதி ஹரிஜன முதியவர்களைத்தம் தகப்பனார்களாக ரிஜிஸ்திரார் ஆபீஸில் முறையாகப் பதிவு செய்து சுவிகாரம்செய்துகொண்டிருக்கிறார்கள். மேற்படிப்புக்கு இடம் பிடிக்கவும், வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறவும் இந்த வழியைப் பல மேல்ஜாதிக்காரப் பிள்ளைகள் மேற்கொள்கிறார்களாம். கூடிய விரைவில் இதுபோன்ற சம்பவங்கள் நம் மாநிலத்தில் நடந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!



ரூர்க்கேலா எஃகுத் தொழிற்சாலையில் மெக்கானிக்காகப் பணி புரியும் பட்நாயக் என்ற வாலிபர் மோட்டார் இஞ்ஜினைப் பழுது பார்ப்பதில் தலை சிறந்த நிபுணர் என்ற பாராட்டைப் பெற்றிருக்கிறார். இவர் ஒரு பிறவிக் குருடர் என்பது குறிப்பிடத் தக்கது.

—எஸ். வெங்கடேசன்

மாதம் ஒரு புத்தகம்



சில மேடை நாடகங்களைப் போலத்தான் சொற்பொழிவும் என்று எண்ணத் தோன்றுகிறது — 'ஒளி படைத்த கண்ணினாய் வா! வா!' —புத்தகம் படிக்கிறபோது (கல்லூரிகளில் நிகழ்த்திய மேடைப் பேச்சின் தொகுப்பு). அதாவது பார்க்கும்போது, கேட்கும்போது கிடைக்கின்ற சுவை, படிக்கும்போது இல்லை தான்.

''நான் ஒன்று சொல்வேன்; தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்ற பீடிகையுடன் தப்பாக எடுத்துக் கொள்கிற மாதிரியே சிலர் கூறுவார்கள். அதே பாணி, கலைஞரின் பல சொற்பொழிவில் புலப்படுகிறது. (மனக் கண்ணில் அவர் குரலின் ஏற்ற இறக்கங்களுடன் கற்பனை செய்து பாருங்கள்!) உதாரணம்:

''இன்னும் சொல்லப் போனால் கடந்த 6 ஆண்டுகளாகத் தமிழகத்திலே புதிய கல்லூரிகளே உருவாகவில்லை. நான் இதைக் குறையாகச் சொல்வதாகக் கருதக் கூடாது. யாரையும் குற்றம் சாட்டுவதாக எண்ணக் கூடாது (1982)

''...நான் இங்கே பொறுப்பிலிருந்தால் தேவராஜ் அர்ஸைப் பின்பற்றி 51 சத விகிதத்தில் 15 சதவிகிதத்தை எல்லா ஜாதியிலும் உள்ள ஏழைகளுக்கு ஒதுக்கியிருப்பேன்.

ஐயோ, நான் முதல்வராக இல்லையே என்ற கவலையால் நான் இதைச் சொல்லவில்லை. இந்தக் காரியத்தை உங்களுக்குச் செய்யக் கூடிய இடத்தில் நான் இல்லையே என்ற வருத்தத்திலே சொல்லுகிறேன்.'' (ஆகஸ்ட் 1979)

வழக்கமான ஆரிய திராவிட இனப் பிரிவை எடுத்துக் கூறுகையில் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு சுவையான தகவலை வெளியிடுகிறார்:

''....பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வரலாற்றுப் பேராசிரியர் பெயரே பி. ஆர். சேஷ அய்யங்கார்.... அண்ணா போன்றவர்களைத் தங்களுடைய இளமைக் காலத்திலேயே திராவிட உணர்வு கொள்ளச் செய்கின்ற அளவுக்குப் பயிற்சியளித்த பி. ஆர். சேஷ அய்யங்கார் அவர்களை நாம் மறந்திட முடியாது.''

தமிழில் உள்ள ஆழ்ந்த அறிவு மட்டுமல்லாமல், இதிகாச புராணங்களில் புகுந்து ஆராயும் திறமையும் மு. க.வுக்கு உண்டு என்பது புலனாகிறது. பல சொற்பொழிவுகளில் இதிகாசத்திலிருந்து மேற்கோள்கள் காட்டியிருக்கிறார். தமிழின் சொல் வளம் பற்றிப் பேசுகிறபோது ஆங்கிலத்தில் உள்ள அளவு வளர்ச்சி இல்லையே என்று குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்:

''ஆக, பையன் படிக்கிற காலத்திலே இருந்துபாராளுமன்றம் வரையிலே பார்த்தால் சட்டம் என்கிற ஒரே சொல்லைத்தான் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆங்கிலத்திலே எத்தனை சொற்கள் மாறி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'லா' என்றும், 'பில்' என்றும், 'ஆக்ட்' என்றும் எத்தனை வார்த்தைகள்? இந்தக் குறையை நாம் நிவர்த்திக்க எல்லா விதமான முயற்சிகளையும் புதுவை மாநிலம் மாத்திரமல்ல —தமிழ்நாடு அரசும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டாக வேண்டும்.'' (1980)

சில உபன்யாசகர்கள் ஸ்டாக்காகச் சில குட்டிக் கதைகளை வைத்துக் கொண்டு எல்லா இடத்திலும் சொல்லுவார்கள். கலைஞரும் அதுபோலத்தான் போலிருக்கிறது. 'அத்தி மரம்' பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டு அலுப்புத் தட்ட வைத்திருக்கிறார்!

-தமயந்தி

'ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!' —கலைஞர் மு. கருணாநிதி, பாரதி பதிப்பகம், சென்னை-17. விலை: ரூ. 8—25. பிரசுரம்: ஜூன் '82.

உங்கள் நண்பரைச் சற்றுக் குழப்புங்களேன்!

விடை: நண்பர் உங்களிடம் கூறும் கடைசி எண்ணிலிருந்து 288ஐக் கழியுங்கள். கழித்து வரும் எண்ணின் கடைசி இரு இலக்கங்கள் அவரின் வயதாகும். அவற்றின் முன் இரு இலக்கங்கள் அவரின் பிறந்த தேதியாகும். தொடக்க (ஒரு அல்லது இரு) இலக்கம் அவர் பிறந்த மாதமாகும். எப்படி?





வி. ஈஸ்வரன்



கப்ரி



பரத்

வி. ஈசுவரன்

புதுதில்லி, சாகித்ய 'கலா பரிஷத் அண்மையில் ராமநாதபுரம் வி. ஈசுவரனுக்கு ரூ. 5,100 பரிசும் சரஸ்வதி சிலையும் சால்வையும் அளித்துக் கௌரவித்தது. ராமநாதபுரம் வி. ஈசுவரன் பிரபல வித்வான்கள் அனைவருக்கும் கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்திருக்கிறார். கர்நாடக இசைக் கல்லூரியிலும் அகில இந்திய ரேடியோவிலும் அரும்பணியாற்றியுள்ளார். வானொலியில் தாளவாத்திய கச்சேரியை அறிமுகப்படுத்தியவர் இவரே.

பரத்

'புதியதோர் உலகம் செய்வோம்' பரத் கதை வசனம் எழுதிய முதல் நாடகம். குறுகிய காலத்தில் சதம் போட்டதோடு சென்ற ஆண்டின் சிறந்த வசன கர்த்தா என்ற பட்டத்தையும் இந்நாடகம் பரத்திற்கு பெற்றுத் தந்தது. வரதட்சிணைக் கொடுமையினை இந்நாடகத்தில் சித்திரித்திருந்தார். 'நெஞ்சங்கள் வாழ்த்தட்டும்' என்ற இவரது இரண்டாவது நாடகமும் தற்போது சபாக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வேலைக்குப் போகும் பெண்களின் சில பிரச்னைகளை இந்நாடகம் அலசுகிறது.

-பி. ரங்கநாயகி

திருமதி காரியாலி



திருமதி காரியாலி

காஷ்மீரத்தைச் சேர்ந்த திருமதி காரியாலி தென்னாட்டைச் சேர்ந்த மனோ தத்துவ நிபுணர் திரு ராஜ்குமாரைக் காதலித்து மணந்து கொண்டிருக்கிறார். தலைநகரில் இந்தியன் கவுன்ஸில் பார் மெடிக்கல் ரிசர்ச்சில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அங்கே எம். டி. படித்துக் கொண்டிருந்த திரு ராஜ்குமாரைச் சந்தித்தார்.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சென்னை கலெக்டராக இருந்து வருகிறார் திருமதி காரியாலி. நேரம் கிடைக்கும்போது ஓவியம் கற்றுக் கொள்கிறார். இவருடைய மகள் பிரியதர்சினி பத்மா சுப்பிரமணியத்திடம் நடனம் கற்றுக் கொள்கிறாள். கலெக்டரின் மகளாக இருந்தாலும் பலநாட்கள் நடன வகுப்புக்கு சைக்கிளிலோ அல்லது பஸ்ஸிலோதான் செல்கிறாள். ''கலெக்டரின் மகள்என்பதால் அவள் தன்னை உயர்வாக எண்ணாமல், மற்றவர்களுடன் சமமாகப் பழக வேண்டும். அத்துடன் இந்த பெட்ரோல் விலையில் தினமும் அவளுக்குக் கார் அனுப்புவது கஷ்டம்'' என்று கூறுகிறார். மகன் சித்தார்த் செயின்ட் பீட்ஸ் பள்ளியில் இரண்டாம் வகுப்புப் படிக்கிறான்.

-கலாமூர்த்தி

சிறையில் பிறந்த முருக கானம்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் போது இரண்டரை ஆண்டுகள் கோவை சுப்ரி தடுப்புக் காவலில் இருந்தார். வேலூர், பின்னர் தஞ்சை சிறை. பாரதியைப் பின்பற்றிச் சில தேசியப் பாடல்கள் எழுதிய பிறகு தம்முடைய குல தெய்வமான முருகன்பால் மனம் ஈடுபட்டது. தஞ்சைச் சிறையில் பிறந்தவை அறுபது தமிழ்க் கீர்த்தனங்கள். 1953ல் எட்டணா விலையில் பிரசுரமான பாடல்களை இப்போது சுவரப்படுத்தி மீண்டும் வெளியிட்டுள்ளார் — எட்டு பாகங்களாக. டி. கே. ஜெயராமன், சீதா கோவிந்தசாமி, எம்பார் ராகவசிம்மன் ஆகியோர் ஸ்வரப்படுத்தி யிருக்கிறார்கள்.

இசை நிகழ்ச்சிகளில் 'சுப்ரி'யைப் பரப்புகிறவர்களில் முதலிடம் பெறுகிறவர் டி.கே. ஜெயராமன். வானொலியிலும் முழுக்க முழுக்க 'சுப்ரி'யின் பாடல்களை வைத்தே விமலா கிருஷ்ணமூர்த்தி கச்சேரி செய்திருக்கிறார்.

இந்த வரிசையில் இன்னும் வெளிவர இருப்பவை நான்கு தொகுதிகள்.

கையைக் குலுக்கி விடை தரும்போது முறுக்கிப் பார்க்கச் சொல்கிறார். முடியவில்லை. ''டி. எம். செய்கிறேன். அதுதான் இளமையின் சக்தி திரும்புகிறது'' என்று சிரிக்கிறார். வயது எண்பத்தைந்து!

-பெஸ்பால்

புள்ளிகள்-செய்திகள்



கல்கி அடுத்த இதழில்

சரணம் கணேசா!

சித்திரத் தொடர்
கதை : ரா. கணபதி
சித்திரம் : விநு



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1982
ரூபாய் ஆயிரம்
முதல் பரிசு
பெறும் கதை

இலவச இணைப்பு

சிவசங்கரி எழுதும்
முழுநீள நாவல்

நட்பு

மறக்காமல் கேட்டு வாங்குங்கள்!

குடும்பம் ஒரு கதம்பம்



நமது இல்லங்களில் அவ்வப்போது எழும் பிரச்னைகளை
வாராவாரம் அலசுகிறார்
மஞ்சுளா ரமேஷ்



சுஜாதா
விடிவதற்குள் வா!
ஆகஸ்டு 1 ஆண்டு மலரில்
ஆரம்பம்

ஒரே முத்தம்!

தேவிபாலா

1

> **மூத்தவர் சம்மதியில் — வதுவை**
> **முறைகள் பின்பு செய்வோம்**
> **காத்திருப் பேனோடி? இது பார்**
> **கன்னத்து முத்தமொன்று....**
> **— பாரதியார்**

செருப்பை அழுத்தித் தரையில் தேய்த்து விட்டு ஒரு புயலாக அவர் எழுந்தபோது வெட வெடத்துப் போனாள் லட்சுமி. அடுத்து அங்கு வீசப்போகும் புயலுக்கான ஆரம்ப ஆயத்தங்கள் கடுமையாகக் கண் சிமிட்டியது.

எதையும் பொருட்டாக மதிக்காமல் இடித்த புளியாக நிற்கும் ரவியைக் கை ஓயுமட்டும் அறையத் தோன்றியது.

அவன் சொன்ன அந்த ஒற்றைச் சொல் அந்த வீட்டில் ஒரு சூறாவளியாக வீசிக் கொண்டிருந்தது. அந்த வீட்டின் கௌரவத்தைச் சேதப்படுத்திச் சிரித்துக்கொண்டிருந்தது.

''சேகர் சொல்றதெல்லாம் உண்மை தானா?''

''என்ன சொன்னான்?''

''திருட்டுத்தனமா நீ கல்யாணம் செஞ்சுட்டு. அதில ஒரு குழந்தையும் இருக்கிறதாச் சொன்னான்.''

''அது திருட்டுத்தனமில்லே.''

''அப்படீன்னா நீ அதை ஒத்துக்கிறியா?''

''ஆமாம்.''

'ஆமாம்.... ஆமாம்... அதுதான்... அந்த ஒற்றைச்சொல்தான் ஒரு எரிமலையாக வெடித்துச் சிதறி வீடு முழுதும் ஒரு அக்னியாகப் பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அந்த நெருப்பு கொஞ்சமும் ரவியைப் பாதித்ததாகத் தெரியவில்லே.

''பெத்தவா ரெண்டு பேரும் கல்லாட்டம் இருக்கோம். எப்படிடா மூஞ்சிக்கு மூஞ்சி பார்த்து 'ஆமாம்'னு உன்னால சொல்ல முடிஞ்சுது?'' லட்சுமியின் குரல் உடைந்து கண்ணீராகத் தெறித்தது.

''உன்னை மாதிரித்தானேடா என்னையும் பெத்து வளர்த்தா. அவா பாத்து வெச்ச பெண்ணைத்தானே நான் பண்ணிண்டேன். கல்யாணமாகி எட்டு மாசத்திலே ஒரு குழந்தை இருக்கு.... இத்தனை நாள் இதை மறைச்சு வைக்கிற துணிச்சல் எப்படித் தான் உனக்கு வந்ததோ?''

ரவியின் இதழ்கள் மெல்ல அசையத் தொடங்கின. ''நான் ரேகாவைக் காதலிக்கிறதை ரெண்டு வருஷம் முன்னாலேயே தெரியப்படுத்திச் சம்மதம் கேட்டேன்.''

''நான்தான் ஜாதி விட்டு ஜாதி செஞ்சுக்க வேண்டாம்னு அப்பவே தடுத்திட்டேனே!''

''அப்பா... நம்பின பெண்ணை...''

''டாமிட்... அப்பான்னு கூப்பிட உனக்குத் தகுதி இல்லே.''

''ஓ.கே. மிஸ்டர் ராமச்சந்திரன்! நம்பின பெண்ணை நட்டாத்துல விட்டுட்டு வர்றது மரியாதையாப் படலே. நீங்க அன்னிக்கே சம்மதிச்சிருந்தா சட்டப்படி மருமகளா இங்கே இருந்திருப்பா.''

''எவனுக்கோ பொறந்த....''

''ஸ்டாப் இட்! நதி மூலம் ரிஷி மூலம் இப்ப அவசியமில்லே. அவ நல்லவ. தட்ஸ் ஆல். நான் சொன்னா நீங்க ஒத்துக்கப் போறதில்லே. அதுக்கா அவளை நான் விட்டுடத் தயாரா இல்லே.''

''போறும். சாக்கடையோட சரித்திரத்தைத் தெரிஞ்சுக்க யாருக்கும் ஆசையில்லே. நீ போகலாம்.''

''நான் வர்றேன். எல்லாருக்கும்.''

அவன் வேகமாக நடந்து அவனது உருவம் ஒரு புள்ளியாகத் தெருக் கோடியில் மறையும்வரையில் லட்சுமி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

மெல்ல அழத் தொடங்கினாள். அக்கம் பக்கம் அறியாமல் மௌனமாக உள்ளுக்குள்ளே அழுதாள்.

''எப்படி இருக்கு இது?''



தன் முன் நீட்டப்பட்ட அந்தப் புடவைப் பொட்டலத்தைப் பார்த்துப் புரியாமல் விழித்தான் சேகர். ''யாரோடது!''

''இது என்ன கேள்வி? எனக்குத்தான்!''

''பணம்?''

''நேத்திக்கு நீங்க கொண்டு வந்து தந்த போனஸ்.''

''அறிவிருக்கா உனக்கு?''

''........''

''அப்பாவோட காடராக்ட் ஆபரேஷனுக்காக வச்சிருந்த பணத்தில புடவை வாங்க என்ன தைரியம் உனக்கு?''

''எங்கிட்டச் சொன்னேளா நீங்க?''

''என்னைக் கேட்டுட்டு இதை வாங்கினியா நீ?''

''ஆம்படையானோட பணத்துல புடவை வாங்கறதுக்கு ஒரு பொம்மனாட்டிக்கு உரிமை இல்லையா?...'' அழத் தொடங்கினாள் ப்ரியா.


''அவன் சொல்றதுல என்னம்மா தப்பு? நானைக்குப் பணம் போறலேன்னு அவன் தானே கஷ்டப்படணும்? பொம்மனாட்டிக்குக் குடும்பகஷ்டம் தெரிய வேண்டாமா''

''ஆகா! குடும்பக் கஷ்டத்தைப் பற்றி யார் பேசறதுன்னு விவஸ்தையே இல்லையா? எவனையோ இழுத்துண்டு காதும் காதும் வெச்ச மாதிரி ஒரு குழந்தையும் பெத்துண்ட கஷ்டம் தெரியாத பிள்ளையைப் பெத்தவா என்னைக் கேக்க என்ன யோக்யதை இருக்கு?''

ராமச்சந்திரன் ஆடிப்போனார்.

''ப்ரியா யார் கிட்டப் பேசிண்டிருக்கேன்னு உனக்குத் தெரிஞ்சுதா?'' கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்தான் சேகர்.

''ஏன் என்ன இப்ப? நான் ஒண்ணும் ஓடிவந்தவ இல்லே. நாற்பது சவரன் நகையும் போட்டு லட்ச ரூபாய் செலவு பண்ணித்தான் எங்கப்பா பண்ணி வச்சார். அடிக்கக் கைநீட்டற சொரணை அப்பவே இருந்திருக்கணும். தோட்டு தோட்டா எண்ணிப் பத்தாயிரம் வரதட்சிணை வாங்கக் கை நீட்



1895ல் நியூயார்க் நகரில் வாழ்ந்த சகோதரர்கள் மூவர் உருவ அமைப்பில் ஒரே மாதிரியாக இருந்ததால் ஏற்பட்டு வந்த குழப்பத்தைத் தடுக்க, தங்களது பெயரின் ஆரம்ப எழுத்தை வைத்தே மீசை, தாடியை வளர்த்துக் கொண்டனராம்.

-எஸ். சஞ்சீவ்குமார்

ஆதாரம்: பிலீவ் இட் ஆர் நாட்.

டறச்சே எங்க போச்சு இந்த வேகமெல்லாம்?''

ஒவ்வொரு வார்த்தைகளும் ஊசிகளாக உடம்பைக் குத்தித் தொளைக்கத் தகப்பனும் மகனும் நொறுங்கிப் போனார்கள். சவுக்கடிகளாக விழுகிற பேச்சுக்கள் பேயடித்தது போல அவர்களை வீழ்த்தின.

சேகரின் ஆத்திரம் முழுவதும் திசை திரும்பியது.

''நான் வேண்டாம் வேண்டாம்னு சொல்லியும் கல்யாணம் பண்ணி வச்சேளே, அதுக்கு நன்னா அனுபவியுங்கோ.''

பணக்கார மருமகளின் ஆதிக்கம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்தபோது செயலிழந்து போனார்கள்.

அடிக்கடி மகளைப் பார்க்க வரும் அவள் அப்பா ஒரு நாள் வழக்கம் போல வந்த போது பிரச்னை இமயத்தைத் தொட்டது.

''ப்ரியா எங்கம்மா என் பேரன்?''

''பாலு, பாலு தாத்தா வந்திருக்கார்டா.''

குழந்தை ஓடிவந்து தாத்தாவின் மடியில் உட்கார்ந்து கொண்டது.

ராமச்சந்திரன் ஏக்கத்தோடு பார்த்தார்.

குழந்தை பிறந்தபோது தன் அப்பா பாலகிருஷ்ணனின் பெயரை வைக்க வேண்டும் என்ற பிடிவாதக் கொடியை ப்ரியா ஏற்ற, அது வழக்கமில்லை என சேகர் வாதாட, அவளது வழக்கமான அம்புகளைத்தொடுத்துக் கடைசியில் வெற்றியைக் கைப்பற்றினாள்.

''பாலு! தாத்தா கிட்ட வர்றியா?''

''நான் தாத்தா கிட்டத்தானே இருக்கேன்?''

''அது அம்மா தாத்தா. இது அப்பா தாத்தா. வாடா கண்ணு!''

''வரமாட்டேன் போ. நீ ரொம்ப மோசம்.''

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுடா ராஜா!''

''அப்படித்தான் சொல்லுவேன். நீ ரொம்ப மோசம்.''

''இடியட்! பெரியவாளை எதிர்த்து வாதாடாதேடா!...'' கோபத்தில் இரைந்தார் ராமச்சந்திரன்.

''எதுக்கு சம்பந்தி இப்படிக் கத்தறேள்? குழந்தை தெரிஞ்சா சொல்றது?''



புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய்
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
மஃபத்லால்
துணிகள்
மட்டுமே
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
MF-123 TAM

''என் பேரனைச் சொல்ற உரிமை எனக்குண்டு. அதை நீர் கேட்கவேண்டிய அவசியமில்லே.''

''ஏன் குழந்தை உம்மைக் கண்டா ஓடறதுன்னு இப்பத்தான் புரியறது.''

''கெட் அவுட் ஐ ஸே!''

சடாரென அவர் எழுந்திருக்க, அவசரமாகக் குறுக்கே வந்தான் சேகர்.

''நீங்க உட்காருங்கோ மாமா. தப்பா நினைச்சுக்காதேங்கோ. அப்பாவுக்குக் கொஞ்ச நாளா சரியில்லே.... அடிக்கடி இப்படி...''

''சேகர்...''

''பேசாம உள்ளே போங்கோப்பா!''

ரத்தம் தலைக்கேறக் கிறுகிறுத்துப் போய் அப்படியே சோபாவில் சாய்ந்தார்.

"வேண்டாம் ரேகா! நான் சொல்றதைக் கேளு. அந்த வீட்டுக்குப் போனா நமக்கு மரியாதை கிடைக்காது."

''மரியாதை வேண்டாங்க. அவங்க அடிச்சாலும் பரவால்லீங்க. நெற்றி கருங்கினாலும் நெஞ்சு வாழ்த்துங்க. கண்டிப்பா உங்களைச் சபிக்க அவங்களாலே முடியாதுங்க. நாம அங்கே தங்கவா போறோம். ராமுவுக்கு இன்னிக்கு ஆண்டு நிறைவு. உங்க பேர் கொண்டவனை நீங்க வாழ்த்துங்கன்னு சொல்ற விதமா அப்பாவை நமஸ்காரம் பண்ணிட்டு வந்துடலாங்க.''

''நான் உள்ளே வரலே. நீயும் உன் மகனும் ஆசீர்வாதம் (கிடைச்சா) வாங்கிட்டு வர்றவரைக்கும் தெருக் கோடில காத்துட்டிருக்கேன்.''

"உள்ளே வரலாமா?"

விபூதியை நீரில் குழைத்து நெற்றிக்குக் கொண்டுபோன ராமச்சந்திரன் சட்டெனத் திரும்பினார்.

''யாரும்மா நீ?''

''ராமு! தாத்தாவை நமஸ்காரம் பண்ணுப்பா.''

தத்தித் தத்தி நடந்த ஒரு வயதுக் குழந்தை தாத்தாவை நோக்கி வந்தது.

அதற்குள் உள்ளேயிருந்து மற்றவர்களும் ஹாலுக்கு வர, குழந்தைக்கும் தாத்தாவுக்கும் உள்ள இடைவெளி குறைந்தது.

'யாரு தாத்தா? யாரோட தாத்தா?'—புரியாமல் விழித்தபோது அந்தப் பிஞ்சு, காலின் கீழ் அழகாகச் சுருண்டு கிடந்தது!

எதிரும் புதிரும்!

இங்கிலாந்தின் பிட் தி யங்கர் என்பவர் மிகச் சிறிய வயதில் பிரதமரானார், தம்முடைய 24 வது வயதில் பிரதமராகி உலக ரிகார்டை ஏற்படுத்தினார்.

அதுபோல, மிக அதிக வயதில் பிரதமரான பெருமை, இந்தியாவின் மொரார்ஜி தேசாயைச் சாரும்; அவர் பிரதமரான பொழுது அவரது வயது 81

-ஸ்ரீராஜ்



மெல்ல அதைத்தூக்கி ஊஞ்சலில் நிறுத்தினார்.

அடுத்த நிமிடம் அவரே எதிர்பாராத அது நடந்தது. சட்டென்று அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டது அந்த மழலை.

சிலிர்த்துப் போனது அவருக்கு.

ஒரே ஒரு முத்தம்...

அந்த முத்தத்தில் அத்தனையும் புரிந்து போனது.

பாசத்தோடு அவரையே பார்க்கும் அந்தத் திராட்சைக் கண்களுக்குள் ரவி சிரித்தான்.

சட்டென வாசல் பக்கம் பார்த்தார்.

அந்தப் பெண்ணின் முகத்தில் பயம் தெரிந்தது.

''மன்னிச்சிடுங்க மாமா! அவனுக்கு யாரையாவது ரொம்பப் பிடிச்சிட்டா முத்தம் கொடுத்திடுவான். தப்பா நினைக்காதீங்க. மாமா.''

''உன் பேரென்னப்பா?''

''ராமு...'' வெடுக்கென வந்தது பதில்.

தம் பெயர்... தம் பெயர்... புல்லரித்தது அவருக்கு.

முறைப்படி வந்த பேரன் என்கிட்ட ஒட்டாமப் போனப்போ நான் வெறுத்த பெண் உண்மையான பேரனை எனக்குப் பெத்துத் தந்திருக்கா.

அதற்கு மேல் சிந்திக்க அவரால் முடியவில்லை. தன் பாவங்களைக் கரைக்க அவருக்கு ஒரே ஒரு வழிதான் தெரிந்தது.

குழந்தையின் முகத்தில் மாறி மாறி முத்தம் கொடுக்க ஆரம்பித்தார். தேக்கி வைத்திருந்த அத்தனை ஏக்கங்களும் அடித்துக் கொண்டு முத்தமாக வந்து முகத்தை மூடிக் கொண்டன.

குழந்தையும் மனைவியும் இன்னும் வரவில்லையே என்று தெருவோரத்தில் காத்துக் கொண்டிருக்கிறான் ரவி.

"காம்ப்ளான் ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள் சாப்பிடத் தவறி விடும் என் கணவருக்கு"



"சாப்பிடும்போது சண்டித்தனம் செய்யும் என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும் என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக—சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.



"அசதியினால் சரிவர சாப்பிட முடியாத எனக்கு"

திட்டமிட்ட பரிபூரண உணவு

காம்ப்ளான்®

GLC. 10-2015 TM

இரட்டை(ப் படைக்)கொலை

புஷ்பா தங்கதுரை

2

குற்றம் :

சமூகம் அதைத் தயாரித்து வைக்கிறது!
குற்றவாளி அதைச் செய்கிருன் —யாரோ

மாடிப் படிக்குக் கீழே வசந்தரா ஒரு குவியலாகக் கிடந்தாள். வலது கை திருகியிருந்தது. சில பொட்டு ரத்தங்கள் தரையில் புள்ளி பண்ணின. முகம் திரும்பிக் கழுத்து பொட்டென்று உடைந்திருந்தது.

—எப்போ விழுந்தாங்க?

இன்ஸ்பெக்டர் லிங்க் (லிங்கம்) கணேசனைக் கூர்மையாகக் கேட்டார். கணேசன் வசந்தராவின் புருஷன்.

—சரியாச் சொல்லணும்னு 8—38.

—அதெப்படி, கரெக்டா சொல்றீங்க?

—நான் படம் போட்டுக் கொண்டிருந்தேன். சரியா ஒன்பது மணிக்குக் கொடுக்கணும். ரிஸ்ட் வாட்சை மேஜை மேலே வச்சுப் பார்த்துக்கிட்டே இருந்தேன்.

—நீங்க ஆர்ட்டிஸ்டா?

—ஆமாம்.

—அவங்க விழுந்தபோது எங்கே இருந்தீங்க?

—கீழே இந்த ஹாலிலே இங்கே உட்கார்ந்து ஸ்கெட்ச் பண்ணிண்டிருந்தேன். மணி பார்த்தேன். 8.38. தட-தட தட் என்று சத்தம். திரும்பிப் பார்த்தா இவ விழுந்து கிடக்கிறு.

—உடனே என்ன செஞ்சீங்க?

—ஓடிப்போய்ப் பார்த்தேன். கண்ணு ஆடலே. மூக்கைத் தொட்டுப் பார்த்தேன். சுவாசம் இல்லே. பார்த்த உடனே அவ செத்தாச்சுன்னு தெரிஞ்சுது. உங்களுக்குப் போன் பண்ணினேன்.

—உடம்பைத் தொட்டீர்களா?

—நோ! நோ! இந்த மாதிரி விபத்திலே தொடக் கூடாதுன்னு தெரியும்.

லிங்க் கீழே குனிந்தார். உடம்பைப் பார்த்தார். கழுத்தைப் பார்த்தார். கை கால்களைப் பார்த்தார்.

பிறகு மெல்ல மாடிப் படிகளில் ஏறினார். ஒவ்வொரு படியிலும் தயங்கி, கைப்பிடி இத்யாதிகளைக் கூர்ச்சியாகப் பார்த்தார்.

அவ்வளவு பெரிய வீட்டுக்கு மாடிப் படி அல்பமாக இருந்தது. ஒரு சுழல் ஏணி போல இரண்டு மடிப்பில் கீழே விருட்டென்று இறங்கியது. கிட்டத்தட்ட செங்குத்து இறக்கம்.

மாடிவரை ஏறினார். சுற்றிப் பார்த்தார். அறைக்குள் நுழைந்தார். சுவர்களைப் பார்த்தார். தரைகளைப் பார்த்தார். மெதுவாக இறங்கிக் கீழே வந்தார்.

—வேறே மாடிப் படி இடையாதா?

—இடையாது ஸார்!

—வீடு ஒரு பங்களா மாதிரி இருக்கு. மாடிப் படி ஏன் இவ்வளவு சின்னதா இருக்கு?

—என்னவோ ஸார்! அந்தக் காலத்திலே கட்டிட்டாங்க.

—இதே படியிலேதானே உங்க முதல் மனைவி விழுந்து செத்தாங்க?

கணேசன் முகத்தில் ஒரு மெல்லி புன்னகை வந்தது. —ஆமாம்! ஞாபகம் வச்சிருக்கீங்களே!

—அது எப்போ நடந்திச்சு?

—ஆறு வருஷம் முன்னாடி.

—போலீஸ் விசாரணை நடந்ததில்லே!

—நடந்திச்சு. எதேச்சையான விபத்துன்னு சொல்லிட்டாங்க!

—அப்போ இது ரெண்டாவது விபத்து!

—ஆமா ஸார்! இந்த வீட்டுப் பரம்பரையிலே இந்த மாதிரி பலர் செத்திருக்காங்கன்னு சொல்றாங்க.

—உங்களுக்குத் தெரியாதா?

—தெரியாது.

—உங்க மூத்த மனைவி மூலந்தானே இந்தப் பங்களா கிடைச்சுது?



—ஆமாம். இதுவும் கிடைச்சது; சொத்தும் கிடைச்சது! அதனாலேயே அவள் எதேச்சையா விழுந்து செத்தபோது என்னே போலீஸார் சந்தேகப்பட்டாங்க. டி. ஐ. ஜி. யே வந்து மிரட்டிக் கிரட்டி விசாரிச்சாரு. கடைசியிலே ஒண்ணும் கண்டு பிடிக்கலே.

—பிடிக்கலேன்னு சொல்றீங்களே! அப்போ ஏதாவது மறைச்சிருந்தீங்களா?

—நோ! சத்தியமா இல்லே! அது ஒரு ப்யூர் விபத்து! அவ்வளவுதான். அப்புறம் என்னேச் சந்தேகித்த டி.ஐ.ஜி.யே என்னேச் சந்தித்து வருத்தப்பட்டாரு!

—ஓகோ! இப்போ இந்த இரண்டாவது பெண்ணே எப்போ கல்யாணம் கட்டிக்கிட்டீங்க!

—இரண்டு வருஷம் ஆச்சு. ரொம்ப நல்லவள். எனக்குப் பிடிச்சவள்.

—அவங்க செத்துக் கிடக்காங்க. வருத்தப்படாமல் இருக்கிறீங்களே!

—என் துக்கம் உங்களுக்குத் தெரியாது. நான் தனிமையிலே அழுவேன். எங்க வேலேக்காரன் கிட்டக் கேட்டுப் பாருங்க.

—சரி. இந்தப் பொண்ணு பணக்கார வம்சந்தானு?

—நீங்க சந்தேகப்படுவீங்க. தெரியுமே! ஏழை! சுத்த ஏழை!


—எப்படி ஒருத்தரைப் போல இன்னெருத்தர் இந்த மாடிப் படியிலே சாகறாங்க?

—விபத்து ஸார்! சரியா இறங்கணும். நீங்க மெதுவா ஏறினீங்க! மெதுவா இறங்கினீங்க. இவங்க அவசரப்பட்டு இறங்கறாங்க தடால்னு விழறாங்க!

—உங்க ரெண்டாவது மனேவியை எச்சரிக்கை பண்ணீங்களா?

—மாடிப் படியைப் பத்தித்தானே? ஆயிரம் வாட்டி பண்ணி யிருக்கேன். கேட்டாத்தானே?

—ஆமா. இப்படி ஒரு மோசமான மாடிப் படியை ஏன் வச்சிக்கிட்டிருக்கீங்க? இடிச்சுத் தள்ளறதுதானே!



இரயில் வண்டியை உலகிற்கு முதன்முதல் அறிமுகப்படுத்தியவர் ஜார்ஜ் ஸ்டீவன்ஸன். அவர் ஓட்டிச் சென்ற முதல் ரயிலே விபத்துக்குள்ளாயிற்று!

-சேலம் சக்திக்கனல்

—நல்லாச் சொன்னீங்க ஸார்! இது பழைய போர்ச்சுக்கீசிய பங்களா! சன்னலைப் பார்த்தீங்களா? அந்த ஆர்ச்சைப் பார்த்தீங்களா? இந்த மாடிப் படியிலே ஒரு விசேஷம்.

—என்னது?

—இந்தப் படிக்கு மேலே இருந்து கீழே ஸப்போர்ட் கிடையாது பாருங்க.

பார்த்தார். உண்மைதான். மரப்படிகள் மேலே தொடங்கிக் கீழே கடைசிப் படி மாத்திரம்தான் தரையிலே ஊன்றி இருந்தது.

—இது ஒரு ஆர்க்கிடெக்சரல் மார்வல்! இந்தக் கட்டுமான அதிசயத்தைப் பார்க்க போர்ச்சுக்கல்லேருந்து நிபுணருங்க வராங்க! நம்மூர்க்காரங்களுக்கு இதனுடை அற்புதம் தெரியாது. இதே மாதிரி மாடி இன்னெனு இப்ப கோவாவிலேதான் இருக்கு!

லிங் தலேயைச் சொறிந்தார். புறப்பட்டார். முகத்தில் அசடு வழிந்தது. எப்படியும் கணேசனே மடக்கி விடலாம் என்று நினேக்கப் போய் முடியவில்லே. தோல்வி!

மறுநாள் தொடங்கி இன்ஸ்பெக்டர் லிங் விடவில்லே.

கணேசனின் பக்கத்து வீட்டுக்காரர்கள், வேலேக்காரர்கள், நண்பர்கள், பரிச்சயமானவர்கள், இரண்டாவது மனேவியின் சொந்தக்காரர்கள் அனேவரையும் விசாரித்தார்.

கணேசனேப் பற்றிய எந்தக் குறையும் வெளியாகவில்லே. அவர துணங்களேப் பற்றித்தான் எல்லோரும் பேசினர்கள்.

அவரே கணேசனேப் பின் தொடர்ந்து எல்லா நடவடிக்கைகளேயும் கவனித்தார். எந்த விதத்திலும் குற்றம் சொல்லும்படி இல்லே.

கடைசியில் அந்த மரணம் எதேச்சையான விபத்து என்ற முடிவுக்கு வந்தார்.

ஆறு மாதங்கள் சென்ற பின் ஒரு நாள் சாலேயில் போய்க் கொண்டிருந்தபோது,

—ஹலோ! இன்ஸ்பெக்டர் இதுதான் எனது மூன்றாவது மனேவி சந்தியா! என்றான்.

சந்தியா அழகாக, இளமையாக, மெலிதாக இருந்தாள்.

லிங்குக்கு அவளேப் பார்த்ததும் பரிதாபமாக இருந்தது. நாக்கு துறுதுறுத்தது.

—மேடம்! உங்க வீட்டிலே மாடிப் படி இருக்கே! இறங்கும்போது ஜாக்கிரதையா இறங்குங்க! என்றார்.

—இன்ஸ்பெக்டர் ஸார்! உங்க வேலேயைக் காண்பிக்கிறீங்களே!'' என்றான் கணேசன்.

—நான் கவனிச்சுக்கிறேன்! என்றாள் சந்தியா!

எப்படியும் இன்னொரு 'விபத்து' நடக்கும் என்று விங்க் நிச்சயமாக நம்பினார்.

அவர் ஊகம் அப்படிச் சொல்லியது. முதல் மாதம் நடக்கவில்லை. இரண்டாம் மாதமும் நடக்கவில்லை. மூன்றும் மாதம் யாரோ போனில் சேதி சொல்ல விங்க் கணேசன் வீட்டை நோக்கிப் பறந்தார்.

படிகளில் ஏறிஅவசரமாகப்போய் ஹாலில் நின்றார்.

மாடிப் படிக்குக் கீழே குவியலாகக் கிடந்தது யார்?

> **இந்த இதழில் வெளியாகியுள்ள சிறுகதைகளுக்குத் தலைப்பு தந்து உதவிய ஸ்ரீ சந்திரமௌலிக்கும், இந்தத் தலைப்புக்களுக் கேற்பச்சிறுகதைகளெழுதித் தந்த கதாசிரியர்களுக்கும் கல்கி நேயர்கள் சார்பில் நன்றி.**

கண்களை அகல விரித்துப் பார்த்தார்.

—இன்ஸ்பெக்டர் நீங்க சொன்னபடி இன்னொரு விபத்து நடந்து போச்சு!

குரல் கேட்டுத் திரும்பினார். கணேசனின் மூன்றாவது மனைவி சந்தியா சுவர் பின்னால் நின்றாள்.

கீழே விழுந்திருந்தது கணேசன்! கழுத்து முறிந்து இறந்திருந்தார்.

ஆச்சரியம் தலைதூக்க விங்க் சந்தியாவிடம் விசாரித்தார் — எப்பொழுது விழுந்தார்?

—10–30.

—எப்படி விழுந்தார்?

—அவசரமாக இறங்கினார். விழுந்தார்.

—நீங்க அப்போ என்ன செஞ்சீங்க?

—கீழே பேப்பர் பார்த்துக்கிட்டு இருந்தேன்.

—நான் சொல்றதை வித்தியாசமா நினைக்காதீங்க! கணேசன் செத்ததினாலே அவர் சொத்து எல்லாமே உங்களுக்குத்தானே?

—ஆமாம்!

—அப்போ இது ஒரு விபத்தல்லன்னு நான் சந்தேகிக்கலாமா?


—என் வாழ்க்கையிலே இது ரெண்டாவது விபத்து.

—ரெண்டாவதா?

—ஆமா! என்முதல் கணவர்கூட இப்படித்தான் மாடியிலிருந்து விழுந்து செத்துப் போனார். அவர் பணக்காரர் இல்லே! ஏழை! அதனாலே என் மேலே யாரும் சந்தேகம் கொள்றதுக்கு முகாந்திரம் இல்லே. இது ரெண்டாவது விபத்து! ஏற்கனவே இதே வீட்டிலே பல விபத்து நடந்திருக்கு! நீங்களே இதை விசாரிச்சிருக்கீங்க! இப்போ எனக்குச் சொத்து வரும்கிறதனாலே மட்டும் இந்த விபத்து ஒரு கொலையா மாறிடாது! புரிஞ்சுதா இன்ஸ்பெக்டர்.

விங்க் தலையைச் சொறிந்தார்.

—சிலவங்க வாழ்க்கையிலே விபத்தாவே நிறைய நடக்கும் அது ஒரு அதிசய ஜாதகம்! கணேசனும் ஒரு அதிசய ஜாதகம்! நானும் ஒரு அதிசய ஜாதகம்!



படி தாண்டிய பதி

● கணவன் சம்பாதித்துக் கொண்டு வரும் சம்பளத்தில் கெட்டிக்காரத்தனமாய்க் குடும்பம் நடத்தத் தெரியாவிட்டால், பதி படியைத் தாண்டத்தான் நேரிடும் என்ற ஒரு சின்ன கற்பனையை நாடக வடிவில் நகைச்சுவை காப்ஸ்யூலில்காட்சிக்குக்காட்சி வழங்குகிறார் காத்தாடி. கடைசியில் கற்பு இழக்காமலே கட்டிய மனைவியிடம் வந்து சேருகிறார்!

பார்க்க வருகிற மக்களை மனம் விட்டுச் சிரிக்கவைத்து, சிரிப்புக்கு நடுவே நடுத்தரக் குடும்பத்துப் பார்வையாளர்களைச் சிந்திக்கவும் வைக்கிற வித்தை அப்படி யொன்றும் எளிதில்லை. புன்சிரிப்பு முதல் அவுட்டுச் சிரிப்பு வரை சிரிக்க வைக்கிற கஜேந்திர குமாரின் வசனமும், காத்தாடியின் மிகைப் படுத்தாத நடிப்பும் 'படி தாண்டிய பதி' யைப் பல நாடக மேடைப் படிகளைத் தாண்ட வைக்கும். —சாருகேசி



மூன்று
சொட்டு
கண்ணீர்...
சி.ரங்கநாயகி
ஜமால்...

3

"விழியே கதை எழுது... கண்ணீரில் எழுதாதே..." ஜன்னலருகில் இருக்கை இருந்ததால் எங்கேயோ ஒலிபெருக்கியில் அலறிய பாட்டு மீராவின் காதில் அலைமோதிற்று.

இதயக் கீறலில் பிறந்த வேதனை, கண்ணீராய் மாறி, அவளுடைய கட்டுப்பாட்டையும் மீறி வழிந்து, எதிரிலிருந்த 'லெட்ஜர்' மீது சிதறியதும்தான் மீரா சுதாரித்துக்கொண்டாள்.

நல்ல வேளை சுற்றுப்புறத்தில் எவரும் பார்க்கவில்லை. நாசூக்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சேகர் சீட்டு காலியாக இருந்தது. இன்றோ நாளையோ எவரையாவது அந்த இடத்திற்கு போஸ்ட் செய்து விடுவார்கள்.

டில்லியில் இன்னும் சில தினங்களில் ஆபீசர் பதவியை ஏற்றுக் கொண்டு விடுவான்.

மாறிவிடுவானோ?

Out of sight out of mind என்பது அவனுடைய வாழ்க்கைக்கு நிதர்சனமாகி விடுமோ?

மீராவின் நினைவில் பழைய சம்பவங்கள் குதி போடுகின்றன.

அலுவலகத்தில் எதிரெதிரே உட்கார்ந்து சின்னப் பார்வையால் ஸ்பரிசித்து, வார்த்தைப் பரிமாறலில் அஸ்திவாரம் போட்டு, இதயப் பரிமாறலில் மாடி வீடு கட்டி, திருமணம் என்னும் சமஸ்தானம் அமைக்கத் திட்டமிட்ட உறவு சேகருக்கும் மீராவுக்கும்!

"மீரா... நாளைக்கு லீவு போடலாமா?"

"எதுக்கு சேகர்..."

"தேவியோட சுத்தத்தான்...."

"ஸ்பெஸிஃபிக் ப்ரோகிராம் இல்லாம வெறுமே சுத்தறதுக்கு லீவு போடணுமா?"— மீரா.

"சினிமா போகலாம்... பீச் போகலாம்... நீ சம்மதிச்சா இது இரண்டும் இல்லாம, பேசாம லாட்ஜ் எடுத்து அரை நாள் 'ஸ்டே' பண்ணலாம்!"

"சீ....வல்கர்...."

"இதுல வல்காரிடி என்ன இருக்கு... லாட்ஜ்லே சும்மா பேசிண்டு இருக்கப் போறோம்...."

"அதாவது அரை மைல் தள்ளி உட்கார்ந்துண்டு நீங்க என்கிட்டே வெறுமே பேசிண்டு இருக்கப் போறீங்க... ஆம் ஐ கரெக்ட்...."

"ரொம்ப கரெக்ட் மீரா..."

"அப்பப்பா... பரம யோக்கியம்... நாத்துக் கணக்கானவங்க நடுவுலே தெருவிலே நடந்து போகச்சேயே, எவர் கண்ணுக்கும் படாதபடி நீங்க பண்ற சில்மிஷங்களுக்குக் குறைவில்லை. லாட்ஜ்லே நாம ரெண்டு பேரும் தனியா இருக்கச்சே நீங்க யோக்கியமா இருக்கப்போறீங்க இல்லையா?"

"பைத்தியம்...அந்தமாதிரி சமயங்கள்ளே தான் நமக்குப் பொறுப்பு ஜாஸ்தி வரும்."

—இப்படிப்பட்ட நெருக்கம் இருவருக்குள்ளும்.

ஆயிரம் பேச்சு இருந்தாலும் சில்லறை சில்மிஷங்களைத் தவிர 'லிமிட்' மீறிப் போன இல்லை.

திங்கட் கிழமைகளில் அவன் வெள்ளை பேண்ட் போட்டு, வெள்ளை ஷர்ட் இன் செய்து பளபளக்கும் கறுப்பு ஷூவுடன் ஆபீஸ் வந்தாக வேண்டும். இது மீராவின் கட்டளை.

அவளும் வெள்ளையில் பொடிசாய் கறுப்புப் பூப் போட்ட 'கடாவ்' வாயில் புடவையும், தலை நிறைய மல்லிகைப் பூவுமாய் வருவாள்.

ஆபீசே பேசும்... பார்வைகள் தீயாய்த் தகிக்கும்.

இது மாதிரி ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விதமான உடை.

அவளுக்கு வரும் முட்டை
அவன் எடுத்து வரும் தயிர் சாதம், மாவடுவும் கை மாறும்போது எத்தனையோ கேலி!

எதுவுமே அவர்களுக்கு லட்சியம் கிடையாது.

அவர்களது அந்நியோந்நியத்தைக் காணச் சகிக்காது விஷமமாக அவனை வேறு சீட்டுக்கு மாற்றி விட்டார்கள்.

ஏகமாகத் துடித்துப் போனான்.

இரண்டு நாளாக அவன் சரியாகச் சாப்பிடக்கூட இல்லை.

"இதென்ன குழந்தை மாதிரி... அவர்களால் சீட்டைத்தானே மாற்ற முடியும். நாம சந்திக்கிறதையோ பேசிக்கிறதையோ தடுத்துவிட முடியுமா என்ன?" என்பாள் மீரா.

"நீ ஆயிரம் சமாதானம் சொன்னாலும் எனக்கு இது பெரிய 'லாஸ்'தான்! காலை பத்து மணிலேருந்து சாயங்காலம் ஆபீஸ் முடியறவரை உன்னோட ஒவ்வொரு அசைவையும் அதுலே பிறக்கிற அபூர்வ அழகுக் கோணங்களையும் ரசித்துக்கொண்டே வேலை செய்யறதுக்கு ஈடு வேற கிடையாதுதான்!"

—இப்படிச் சொன்னவன் ஆபீஸர் பிரமோஷன் டெல்லியிலே போஸ்டிங் என்றதும் எப்படித்தான் உடனே ஒப்புக் கொண்டானோ?

அதிலும் டெல்லியில் தனது மாமா வீட்டில் தங்கப் போகிறானாம்.. மாமாவுக்கு அழகான கல்யாண வயதில் பெண் இருப்பதையும் அவனே சொன்னதுண்டு.

வேறு ஜாதி... அதிக வசதி யில்லாத குடும்பம்... என்ற மீராவின் நிலைக்கு மாறாக வசதியான மாமா, அழகான பெண், திருமணத்துக்குச் சிக்கலில்லாத உறவு... எல்லாவற்றுக்கும் மேலாக அப்பெண்ணின் Proximity!

மீராவை மறந்தே போய்விடுவானோ?

அன்று மாலை இருவரும் சந்திப்பதாக ஏற்பாடு.

ஓர் ஆட்டோ பிடித்து ஹோட்டல் பாலிமாருக்கு விடச் சொன்னான்.

அவர்களது வழக்கமான கார்னர் சீட்டில் பக்கத்துப் பக்கத்தில் அமர்ந்து கொண்டனர்.

முதல் முதலில் அவர்களிடையே காதல் மலர்ந்தது அங்குதான்!

'கடைசிச் சந்திப்பாக ஒருவேளை இதுவே மாறிவிடுமோ?'' – மீராவின் உள்ளத்தில் இனந் தெரியாத கற்பனை.

வெஜிடபிள் சூப்பும் பட்டர் மசாலாவும் ஆர்டர் செய்துவிட்டுச் சற்று நெருக்கமாக நாற்காலியை நகர்த்தி அவளுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

''இப்ப சொல்லுடா.''


பிரேமை மிகும் நேரங்களில் அவளை 'டா' போட்டு அழைப்பது சேகரின் வழக்கம்.

''சேகர்... நீங்க டெல்லிக்குப் போகறதை கேன்ஸல் பண்ணிடுங்கோ...''

அவன்: ''கிரீம் பிஸ்கட்டுன்னு சொன்னீங்க, கிரீம்மையே காணோமே...?''

கடைக்காரர்: ''நாய் பிஸ்கட்டுன்னா நாய் இருக்குமாங்க?''

-பிரகாஷ் முரளி



''எதுக்கு மீரா?''

''என்னால பிரிவைத் தாங்க முடியாது.''

''ஏன், நான் உன்னை மறந்துடுவேன்னு பயப்படறியா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்க போகக் கூடாது.''

''இந்த ஸ்டேஜ்ல எப்படி கான்ஸல் பண்றது...''

''உங்களுக்கு என்னை விட்டுப் போறதுலே சந்தோஷம்...'' கோபமாகச் சொன்னாள்.

''லுக் மீரா... குழந்தைத் தனமாப் பேசாதே. நான் போய்த்தான் ஆகணும்.''

''அப்ப நானும் வருவேன்.''

''வெரி குட்... அப்படிச் சொல்லு. இந்த வார்த்தையை நீ சொல்ல மாட்டியான்னு நான் காத்திண்டு இருந்தேன். நீ தோ... நீ சொல்லுவேன்னு எதிர்பார்த்து உனக்கும் டிக்கெட் வாங்கிண்டு வந்துட்டேன். பார்த்தியா?'' பர்ஸைத் திறந்து ரயில்வே டிக்கெட்டைக் கொடுத்தான்.

அவள் பெயரில் டில்லிக்குப் போக ரயில்வே ரிசர்வேஷன் டிக்கட்.

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன சேகர் இது... திடீர்னு முன்னயே எதுவும் சொல்லாம...''

''ஏன் என்னோட டில்லிக்கு வரப் பிடிக்கலையா?''

''சீ... என்ன கேள்வி இது... ஏங்கிக்கிட்டு இருக்கேன். பட்... எப்படி வரது... கல்யாணம் ஆகாம... எங்க வீட்ல சொல்லாம.. உங்க வீட்ல... தோ... எனக்கு ஒண்ணும் புரியலை....''

''நீ இப்படித் துடிக்கிறதைப் பார்க்கச்சே எனக்கு எப்படி இருக்கு தெரியுமா மீரா...''

''சீ...அப்படிப் பார்க்காதீங்க... எப்பவும் மிஸ்சிவஸ்... ப்ளீஸ்! விவரமாச் சொல்லுங்களேன்....'' மீரா கெஞ்சினாள்.

''பிரிவு உனக்கு மட்டுமில்லே தெரிஞ்சுக்கோ... என்னாலேயும் பிரிவைத் தாங்க முடியாதுன்னு புரிஞ்சது... எங்க வீட்ல அப்பா அம்மா கிட்டே விஷயத்தைச் சொன்னேன். ஏக ரகளை... நீ பிள்ளை இல்லைன்னு நெனைச்சுக்கிறேம்னு சொல்லிட்டாங்க. கால ஓட்டத்துலே சரியாயிடும்னு கம்னு இருந்துட்டேன்.... அதுக்குன்னு உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியுமா என்ன? இன்னிக்குக் காலை நீ ஆபீஸ் வந்தப்புறம் உங்க வீட்டுக்குப் போய், உங்க அப்பா, அம்மா கிட்டே விஷயத்தை உடைச்சுச் சொன்னேன். நீ இல்லாம எனக்கு வாழ்க்கை கிடையாதுன்னேன்.... எங்களாலே பிரிஞ்சும் இருக்க முடியாதுன்னேன். உன் அப்பா ரொம்ப விவரம் தெரிஞ்ச மனுஷர். பெருந்தன்மையா நம்ம காதலை அங்கீகரிச்சார். நாளைக்கே திருநீர்மலையிலே சிம்பிளா உங்க அப்பா அம்மா ஆசிர்வாதத்தோட நம்ப கல்யாணம் நடந்தாகணும்னு நான் சொன்னதுக்கும் ஒத்துண்டார். நாளை மாலை நானும் நீயும் கணவன், மனைவி... நாளை இரவு என்ன விசேஷம் தெரியுமா?''

இக் பிரமையால் பேசாமல் இருந்தாள்.

தொடர்ந்தான்.

''நாளன்னிக்கு நான் டெல்லி போறேன். அங்கு போய் ஏற்பாடுகள் ஆனதும் என் மனைவி மீரா வில் ஜாய்ன் மீ இன் டெல்ஹி... இருபது நாள் கழிச்சு நீ வரத்தான் ரிசர்வ் பண்ணி இருக்கேன்.''

அவன் சொன்னதும் அவனது தோளில் சாய்ந்து கொண்டு மீரா லேசாக விம்மினாள்.


''என்னடா இப்ப அழுகை...ஏற்பாடுகள் போறுமா?''

''சேகர்... நீங்க என்னை மறந்துடுவீங்களோன்னு சந்தேகப்பட்டு... ஏதேதோ கற்பனைகள் பண்ணிட்டேன்....''

அவளது கண்ணீரின் மூன்று சொட்டுகள் அவனது புஜத்தில் விழுந்தன.



இவர்கள் 'ஹைஜாக்'
எல்லாரும் அவங்கவங்க ளோட மனச்சாட்சியை எங்கிட்ட கொண்டாந்து ஒப்படைச்சடணும்!
ராஜீவ்
ஆயுள் பரியந்தம் நான்தான் பிரத மர்னு ஒத்துக்கணும்!
பரம்பரை ஆட்சியை உறுதிப் படுத்தி அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்!
பிரதமர் பதவி
இந்த நிமிஷமே எதிர்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்!
சஞ்சய்
5 அம்சத்
தோடு
மாக
எல்லா
களின்
ஒடுக்க
மேனகா



ஜாக்!
ய்தால்!..
ஜனாதிபதி ஆட்சிமுறை கூடாது என்பதுபற்றிப் பிரதமர் எதிர்க் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்!
தெருவுக்குத் தெரு... முடிந்தால் வீட்டுக்கு வீடு எடைக்கு எடை வெள்ளி தரவேண்டும்!
5000 கோடி
சத்துணவுத் திட்டத்துக்கு ஐ.எம்.எஃப். ஐயாயிரம் கோடி கடன் தர வேண்டும்!
பொதுஜனம்
எங்களை இவங்கிட்ட இருந்தெல்லாம் காப்பாத்தி, அண்டார்டிகாவுக்கு ஹஜாக் பண்ணிக் கொண்டு போய் விடணும்!

விஞ்ஞானப் பக்கங்கள்

Gene code No: X2314M

வரலாறு: என்ஜினியர். ஐ. கியூ 140. 6 அடி உயரம். திடகாத்ர உடம்பு. குடும்பத்தில் 3 என்ஜினியர்கள், 4 டாக்டர்கள்.

Gene code No. X2315M

வரலாறு: பாடகன். மெலிந்த தேகம். 30 வருடமாய்க் குரல் வளம். தங்கை டொரிஸ்ட். தம்பி மியூசிக் டைரக்டர்.

Gene code No. X2316M

. . . .

. . . .

"குழந்தை அப்படியே அப்பனை உரிச்சி வச்சிருக்கு. அதே கண் அதே மூக்கு. கலர் மட்டும் அம்மா மாதிரி வெளுப்பு."

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்ன? ரமேஷ் கிருஷ்ணனைப் பார். அப்பாவைப் போலவே தூள் கிளப்பறான்!"

"சங்கிலி பாத்தியா. பிரபு இரத்தத்தில் சிவாஜி நடிப்பு ஓடுது."

மேற்சொன்ன உரையாடல்களுக்கு ஆதாரமான விஷயம் என்ன தெரியுமா?

ஜீன் Gene

காலம் காலமாக நம் பாரம்பரியத்தையும் மரபுகளையும் காத்து நம்முடன் எடுத்து வரும் செய்தியாளன்தான் ஜீன். ஜீன்களின் அமைப்பை 20ம் நூற்றாண்டில்தான் அறிய முடிந்தது. என்றாலும் சமீப வருடங்களில் ஜீன்களைப் பற்றிய மரபியல் எனப்படும் ஜெனடிக்ஸ் என்ஜினியரிங் மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகிறது.

நம்முடல் செல்களில் குரோமோஸோம்கள் எனப்படும் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் காணப்படுகின்றன. மனிதர்களின் உடல் செல்களில் 46 குரோமோஸோம்கள் உள்ளன. இந்த குரோமோஸோம்கள்தான் பிறக்கும் குழந்தையின் அடையாளங்களையும் குணங்களையும் நிர்ணயிக்கின்றன. நகம் இப்படி இருக்கவேண்டும். முடி கருளாக இருக்க வேண்டும் போன்று ஒவ்வொரு தகவலும் இந்த 46 குரோமோஸோம்களில் புரோகிராம் செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞானிகள் இந்த குரோமோஸோம்களைத் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்தார்கள். அப்போதும் ஒரு குரோமோஸோம் பல தகவல்களைக் கொண்டிருந்தது. அதை இன்னும் பிரித்தார்கள். அதுவும் பல வேலைகளைச் செய்தது. இப்படியாகப் பிரித்துக் கொண்டே போனபோது ஒரு செயலை மட்டும் செய்யக்கூடிய பொருளைக் கண்டு பிடித்தார்கள். அதற்கு ஜீன் என்று செல்லப் பேர் வைத்தார்கள். ஒரு ஜீன் ஒரு செய்தியை மட்டும் தன்னில் கொண்டிருக்கும்.

ஜீன்களைக் காப்போம்

ஜீன்களின் இரசாயனப் பெயர் DNA (Deoxyribo Nuceic Acid) ஜீன்கள் நான்கு அடிப்படைப் பொருள்களினால் ஆனது. அடினைன், கயானைன், சைடோசைன், தைமைன் ஆகிய நான்கும் ஒரு குறிப்பிட்ட வரிசையில் குறிப்பிட்ட இடைவெளியில் ஒவ்வொரு ஜீனிலும் அமைந்திருக்கும். எனவே ஒவ்வொரு ஜீனும் வேறுபடுகிறது.

ஜீன்கள் காலா காலமாகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிணாம மாற்றமடைந்து வருகின்றன. ஆனால் திடீர் மாற்றங்கள் அவ்வளவாக நிகழ்வதில்லை. இருந்தும் எதிர்காலத்தில் இந்த ஜீன்கள் பாதிக்கப்படாமல் இருக்குமா என்று சொல்வதற்கில்லை. ஹிரோஷிமா, நாகசாகியில் அணு குண்டு வெடித்ததால் இந்த ஜீன்களின் அமைப்பு பாதிக்கப்பட்டிருக்கலாம். அந்தச் சமயம் அங்கிருந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பல குறைகளுடன் பிறக்கிறார்கள். அவர்கள் வேறு ஊருக்குப் போவதாலும், மருத்துவ முறைகளாலும் இதனை நிவர்த்தி செய்ய இயலவில்லை.

பெருகி வரும் அணு ஆராய்ச்சிகளும், நியூட்ரான் குண்டுகளும் ஜீன்களைப் பயமுறுத்துகின்றன. மூன்றாம் உலகப் போர் ஏற்பட்டால் அதன் விளைவுகளை நாம் நேர்கொள்ள இயலுமா என்பது பெரிய கேள்விக் குறி. அப்போது ஜீன்கள் அனைத்துமே பாதிக்கப்படலாம். பிறகு மனித குலமே அடையாளமின்றிப் போகலாம்.

இந்த அபாயத்திலிருந்து ஜீன்களைப் பாதுகாப்பது அவசியமாகிறது. மார்டின் மோ என்னும் உயிரியல் விஞ்ஞானி ஜீன்களைப் பாதுகாக்கும் புதிய முறை ஒன்றைக் கூறுகிறார். இந்த முறைக்கு புராஜக்ட் ஃபீனிக்ஸ் (Proiect Phoenix) என்று பெயர். ஃபீனிக்ஸ்

என்பது அராபிய பாலைவனத்தில் 600 ஆண்டுகள் வாழ்ந்து பிறகு தன் சாம்பலிலிருந்து மறு பிறவி எடுப்பதற்காகத் தன்னையே எரித்துக் கொண்டஒரு பெரியபறவை. அதுபோல பல நூறு ஆண்டுகள் கழித்து நாமும் நம் ஜீனிலிருந்து புது மனிதகுலத்தைத் தோற்றுவிக்க இருப்பதால் இத்திட்டத்திற்கு இப்பெயர் வந்தது.


புராஜக்ட் ஃபீனிக்ஸ் திட்டப்படி ஜீன்கள் இராசயன திரவத்தில் உறைய வைக்கப்பட்டு,பாதுகாக்கப்படும். ஜீன்களைக் கொண்டு மனிதனை உருவாக்கும் எதிர்காலம் வரை இவை பத்திரமாகக் கெடாமல் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஜீனுக்கும் ஒரு கோட் கொடுத்து அந்த ஜீனுக்குரிய மனிதனின் குடும்ப வரலாறு வீடியோ டேப்பாக அல்லது ஒலி வடிவத்தில் பத்திரப்படுத்தப்படும்.

கற்பனைகளை நிஜமாக்க ஏராள நம்பிக்கைகளைத் தரும் விஞ்ஞான உலகம் இது. ஜீன்களை உருவாக்கும் மெஷின்களும் தனக்குள்ளே இணையும் DNA முறைக் குளோனிங்கும் 10 வருடம் முன் நம்மால் கற்பனை கூடச் செய்ய முடியாத விஷயங்கள். ஒரு குரோமோஸோமில் ஜீன்கள் 5,000 லட்சம் அடிப்படை வகைகளில் அமையச் சாத்தியங்கள் உண்டு. இப்படியாக 46 குரோமோஸோம்களின் ஜீன்களின் அமைப்பை அறிய வேண்டும். இந்த ஜீன்களின் அமைப்பு பற்றிய செய்தியை உலக நாடுகள். கம்ப்யூட்டர் வங்கிகளில் பதித்து வருகிறார்கள்.

அதிக தூரத்தில் இல்லாத எதிர்காலத்தில் கம்ப்யூட்டர்களின் நினைவில் ஜீன்களின் அமைப்பு பூராவையும் பதித்துவிட முடியும். அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஜெனடிக் என்ஜினியரிங் செய்யும் சாதனைகள் நம்பிக்கை தருகின்றன.

கடிகாரங்களில் இருக்கும் ரேடியம் டயலிலிருந்து பிரும்மாண்டமான அணுமின் நிலையங்கள் வரை ஜீன்களைப் பாதிக்கும் சாத்தியம் கொண்டவை. நமது மனித இனத்தைக் காப்பது மட்டுமின்றி எதிர் காலத்தில் புது மனிதக் காலனிகளை வேறு கிரகங்களில் நம்மால் உருவாக்க இயலும். ஒரு புறம் மனித குளோனிங்குக்குப் பலத்த எதிர்ப்பு வலுத்து வந்தாலும் இன்னொரு புறம் ஜீன்களின் உலகம் விரைவாக வளர்ந்து வருகிறது. மிக விரைவாக. எழுபதுகளில் கம்ப்யூட்டர்கள் உலகை ஆண்ட மாதிரி எண்பதுகளில் உலகை ஆளப்போவது ஜெனடிக்ஸ்.

ஜனனி சாஸ்திரி



அன்பாய் நாலு வார்த்தை

4

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

–வள்ளுவர்

"**யா**ரைக் கேட்டுட்டு இந்தத் தட்டுல அந்தக் கிழத்துக்குச் சோறுபோட்டு வெச்சே?" என்று வேலைக்காரியிடம் கூச்சல் போட்டாள் பாக்யலட்சுமி.

"தாத்தாதாம்மா அதை எடுத்து வெச்சுக்கிட்டுச் சாப்பிட உட்கார்ந்தாரு" என்றாள் புது வேலைக்காரி.

'குமார் சாப்பிடற தட்டு. இதுல வேற யாரும் சாப்பிடக் கூடாதுன்னு சொல்ல வேண்டியதுதானே? உனக்கு அறிவு எங்கெ போச்சு? பொழுதெல்லாம் இருமிக்கிட்டு எச்சியத் துப்பிக்கிட்டிருக்கு. எம்புள்ளைக்கும் அந்த வியாதி ஒட்டணுமா? அறிவு கெட்ட ஜென்மங்க. எல்லாந்தான் அனுபவிச்சாச்சே. இன்னும் என்ன இருக்கு? காலா காலத்துல போய்ச் சேர வேண்டியது தானே?"

"அக்கா... வேலைக்காரி புதுசு. தெரியாம எடுத்து வச்சிருப்பா. அந்தக் கிழத்துக்குப் புத்தி வேண்டாமா?" பா. லட்சுமியின் தம்பி ராமு சொன்னான்.

"தெரியாமலா அந்தத் தட்டிலே சாப்பிட்டிருக்கும்னு நினைக்கிறே? திமிரு. எல்லாரும் எவர்சில்வர்ல சாப்பிடறாங்க. நாம மட்டும் இண்டேலியத்துல எதுக்காகச் சாப்பிடணும்?"

"என்னடி இங்கே ரகளை?"

"உங்கப்பாவைக் கட்டிக்கிட்டு நீங்களே அழுங்க. வாங்கற சம்பளத்தை மாத்திரைக்கும் மருந்துக்கும் கொண்டு போய் அழுங்க. நான் எங்கேயாவது போறேன்."

"என்ன விஷயம்னு கேட்டா ஒழுங்காப் பதில் சொல்லு. அநாவசியமாக் கூச்சல் போட்டே அடிச்சுப் பல்லை உடைச்சிடுவேன்."

"அடிச்சுப் பாருங்க. அப்புறம் தெரியும். உங்களுக்கு மட்டும்தான் கை இருக்குன்னு நினைக்காதீங்க."

"என்னடி பண்ணுவே? உம்... என்ன பண்ணுவே. குத்தி மூஞ்சியை யெல்லாம் பேத்திருவேன்.... என்ன நடந்ததுன்னு கேட்டா...."

"குமார் தட்டை மாமா எடுத்து வெச்சு சாப்பிட்டிருக்கார்" என்றான் ராமு.

"அப்பா... அப்பா... உனக்குன்னு ஒரு தட்டு வாங்கிக் குடுத்திருக்கும்போது அடுத்தவங்க தட்டை ஏன் அசிங்கப்படுத்தறே?"


"அன்னிக்குத் தாத்தா என் தலையணையை எடுத்து வச்சுப் படுத்து தலையணை எல்லாம் ஒரே மூக்குப் பொடி" என்றான் ஹேமா.

"இந்தாப் பாரு... ஒழுங்கா இருக்கணும்னா இரு. இல்லேன்னா மரியாதையா அண்ணன் வீட்டுக்கு ஓடிடு ஆமா. வயசானதுக்குத் தக்க மனுஷனுக்கு அறிவு வேண்டாம்?"

"அந்தத் தட்டை எடுத்திட்டுப் போயி வெளியிலே போட்டு நல்லா டெட்டால் போட்டுக் கழுவுடி" என்றாள் பாக்கிய லட்சுமி.

வராந்தாக் கட்டிலில் விழித்துப் போட்ட நார் மாதிரி அசையாமல் கிடந்தார் கிருஷ்ணமூர்த்தி. ஒரு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். மூத்த மகனுடைய வீட்டில் மூன்று வருஷம் அவதிப்பட்டு விட்டுப் போன மாதம்தான் இரண்டாவது மகனின் அழைப்புக்கிணங்க இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

மூத்த மகன் திருவல்லிக்கேணியில் மாட்டு மூத்திரச் சந்துக்குள் ஒரு இருட்டறையில் வசிக்கிறான். சேப்பாக்கத்தில் ஜூனியர் அசிஸ்டென்ட். எல். ஐ. சி.யிலும் சில



வங்கிகளிலும் பியூன்கள் அவனே விட கன மான சம்பளப் பொட்டலத்தை முதல் தேதியன்று வீட்டுக்கு எடுத்துச்செல்கிறார்கள். அவனுக்கு ஆணும் பெண்ணுமாக ஐந்து குழந்தைகள். வறுமை, சத்தில்லாத சாப் பாடு, பட்டினி. அவனுடைய சுமையைக் குறைக்க கிருஷ்ணமூர்த்தி அங்கிருந்து நகர வழி தேடினார். ஒரு கல்யாண வீட்டில் பத்துப் பேருக்கு மத்தியில் வைத்து சின்ன மருமகள், ''எங்க வீட்ல எல்லா வசதியும் இருக்கு. வந்து சேர வேண்டியதுதானே. அவங்களே பாவம் கஷ்டப்பட்டுக்கிட்டிருக் காங்க'' என்று நீட்டி முழக்கினாள். அதை நம்பிக் கிழவர் ஒரு துணிப் பையுடன் இங்கே வந்து சேர்ந்து விட்டார். இந்தச் சின்ன மகன் தனியார் நிறுவனத்தில் ஆயி ரத்து ஐநூறு மாதம் வாங்குகிறான். மனைவி யும் டீச்சர்.

''அப்பா, நான் ஆபீசுக்குப் போறேன். வராந்தாவிலேயே இரு. தபால் வந்தா வாங்கி எங்கேயாவது எறிஞ்சிராதே. மேஜை மேலே பத்திரமா வை. முப்பத்தஞ்சி உருப் படி அயர்ன் பண்ணக் குடுத்திருக்கு. எண்ணிப் பார்த்து வாங்கி வை.''

''பால் கார்டை எடுத்து அவர் கிட்டக் குடுங்க. இன்னிக்கு அவர்தான் வாங்கணும். வேலைக்காரி மத்தியானம் வரமாட்டா.''

பால் பூத்துக்கு முன்னால் மத்தியான வெயிலில் அரை பர்லாங் நீளத்துக்கு க்யூ நிற்பது கிழவரின் மனக் கண்ணில் தோன் றியது.

''தாத்தா, நான் சாயங்காலம் வர்ற துக்குள்ளே இதுக்கெல்லாம் அட்டை போட் டுப் பெயர் எழுதி வை. சும்மா தூங்கிக்கிட் டிருந்தே, ராத்திரி சோறு கிடையாது'' ஒன்றரை அடி உயரத்துக்கு நோட்டுப் புத்தகங்களை ஹேமா அவர் எதிரே அடுக்கி ப்ரௌன் காகிதச் சுருளைப் பக்கத்தில் வைத்து விட்டுப் போனாள்.

பள்ளிக்கூடத்துக்கு அவசரமாகக் கொண் டைப்போருத்திப் புறப்பட்ட பாக்யலட்சுமி ஜன்னல் வழியாக மாமனருக்கு மேலே மின் விசிறி சுழல்வதைப் பார்த்தாள். ''ராமு அந்த மெயினை ஆப் பண்ணு'' என தம்பிக்கு உத்தரவு போட்டுவிட்டு, ''கரண்ட் பில் எறிக்கிட்டே போகுது'' என்று முணுமுணுத் தாள்.

அரை மணி நேரத்தில் வீடு வெறிச்சோடி யது. அதுவரை அசையாமல் கிடந்த கிழவர் மெல்ல எழுந்து அமர்ந்தார். ஜன்னலுக்கு வெளியே தெருவில் வாகை மர நிழலில் மொபைல் அயர்ன் வண்டிக்காரன் ஈரத் துணியைப் பாண்டில் சுருசுருப்பாகத் தேய்த் தான். அங்கி போலப் பெரிதாக அணிந்து கொண்டு நீக்ரோ வாலிபன் வெளி நாட்டு சைக்கிளை வேகமாக மிதித்தான். ஸல்வார் கம்மீஸ் அணிந்த மாணவிகள் புத்தகங்களு டன் நடந்தனர்.

ஹேமா வைத்துவிட்டுப் போன புத்தக அடுக்கிலிருந்து ஒரு கனமான புத்தகத்தை உருவினார். என்ன இவ்வளவு பெரிய புத்த கம்? பிரித்தார். டிக்ஷனரி.

தளர்ந்த அவர் விரல்கள் எதேச்சையாக அந்த அகராதியின் பக்கங்களைத் தள்ளின. 'LOVE' என்ற வார்த்தை ஒரு வலப்பக்கத் தின் மேல் மூலையில் பத்திரமாக இருந்தது. சர்ரட். அந்தப் பக்கம் அவர் கைக்கு வந்தது. கசக்கி ஜன்னலுக்கு வெளியே போட்டார்.

''அம்மா...''

அயர்ன் வண்டிக்காரன் தேய்த்த துணி களுடன் உள்ளே வந்தான்.

''இப்படி வை.''

''முப்பத்தஞ்சு இருக்கு. எண்ணிப் பார்த்துக்கோங்க.''

''திருவல்லிக்கேணிக்கு இங்கேர்ந்து எந்த பஸ் போகுதப்பா?



வரலாறு படைத்துள்ள பிரதர் பீட்டர்....

சாதாரணமாக தபால் தந்தி ஊழியர்கள் 58 வயதில் ரிடையர் ஆகின்றனர். ரோமங்களில் இயங்கும் சோதனை பிரிவு உதவி போஸ்ட் மாஸ் டர்களுக்கு ரிடையர்மெண்ட் வயது 65 என அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால் செண்பகனூர் கூடு தல் பிரிவு உதவி போஸ்ட் மாஸ்டர் பீட்டரின் நேர்மையான, சிரத்தையான வேலையை மனத் தில் கொண்டு, தகவல் தொடர்பு அமைச்சர் அவர் விரும்பும் வரை சக்தியுள்ள வரை தொடர்ந்து பணியாற்ற சலுகையை அளித் தார். அதனால் 68 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றித் தமது 96வது வயதில் உடல்நல குறைவால் தானாகவே, சமீபத்தில் பீட்டர் பதவி விலகிக்கொண்டார். சிறந்த பராமரிப் புள்ள தபால் நிலையம் என செண்பகனூர் தபால் நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற் காக அவருக்கு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல், தங்க கைக் கெடிகாரம் ஒன்றைப் பரிசு அளித்தார். இவருடைய சேவையை பாராட்டி, தபால் தந் தித் துறை டைரக்டர் ஜெனரல் ரூ 2500 ரொக்கப் பரிசையும் அறிவித்தார். இந்த பரிசை, திண்டுக் கல்லில் தற்சமயம் மருத்துவ சிகிச்சை பெற்று வரும் இவருக்கு, மதுரை கலெக்டர் தாமே நேரடியாக வந்து ஜூலை 3ம் தேதியன்று வழங்கினார்!

-ராஜேஸ்வரி

20

முரளிதரனால் ராம்நாராயணன்கம்பெனியில் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை. நாள்தோறும் ஹிரண்மயியைப் பார்க்க வேண்டியிருந்தது. அவளைத் தன்மனத்தினின்றும் அகற்றிவிட அவனால் முடியவில்லை. மேலும் தான் வஞ்சிக்கப்பட்டு விட்டோம் என்ற உணர்வும் அவனுள் மேலோங்கி நிற்க ஆரம்பித்தது. ஹில்டாவின் மூலம், தனக்கிழைக்கப்பட்ட அநீதிக்குப் பழிவாங்கவே அவன் அவளைத் தூண்டி விட்டான். ஆனால் அவளோ வேலையை ராஜிநாமாச் செய்யப் போவதாகக் கேள்விப்பட்ட உடனே அவனுக்குத் தன்னுடைய திட்டங்கள் திசை

கவர்ச்சிகள்

கிருஷ்ணமணி



மாறிப் போவது போன்றும், ராம் நாராயணனைப் பழிவாங்குதல் என்பது முடியாத காரியம் போன்றும் தோன்றியது.

ஹில்டா இரண்டு மூன்று நாட்களாக ஆபீஸுக்கு வரவில்லை. முதலில் இது பற்றி சுரேஷ் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஆனால் நான்காவது நாளும் அவள் வராமற் போகவே ராம்நாராயணன் அவனைக் கூப்பிட்டனுப்பினார். வீட்டில் சகஜமாகப் பேச முடியாத நிலை. தந்தையும் மகனும் தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேச ஆபீசில்தான் வசதி இருந்தது.


''உட்கார்!''

பேச்சை எப்படித்துவங்குவது என்று அவர் யோசித்தார். இக்கட்டான ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பது போல் தோன்றியது. வழக்கம் போல் தம் வழுக்கைத் தலையைத் தடவிக்கொண்டார். தொண்டையைச் செருமினார்.

''சுரேஷ்! அவ ஏன் மூணு நாளா வரலே?''

மௌனம்.

''லீவ் அப்ளை பண்ணலே. போன் பண்ணி யும் தகவல் சொல்லல்லே. இங்கே கஷ்டமா இருக்கு. அவளுக்கு உடம்பு சரியில்லையோ?



எதுவாக இருந்தாலும் தகவல் சொல்ல வேண்டாமோ?''

விஷயத்தை எப்படிச் சொல்வது என்று சுரேஷ் திணறினன். ஆனல் சொல்ல வேண் டிய தருணம் வந்து விட்டது. இவரிடம் எதையும் மறைக்க முடியாது. எப்படியும் தெரிந்து கொண்டு விடுவார்.

''என்னடாது மௌனமாவே இருக்கே?''

''அவ கர்ப்பமா இருக்கிறதாச் சொன் ஞள்.''

''வாட்! மை குட்னஸ்!'' அவரால் மேற் கொண்டு எதுவும் பேச முடியவில்லை. இது அவர் எதிர்பார்க்காத ஒன்று போலிருந்தது. தவிர, தம் மகன் சாமர்த்தியமாக நடந்து கொள்வான் என்றுஅவர் எதிர்பார்த்திருக்கக் கூடும். இதனல் ஏற்படக் கூடிய எதிர் விளை விளைவுகள்தாம் அவருடைய மௌனத் துக்குக் காரணமாக இருந்தன. சில நிமி டங்கள் ஊர்ந்தன.

''கான்ட் யூ ஆஸ்க் ஹர் டு அவாய்ட் இட்?''

''முடியாதுன்னு ஒரே பிடிவாதமா இருக்கா.''

''ஐ ஸீ...!... எவ்வளவு எதிர்பார்க் கிறு? என்ஞ இந்த மாதிரிப் பெண்களெல் லாம் கொஞ்சம் ரேட்டை உயர்த்தினல் சமரசத்துக்கு வந்திடுவாங்க!''

''அப்பா... அவ அப்படிப்பட்டவ இல்லே. மேலும், நம்ம கிட்ட எந்த வித உதவியையும் எதிர்பார்க்கல்லே.''

''புரியறதுடா! நீ சரியான ஏமாளின்னு தெரிஞ்சிண்டிருக்கா! நாளைக்கே குழந்தை பிறந்த பிறகு பிராபர்ட்டி சிலே...''

''ஸ்டாப் இட் டேடி! நான் தான் முதல்லேயே சொன்னேனே, அவ நம்ம ஆஸ்தியிலே ஒரு நயா பைசா கூட எதிர் பார்க்கல்லே. ஷி ஸேஸ் தட் ஹர் சைல்ட் வில் ஆல்ஸோ பிகம் எ பிக்மேன் லைக் இட்ஸ் கிராண்ட் ஃபாதர் ராம் நாராயண்!''

''மை குட்னஸ்! ஊருக்கும் உலகத்துக்கும் அது யாரோட குழந்தைன்னு சொல்லிடு வாளோ?''

''யெஸ்! அதுதான் இப்போ பிரச்னே. அவ வாழ்க்கையினேட லட்சியமா இதை வச்சிண்டிருக்காளாம். குழந்தையை நல்ல படியா வளர்த்துப் பெரிய மனுஷனு ஆக்கிடு வேன்னு சபதம் போட்டிருக்கா!''

''சில சமயங்களிலே ராங் ஸைட் ஆப் தி பெட்ல பொறக்கற பசங்க ஜீனியஸாக்கூட இருப்பானுங்க! ம்... எதெது எப்படி நடக் கணுமோ நடந்துதானே தீரணும்!...''

தம் மகன் ஹில்டாவை ஆதரித்துப் பேசு வது போல் தோன்றிய மறு கணமே அவர் தம் பேச்சை மாற்றினர் என்றாலும், தம் மனத்துக்குள் இந்த விஷயத்தைத் தம் போக்கிலேயே சரி செய்து விட வேண்டும் என்று எண்ணினர். வியாபார நேர்த்தியாக, சாதி சமயம் இவைகளைப் பொருட்படுத்தாத அவருக்குத் தம்முடைய பிற்காலச் சந்ததி யின் ஒரு கிளை கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்து இருக்க நேரிடும் என்றஎண்ணம் தோன்றிய உடனே மனத்தைச் சங்கடப்படுத்தியது! அது என்றுமே மாறாத ஒரு களங்கமாக இருக்கக் கூடும். மேலும் ஹில்டா இன்று ஆஸ்தியில் பங்கு கேட்க மாட்டேன் என்று சொன்னலும், நாளையே ஒரு நாள் சட்டப்படி இல்லாவிட்டாலும் சமுதாய நியதிகளின்

துணை கொண்டு பங்குகேட்கலாம். குழந்தை பிறந்து விட்டால் நீலாம்பாளும் நியாயம் பேசுவாள். கிறிஸ்துவப் பெண்ணுக்குப் பிறந்தாலும் அதுவும் தங்களுடைய பேரக் குழந்தைதான் என்ற உண்மை மாறிவிடாது. அதனுடைய எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். மனத்தில் ஏதோ ஒன்று உறுத்தியதுபோல் இருந்தது. மிடறு விழுங்கினார். இதை எப்படியாவது சமாளிக்க வேண்டும்.

பஸ்ஸரை அழுத்தினார்.

ப்யூன் வந்தான்.

''குப்புசாமியைக் கூப்பிடு!'' ப்யூன் வெளி சென்றான்.

''சுரேஷ் நீ போகலாம்!''

''அப்பா இதைப் போய் குப்புசாமிகிட்டே சொல்லி அவர் மூலமா தீர்வு காண முயற்சி செய்யணுமா?''

''எனக்குத் தெரியும்! நீ போ!''

''எனக்குச் சரின்னு படல்லே!''

''ஐ டோண்ட் மைண்ட்! ப்ளீஸ் கெட் அவுட்!''

சுரேஷ் தந்தையின் கோபத்தை அறிந்தவன். அவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் எழுந்து வெளியே நடந்தான்.

குப்புசாமி உள்ளே நுழைந்தார்.


ராம் நாராயணன் கைக்குட்டையால் தம் முகத்தில் அப்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டே குப்புசாமியை உட்காரும்படி சைகை காட்டினார்.

அடுத்த சில நிமிடங்களுக்குள் ராம் நாராயணன் குப்புசாமியிடம் விஷயத்தை எப்படிச் சொல்ல வேண்டுமோ அந்த விதத்தில் சொல்லி விட்டார். கடந்த காலத்தில் இக்கட்டான பல சூழ்ச்சிகளில் தமக்கு மதியாலோசனை வழங்கிய அந்த மனிதரின் வெளிகை ஆற்றலை அறிந்தவர் போன்று

டாக்டர்: "நர்ஸ்! காலையில் ஆபரேஷன் செய்தோமே, அந்த பேஷண்ட் எப்படி இருக்கார்?"

நர்ஸ்: "'யங்'கா, ரொம்ப அழகா இருக்கார், டாக்டர்!"

-சி. துரைசாமி



பேசினார். குப்புசாமிக்குத் தம்முடைய புத்தி சாதுரியத்தைப்பணமாக்கும் முறைகள் அற்றுப்படி. பெரிய இடத்து விவகாரங்களை எப்படி எப்படி யெல்லாம் கொண்டு செலுத்த வேண்டும் என்ற முறை தெளிவானது.

அவர் சிரித்துக் கொண்டே சொன்னார், ''இதை நான் சமாளிக்கப் பார்க்கிறேன். செலவுதான் கொஞ்சம் முன்னே பின்னே ஆகும்போலிருக்கு!''

''ஆகட்டும். பரவாயில்லே. போலீஸ் கேஸ் ஆகிவிடக் கூடாது. இனி அவ நிழல் இந்த பிராக்ளுன் இருக்கிற பக்கம் விழக் கூடாது. உம்ம சாதுரியம் எனக்குத் தெரிஞ்சதுதான். கவனமாகப் பார்த்து முடியும். இந்தப் பயலும் ரொம்ப அரண்டுதான் போயிருக்கான். இனிமே அவ இருக்கிற பக்கம் போக மாட்டான். சீக்கிரத்திலே முடியும். டெலிபோன் ஆபரேட்டருக்கு ஒரு ஆளைப் போடணும். அதுக்கும் ஏற பாடு செஞ்சிடும்!''

''சரி! இன்னிக்கு சாயங்காலமே ஹில்டா வீட்டுக்குப் போறேன். கேஷ் வேணும்!''

''என் பெர்ஸனல் அக்கௌண்ட்லேருந்து ஐயாயிரம் டிரா பண்ணிக்கும்?''

''சரி!'' குப்புசாமி எழுந்தார்.

''நித்தே இரும்! ஹிரண்மயி எப்படி இருக்கா? எனக்கு மனசே சரிஇல்லே!''

''அவளை விட்டு இந்தக் காரியத்தை...''

''சே! சே!... சரி நீர் போய் வாரும். நான் பேசிக்கிறேன்.''

குப்புசாமி வெளியேறினார். ராம் நாராயணின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

மறுநாள் பிற்பகல்.

ஹிரண்மயி முரளீதரனுடைய வாடிய முகத்தைக் கண்டு வேதனையுடன் சொன்னாள்: ''முரளி! லுக் ஹியர்! நீங்க இங்கே வேலையிலே இருக்கிறதோ இல்லே ராஜினமா செஞ்சிட்டுப் போறதோ உங்க இஷ்டம். எனக்காக நீங்க வருத்தப்படறது எனக்குப் புரியறது. ஆனால் நான் ஏற்கனவே சொன்னபடி என் வாழ்க்கை இனிமே ஒரு குறிப்பிட்ட தடத்திலேதான் செல்ல முடியும். அதுக்காக உங்க நெஞ்சத்திலே வேதனைப்பட்டுப் பிரயோசனமில்லே!''

''ரைட்டோ! நான் ராஜினமா எழுதிக் கொடுத்திடறேன். ஆனா இவங்க தகப்பனும் பிள்ளையும் அந்தக் குப்புசாமியோட உதவியோட செய்யற பாவ காரியங்களுக்குஒரு முடிவே கிடையாதா? அந்த ஹில்டா பொண்ணு கர்ப்பமாயிட்டா. சுரேஷ் அவளுக்குப் பணம் கொடுக்கிறதாச் சொல்லியிருக்கான். அவ கருவைக் கலைக்க முடியாதுன்னு தீர்மானமாச் சொல்லிட்டாளாம். சகுனி போல குப்புசாமி இருக்கான்கிற தைரியம். அந்தப் பணப் பிசாசு அவளைப் போய்ப் பாத்திருக்கான். பயமுறுத்தியிருக்கான். ஆட்களை வெச்சு அட்ரஸே இல்லாமெ செஞ்சுடுப்பிடுவேன்னு அச்சுறுத்தியிருக்கான்!''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான் தற்செயலா அவளைப் பார்த்தேன். எல்லா விவரத்தையும் சொன்னு. அவளுக்குத் திருநெல்வேலிப் பக்கம். அதனாலே மெட்ராசை விட்டுப் போயிடப் போறாளாம். கன்னிகா மடத்திலே சேரப் போறாளாம். குழந்தையை ஆர்பனேஜ்லே சேர்த்திட்டு, இவ நர்ஸிங்படிச்ச நர்ஸ் வேலைக்குப் போகப் போறாளாம். என்ன கொடுமை பார்த்தியா? இந்தச் சமுதாயத்திலே பணம்தான் சர்வ வல்லமை பொருந்தியதா இருக்குது. அது மிகுந்து இருக்கிறவங்க கிட்டே எல்லா விதமான சமுதாய விரோதப் பண்புகளும் இருக்கு. இவங்களைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை. இவனுங்க மேலே ஒரு கல்லை விட்டெறியவேண்டாம். கேவலம் ஒரு சொல்லால இவங்களுடைய பாவ ரகசியத்தை அம்பலப்படுத்தக்கூடத் திராணி இல்லாம இருக்கேன்னுதான் வருத்தமா இருக்கு!'' என்றான் அவன். குரலில் வெறுப்பும், ஆத்திரமும் கலந்து எதிரொலித்தது.

''பூரா குற்றமும் சுரேஷ் மேலேயே சுமத்தறது சரின்னு படலை. ஹில்டா அவனுக்கு ஆசை நாயகியாத்தான் இருந்திருக்கா. மேலும் அவன் திருமணம் ஆனவன்னு தெரிஞ்ச பிறகும் அவ தன்னோட தொடர்பை நீக்கிக் கொள்ளவில்லை. தான் செய்த தவறுக்காக அவ வருத்தப்பட்டுத்தான் தீரணும்.'' ஹிரண்மயி சொன்னதைக் கேட்டு அவன் திடுக்கிட்டான்.

''நீயும் ஒரு பெண்ணா இருந்து எப்படி இப்படிப் பேசறே?''

''ஐ ஆம் டெல்லிங் தி ஃபேக்ட்! நான் எப்படி என்னை எனக்குத் தெரிந்தே இழந்தேனோ அந்த மாதிரிதான் அவளும் தன் வாழ்க்கைப் போக்கை மாத்திக்கிட்டிருக்கா. இன்னிக்குத் திடீர்னு கன்னிகா மடத்திலே சேர்றதா முடிவு செஞ்சிட்டா அவ செய்த தவறு சரியாகி விடுமா? சுரேஷ் செய்தது சரிதான்னு நான் சொல்லலை. இந்த மாதிரி விஷயங்களிலே பெண்களும் உஷாரா இல்லாம பலவீனத்துக்கு அடிமையாகி, பிறகு ஆண்களைப் பழிக்கிறது சரியில்லேன்னு சொல்றேன்'' என்றாள்.

''நீ சொல்றதும் ஒரு விதத்திலே சரின்னு படறது. போகட்டும். எது எப்படி இருந்தாலும் எனக்கு இனிமே இங்கே வேலைபார்க்க விருப்பமில்லை. என் ராஜினாமாவைக் கொடுத்திடப் போறேன். அதுவும் இன்னிக்கே தரப் போறேன். நாளையிலேருந்து வரமாட்டேன். எப்பவாவது உனக்கு என் உதவி தேவைப்பட்டா நீ தாராளமா என்கிட்ட வரலாம். என்னிக்கும் என் மனசிலே உன்னைப் பத்தின நினைவு இருந்துக்கிட்டே இருக்கும். குட்பை!''

''முரளி!...'' அவள் கண்களின் ஓரத்தில் நீர் திரையிட்டது.'' ஐ அண்டர்ஸ்டாண்ட் யுவர் லவ் ஃபார் மீ! ஆனா... நான் அதுக்குத் தகுதி யில்லாதவ. நீ உனக்கு ஏற்றவளா ஒருத்தியைப் பார்த்துத் திருமணம் செய்துக்க. அதுதான் என் ரிக்வெஸ்ட்! குட்பை!''

அவன் தன் ராஜினாமாக் கடிதத்துடன் ராமநாராயணன் அறைக்குள் பிரவேசித்தான்.

(தொடரும்)



ஆன்றோர் வாக்கு

● முன்னெப்போதையும்விட, இப்போது அவனவன் ஊரோடு கிராமத்தோடு வேலை என்றில்லாமல் பட்சிகள் மாதிரி பூலோகத்தில் எங்கெங்கே வேலை உண்டோ அங்கேயெல்லாம் போகிறதென்று ஆகியிருக்கும் நிலையில் ஸ்வயம பாகம் அத்யாவசியமாகிறது. சத்தத்துக்குச் சுத்தம், ஸத்வத்துக்கு ஸத்வம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

● அதிர்ஷ்டத்தை மட்டுமே நம்பி யிருக்கக் கூடியவன் அதிர்ஷ்டம் மாறும்போது தானும் வீழ்ந்து விடுகிறான்.

— மாக்கிவெல்லி

● படிப்பில் பற்று இல்லாத அரசனாகஇருப்பதை விட ஏராளமான நூல்களை உடைய ஏழையா யிருப்பதையே விரும்புவேன்.

—மக்காலே

● மனத்தூய்மை உடைய சாதகன் அபூர்வமாகத் தனது இலட்சியத்தை மறந்துபோனாலும் வாழ்க்கையில் நிகழும் ஏதாவது ஒரு சாதாரண நிகழ்ச்சியின் மூலமும் விழிப்படைந்து உடனே தனது இலட்சியத்துக்குத் திரும்பிப் போய்விடுவான்.

—பகவான் ராமகிருஷ்ணர்

அஞ்சு இஞ்ச் இடைவெளி

5

பூனைகள் தவம் செய்தன. நாய் காரணம் கேட்டது. "எலிமழை பொழிய வேண்டும்."
நாய் சொன்னது: நான் கற்றது பொய்யா? நம்பிக்கையோடு வேண்டினால்
எலும்புகள் அல்லவோ விழும்? எலிகளா விழும்?
– கலீல் கிப்ரான்

பஞ்சரத்னகீர்த்தனையை அஞ்சு கட்டைக் குரலில் தன் இஷ்டத்துக்கு — மற்றவர்களின் கஷ்டத்துக்கு — பாடிக் கொண்டிருந்தார் பஞ்சாட்சரம். அவர் பெயரை 'அஞ்சு புகழ்' பஞ்சாட்சரம்என்றுசொன்னால்தான்நிமிர்ந்து பார்ப்பார்! திருப்புகழ் தெரியுமோ இல்லையோ, அவர் தெரு புகழ் பெற்றதே அவரால்தான். அந்தக் காலனியில் முதன் முதலாக கௌரவமாகக் குடியேறினவர்களில் அஞ்சில் ஒருவர். கௌரவமான பெயராகப் பஞ்சபாண்டவர் காலனி என்று நாமகரணம் சூட்டினவர். லாட்டரி பரிசில் பெருந் தொகை வந்திருக்கிறது. அஞ்சு பேர் கூட்டணி. 'அஞ்சிலே ஒன்று பெற்றான்' என்பது போல இவருக்குக் கிடைத்ததோ கணிசமான பங்கு.

அன்றைய தினசரியில் அஞ்சாம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தைப் பார்த்து, படித்துத் திகைத்தவர் பலர். அஞ்சு இஞ்ச் இடைவெளிகொடுத்து அஞ்சு விளம்பரங்கள்! சினிமா உலகம் அவரைக் கண்டு அஞ்சியது.

'புது முகம்' பத்திரிகை ஆசிரியர் உடனே தம் நிருபர்களை அனுப்பி வைத்தார். முரளி அண்டு கருணி ஸ்கூட்டரில் கிளம்பினார்கள்.

போகும் வழியில் பஸ் ஸ்டாண்டில் இளஞ் சிட்டுகளின் கூட்டம். ஸ்கூட்டரை நிறுத்தித் இடீர் பேட்டி காண 'ஆரம்பித் தார்கள்.

''இன்னைக்கு வந்த சினிமா விளம்பரம் பற்றி என்ன கருத்து? 'அஞ்சு இஞ்சு இடைவெளி' பற்றி?''

''ஓ....அந்த டைரக்டரின் முதல் படமாமே? அஞ்சு நாள் கூட ஓடாது'' ஒரு ஜீன்ஸ் சொன்னது.

பஞ்சபாண்டவர் காலனியில் ஸ்கூட்டர் நுழைந்து அஞ்சாம் நம்பர் வீட்டை அடைந் தார்கள்.

காலிங் பெல் பொருத்தப்படவில்லை.

''ஸார்.... ஸார்.... ஸார்....''

''ஸார்.... ஸார்....''

''ஏய் முரளி நிறுத்து. மொத்தம் அஞ்சு சார் ஆச்சு. அசைஞ்சு அசைஞ்சு வருவார் பார்.''

ஹாலில் ஊஞ்சல் நின்றது. பஞ்சாட்சரம் எழுந்து வந்தார். கதவைத் திறந்தார். இளமைக் கோலத்தில் இளஞ் சோடிகள்.

''வாழ்...ங்க... வாழ்...ங்க....'' (வெற்றிலை அண்ட் புகையிலையால் உள் நாக்குக் குழப்பம்!) கூச்சப்படாமல் துப்பினார். முரளியும் கருணியும் பார்வையால் பேசினர். மனுஷன் இப்படித் துப்பித் துப்பியே செம்மண் ரோடு போடுவார்.

பஞ்சாட்சரம் ஊஞ்சலில் அமர்ந்தார். அவருடைய எழுபது கிலோ எடையைத் தாங்காமல் ஊஞ்சலின் நான்கு கம்பிகளும் அஞ்சு முறை அழுதன.

பேட்டி தொடங்கிற்று.

முரளி: ''ஏன் சார்... உங்களுக்கு அஞ்சு புகழ் எப்படி வந்தது? அறிமுகத்துக்கு அவசியம்.

பஞ்சா: நான் வீட்டிலே அஞ்சாவது பிள்ளை. வாயிலே அஞ்சு விரலையும் போட்டுப் பழக்கம்.

கருணி: இப்பக் கூடவா?

பஞ்சா: சே, சே... இல்லே! அம்மா போயிட்டாங்க. அவங்க வலது கைவிரல் களைத்தான் சேர்த்துப் போட்டுக்குவேன்... ஹி....ஹி.... அஞ்சாம் கிளாஸ் வரைதான் படிச்சேன்.



முரளி: அஞ்சு பேர் சேர்ந்து வாங்கின டிக்கட்டிலே லாட்டரி உங்களுக்கு எவ்வளவு வந்துச்சு?''

பஞ்சா: அஞ்சிலே ஒரு பங்கு.... சினிமா எடுக்கப் போறேன்.

கருளி: அதென்ன டைட்டில்? அஞ்சு இஞ்ச் இடைவெளி?''

பஞ்சா: அது ஒரு ஃபாமிலி சப்ஜெக்ட். தையற்காரர் அப்பா. அவர் பொண்ணு ரவிக்கை போட்டுக்கிட்டு பஸ்லே ஏறுது.

முரளி: ரவிக்கை மட்டும்தானு? (முனகல்)

பஞ்சா: ரவிக்கையோட முடியற இடமும் இடுப்புப் புடைவை ஆரம்பமாகிற இடமும் அஞ்சு இன்ச் இடைவெளியிலே இருக்கு. கதை, வசனம், பாடல், இசை, டைரக்ஷன் ஆக அஞ்சும் நான்தான்.

கருளி: யார் சார் கதாநாயகி? 'அஞ்சு?' புது முகமாமே?

பஞ்சா: ஆமாம். இப்பத்தான் ப்ளஸ் டூ படிக்குது. டிராமாவிலே நடிச்சுப் பழக்க மிருக்கு.

முரளி: எங்கே ஸார் இருக்கு வீடு?

பஞ்சா: கோடம்பாக்கத்திலே இருக்கு... மகாலிங்கபுரம், மன்மதன் நகர்லே, ரதித் தெரு, நம்பர் ஸ்வீட் ஸெவண்டீன்.

என்று சொன்னவர் சற்றே கண்களை மூடினர். திறந்தபோது முரளியும் கருளியும் மறைந்து விட்டனர்.

◘ ◘ ◘

மகாலிங்கபுரம், மன்மதன் நகரில், ரதித் தெரு, கரும்புகளை நட்டது போல் கேட்.

கதவில் கை வைத்ததும் இஷ்டப்பட்ட பெண் வளைந்து கொடுப்பது போல் திறந்து கொண்டது. படி ஏறி காலிங் பெல்லை அமுத்தினர். ஹாலில் சப்தம் வரவில்லை.

பாமா கோபாலன்

ஆனால் கதவு திறக்கப்பட்டது. வடிவம் ஸ்ரீதேவி; கண்களில் செறுக்கு. மேனியில் குலுக்கு.

''பெல் சத்தம் வராதுங்க. இன்னும் கனெக்ஷன் கொடுக்கலே.''

முரளியும் கருணியும் உள்ளே நுழைந்தனர்.

''ரொம்ப சிக்கனமான பேட்டிதான்.... உங்களைப் பற்றி....'' முரளி ஆரம்பித்தான்.

''...என் பேரு அஞ்சலே. ப்ளஸ் டூ படிக்க இன்னும் இரண்டு வருஷம் இருக்கு... எங்க ஸ்கூல் டிராமாவிலே நடிச்சேன். பஞ்ச பூதங்கள்னு பேரு. அப்போ டைரக்டர் ஸார் பஞ்சாட்சரம் வந்திருந்தாரு!''

''தலைமை தாங்கவா?'' — கருணி.

''இல்லே டிராமாவை எழுதினவரே அவர் தான். நான் சின்ன அஞ்சாவது பூதம்... ரொம்பப் பிடிக்கப் போச்சு.''

''பேய் பிடிச்சிருக்குன்னு கேள்விப்பட்டிருக்கோம். பூதம் பிடிச்சிருக்கு...'' என்று முனகினன் முரளி.


''அது சரிங்க... அஞ்சு இன்ச் இடைவெளி கதை பிடிச்சிருக்கா?... என்ன தீம்?''

''தீமையா ஒண்ணும் சொல்லலே.... தலைமுறை இடைவெளியை — அஞ்சு இன்ச் இடைவெளின்னு ரொம்ப ஸிம்பாலிக் ஷாட்னு சொன்னரு.''

''அட எப்படிங்க?''

''அம்மா சொல்றதை வேலைக்குப் போற பொண் கேக்கறதில்லே. டிரஸ் கன்னு பின்னுன்னு போட்டுப்பா. அம்மா — வாய்; பொண் — காது... காதுக்கும், வாய்க்கும் அஞ்சு இன்ச் இடைவெளி.:. ஜெனரேஷன் காப்!''

முரளியும் கருணியும் காதுக்கும் வாய்க்கும் உள்ள இடைவெளியை அளந்தனர். சத்திய



மாக அஞ்சு இன்ச் இருக்காது! நமக்கேன் வம்பு?

''ஏங்க இன்ச் போய் சென்டி மீட்டர் வந்தாச்சே?''

''டைரக்டர் சென்டிமென்டல் டைப்... செ.மீ. வேண்டாம்னு விட்டிருப்பாரு.''

''கடைசியா ஒரு கேள்வி. எந்த மாசம் பிறந்தீங்க?''

''அஞ்சாம் மாசம் பொறந்தேன்.''

''ஐயோ....'' — முரளி கருணி.

''அதாங்க... மே மாசம். அஞ்சுதானே?''

முரளி ஆச்சரியத்துடன் கேட்டான். ''பஞ்சாட்சரம் மாதிரியே பேசறீங்களே. நல்ல டிரெயினிங்.''

அஞ்சு நிதானமாகச் சொன்னாள்: ''அவர் பெண்தானே நான்? வேறெப்படிப் பேசுவேன்? நேத்திக்கு இந்த அத்தை வீட்டுக்கு வந்தேன். இப்பத்தான் நீங்க வர்றதுக்கு முன்னாடி அப்பா அஞ்சு தடவை போன் செய்துட்டாரே உங்களைப் பற்றி!''

முரளியும் கருணியும் மயக்கமாயினர். நீங்க எப்படி?

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்



அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்

ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

சுலபமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை

- உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.
- கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று கேடு தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.
- பயன் : கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்




DC-G-74 TM

கங்கா காவிரி ஆபரேஷன்!







✱ ராமகிருஷ்ணன்

✱ டாக்டர் வீரா ரெட்டி

55 வயது மதிக்கத் தக்க ராமகிருஷ்ணனுக்கு வலது காலில் வலி இருந்து கொண்டே இருந்தது. பல டாக்டர்களிடம் காண்பித்து மருந்து உட்கொண்டும் கூடக் குறையவில்லை. தீவிரமாகியது!. வலது கால் பெரு விரலை Gangrene என்று சொல்லக்கூடிய வியாதி அரிக்கத் தொடங்கி விட்டது.

கடைசியில் அவர் கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஒரு நர்சிங் ஹோமுக்கு வந்தார். டாக்டர் பரிசோதித்துப் பார்த்தார். இதயத்திலிருந்து எல்லா இடத்துக்கும் பாயும் ரத்தக் குழாய்கள் காலில் ஓரிடத்தில் இறுகித்தடைப்பட்டு விடுவதுதான் (Thickering of Artery) வலியின் மூலகாரணம் என்று தெரிந்தது. ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக சிறு சிறு கிளினிகல்சோதனைகள்செய்தார். தொடர்ந்து ஐந்தாறு எக்ஸ்ரே எடுத்தார். நிறைய எக்ஸ்ரே எடுத்தால்தான் தமனி எங்கெங்கு தடைப்படுகிறது. தடைப்பட்ட இடத்தின் பரப்பளவு போன்றவற்றைக் கண்டுகொள்ள முடியும்.

டாக்டர் ஆபரேஷன் செய்வது என்ற முடிவுக்கு வந்தார். ரத்தக் குழாய்களைச் சீராக மாற்றி அமைக்க வேண்டும். குறிப்பாகத் தமனி ஓரிடத்தில் அடைபட்டுக் கிடக்கிறது. அதை அடுத்துள்ள பகுதியை சற்றுத் தள்ளி இருக்கும் வேறொரு சக்தி உள்ளதமனியுடன் இணைத்து ரத்த ஓட்டத்தை நேராக்க வேண்டும்.

எதை வைத்து இணைப்பது?

நமது உடலிலேயே ஆச்சரியகரமான பாகங்கள் உள்ளன. இரண்டு சிறுநீரகங்கள் இருப்பது போல் உபரியான சிரை காலில் உள் பக்கம் இருக்கிறது. இதை எடுத்து இணைத்து வெற்றிகரமான ஆபரேஷன்செய்து முடித்தார்.

''கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது என்கிறார்களே, அது மாதிரிதான் இதுவும். ரத்தக் குழாய் அறுவைச் சிகிச்சையில் இதற்குப் பெயர் Bypass operation'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் டாக்டர் வீரா ரெட்டி. தொடர்ந்து, ''இந்த நோயாளி சரியான சமயத்தில் வந்ததால் கால் கட்டை விரலை மட்டும் எடுக்க வேண்டி நேர்ந்தது; தாமதமானால் சீரியஸாகப் போயிருக்கும்!'' என்றார்.

நமக்கு ஓர் அடிப்படையான சந்தேகம் எழுகிறது. எல்லாருக்கும் உபரியான குழாய்கள் இருக்குமா? இல்லாவிட்டால்?

''இவருக்கு அந்த உபரி vein அதிர்ஷ்டவசமாக நல்ல நிலையில் இருந்தது. இல்லாவிட்டால் செயற்கைப் பகுதி வாங்க வேண்டும். நல்ல தரம் இருப்பதில்லை. வெளிநாட்டிலிருந்து வரவழைத்தால் செலவு அதிகம்!''


'இந்த வகை ஆபரேஷன் செய்துகொண்டவர்கள் நார்மலாக நடமாடலாமா?'

''தாராளமாக. சில விஷயங்களில் கவனமாக இருப்பது அவசியம். சிகரெட் பிடிப்பது கூடாது. நிகோடின் உடலைக் கெடுத்து விடும். கொழுப்புப் பதார்த்தங்களைச் சேர்க்கக் கூடாது. சதையைக் குறைக்க வேண்டும்''

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்த Vascular Surgery செய்து வருகிறார் வீரா ரெட்டி. வெளி நாட்டில் பட்டம் பெற்றிருக்கிறார். ''விலை உயர்ந்த உபகரணங்கள் தேவை. அதனாலேயே பலர் இதைச் செய்ய முன்வருவதில்லை'' என்று சொல்கிற டாக்டர், இந்த ரண சிகிச்சை குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். அரசாங்கம் ஒத்துழைத்தால், ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த செலவில் ஆபரேஷன் செய்யலாம் என அபிப்பிராயப்படுகிறார்.

-வாதூலன்

வட்ட மேஜை



● பெரம்பூர் ரயில் நிலையத்துக்குக் கிழக்கில் இருக்கும் பாதாளச் சுரங்கப் பாதை மக்கள் நடமாட முடியாத நிலையில் இருந்ததை விளக்கி 4–7–82 கல்கியில் பிரசுரித்திருந்தீர்கள். இந்த வாரம் நான் அந்தப் பக்கம் போனபோது பார்த்தேன். பாலத்தினடியில் பளிச்சென்று சுத்தம் செய்யப்பட்டு மக்கள் நடமாட்டத்துக்கு அழகாக வழி செய்திருக்கிறார்கள். நீங்கள் பிரசுரித்த நல்ல நேரம் பாலத்துக்கு விடிவுகாலம்!

சென்னை-11 அபிராமி தாசன்

● தராசு பதிலில் டாக்ஸி டிரைவர்கள் பற்றிப் படித்தேன்.

ஹாங்காங் விமான நிலையத்தில் வெளி நாட்டுப் பயணிகள் ஒவ்வொருவருக்கும் அழகிய கைப்பை ஒன்று தருகிறார்கள். (இலவசமாகத்தான்.) அதில் ஹாங்காங் பற்றிய அனைத்துத் தகவல்களும் உள்ளன. அவற்றில் என்னைக் கவர்ந்தது இரண்டு.

ஒன்று: Courtesy award voucher book' நல்ல சேவைக்கான பரிசுக் கூப்பன்கள்' அடங்கிய புத்தகம். நம்மை மிகவும் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளும் டாக்சி டிரைவர், ஹோட்டல் சிப்பந்தி, மதுபானக் கடைச் சிப்பந்தி, போலீஸ்காரர், நைட் கிளப் சிப்பந்தி முதலியோருக்குக் கொடுக்கலாம். அதை அவர்கள் சுற்றுலாத் துறைக்கோ, தனிப்பட்ட சுற்றுலா ஏஜன்சிக்கோ அனுப்பினால் மனம் கவரும் பரிசுப் பொருட்கள், மற்றும் காரில் ஒட்டக் கூடிய நன்னடத்தை பேட்ஜுகள் அளிக்கிறார்கள். எனவே நமக்கு ராஜ மரியாதை நடக்கிறது.

இரண்டு: இதற்கு நேர் மாறானது. 'டாக்ஸி டிரைவரைப் பற்றிய புகார் மனு. அதை நிரப்பி அருகில் உள்ள தபால் பெட்டியில் (ஸ்டாம்ப் தேவையில்லை) போட்டுவிட்டால் உடனே டிரைவிங் லைசென்ஸ் 'சஸ்பெண்ட்' செய்யப்படும். விசாரணை, தண்டனை எல்லாம் மிகக் கடுமை. மீனம்பாக்கத்திலிருந்து எக்மோருக்கும் சென்ட்ரலுக்கும் ரூ. 200 அழுத அபாக்கியவான்கள் பெருமூச்சு விடவும்!

தேனி டாக்டர் என்.ஆர்.டி. ராஜ்குமார

● பெயரை மாற்ற ரூ. 15க்கு போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும் என 'லேனா'வின் "என்ன செய்ய வேண்டும்?" என்ற புத்தகத்தின் முதல் பாகத்திலிருந்து எடுத்துப் பிரசுரித்திருந்தீர்கள். அதற்கும் தற்போது விலைவாசி ஏறிவிட்டது. பெயரை மாற்ற ரூ. 49.50 செலுத்த வேண்டும்.

சென்னை-34 கே. பன்னீர்செல்வம்

● கல்கியைக் கையில் வாங்கியவுடன் அட்டையைப் பார்த்ததும் மேலே பல காக்கைகள் பறந்தன. சூ... சூ... என்று விரட்டவே நேரம் சரியாக இருந்தது.

பரசலூர் ஆர். நாகராஜன்

● ஹிந்துஸ்தான் டைம்ஸ் குறிப்பிட்டிருக்கிற தகுதிகளுக்காக திரு ஜெயில் சிங் ஜனாதிபதியாக்கப்படவில்லை. யாரை நிறுத்தினாலும் அவர்கள் இந்திராவின் தலையாட்டிப் பொம்மைகளாகச் செயல்படுவார்கள் என்பதும், யார் நிறுத்தப்பட்டாலும் இந்த தி.மு.க. மற்றும் அ. தி. மு. க.வினர் விழுந்தடித்துக் கொண்டு ஆதரிப்பார்கள் என்பதும் இந்திராவுக்கு நன்கு தெரியும். சீக்கியர்களைச் சமாதானப்படுத்த வேண்டும் என்கிற இந்திராவின் எண்ணம் மட்டுமே ஜெயில் சிங்கிற்குச் சாதகமாக அமைந்துள்ளது.

ரப்பர் ஸ்டாம்பை அட்டையில் போட்டதற்குத் திரு கன்னுவை அட்டையில் போட்டுக் கௌரவித்திருக்கலாம்.

கெங்கவல்லி கி. முருகவேள்

● எங்க எம். எல். ஏ.க்களைப் பார்த்து வீடியோ பக்தர்கள்னு பெரிசா தலையங்கம் எழுதிட்டிங்க. என் மனசு என்ன பாடு படுது தெரியுமா? நியாயமான முறையிலே கஸ்டம்ஸுக்கு டியூட்டி கட்டி (நாற்பதாயிரமோ ஐம்பதாயிரமோ) கொண்டு வந்தாலும் இந்தப் பத்திரிகைக்காரங்க பெரிசு படுத்திக் காண்பிக்கிறாங்களேங்கிறதை நினைக்கும் போது உண்மையிலேயே வயிறு பத்திக்கிட்டு கப்புகப்புன்னு எரியுதுங்க.

தூத்துக்குடி-2 இறைமணி

● வடார்க்காடு (என். ஏ.) என்றாலே நக்சலைட் ஏரியா என்று பொருள் கொண்டு எங்கள் திருப்பத்தூர்ப் பகுதியிலிருந்து வேலை தேடிச் செல்லும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க மறுத்து வந்தார்கள். இப்போதுதான் அந்த நிலை மாறி வருகிறது. இந்த நேரத்தில் நீங்கள் மீண்டும் அதை "நக்சலைட்டைத் தேடி..." என்ற பேட்டிக் கட்டுரை மூலம் ஞாபகப்படுத்தி விடுவானேன்?

திருப்பத்தூர் வி. ரங்கநாதன்

● கல்கியில் நான் முதலில் படிப்பது விஞ்ஞானப் பக்கங்களைத்தான்.

தஞ்சாவூர் தேவதாஸ்



செம்பியன்

ரவிக்குல திலகன்

28

குவளையின் இல்லத்திலேயே அராபியன் வேடத்தைத் துறந்து இளவரசனாக மாறிய விஜயாலயன், சோழ மாளிகையின் புறத்தே குதிரை லாயங்கள் இருந்த பகுதிக்குச் சென்றான்.

நள்ளிரவுக்கு மேல் இளவரசரை அங்கு கண்ட காவலர்கள் அதிசயமடையவில்லை. திடீரென்று நினைத்துக் கொண்டு விஜயாலயன் நகர் வலம் வந்து காவலர்களின் விழிப்புணர்வைப் பரிசோதிப்பது வழக்கம் தான்.

வணங்கி நின்ற அவர்களை வாழ்த்திவிட்டு ஒருவனிடமிருந்து தீப்பந்தம் பெற்றுக் கொண்டான். ''குதிரைப் பராமரிப்பாளர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தார்களா?'' என்று வினவினான்.

''என்றும்போல் இன்றும் இம்மியளவும் பிசகின்றி நடந்து கொண்டிருக்கிறார்கள் பிரபோ! ஆனால் பரணிதான் இன்னமும் ஒத்துழைக்க மறுக்கிறது. நாளுக்கு நாள், வேளைக்கு வேளை மெலிந்து வருகிறது.''

விஜயாலயன் இதயம் பதை பதைத்தது. 'பரணிக்கு என்ன உடம்பு?' என்று கேட்க நா நுனியில் வந்துவிட்ட வார்த்தைகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். எல்லாம் தெரிந்தவன் போல நடித்து, ''கவலை



வேண்டாம்! சரியாகிவிடும். இந்த நோயின் தன்மைகள் பற்றிப் புதிதாகச் சில தகவல்கள் எனக்குத் தெரிய வந்துள்ளன" என்று கூறியபடி வாசலைக் கடந்து லாயங்களுக்குள் தான் ஆரோகணித்து வந்த குதிரையையும் வழி நடத்தி அழைத்துப்போனான். உடன்வர யத்தனித்த வீரனை, "எனக்குத் துணை தேவையில்லை; கடமையைக் கவனி" என்று தடுத்துவிட்டு மேலே சென்றான்.

தொலைவில் ஒரு கனைப்புச் சத்தம். 'பரணி! எத்தனை புத்தி சாதுர்யம்! நான் வந்து விட்டதை மோப்பத்தால் உணர்ந்து மகிழ்ச்சியுடன் கனைக்கிறதே! என்னைப் பிரிந்திருந்து சரியாக உணவு உட்கொள்ளாமல் மெலிந்துவருகிறதாமே! எத்தனைவிசுவாசம்!' தான் நடத்தி வந்த குதிரையை ஒரு கொட்டடியில் அடைத்து அதற்கு ஆகாரமும் நீரும் இருக்கிறதா என்று கவனித்த கையோடு விஜயாலயன் நடையைத் துரிதப்படுத்திப் பரணியை நெருங்கினான். அது அவனைக் கண்டதும் துள்ளியது. 'ஏன் என்னை விட்டுப் பிரிந்தாய்? இத்தனை காலமாக எங்கே போனாய்?' என்றெல்லாம் கேட்டுக் கோபிப்பது போல இடித்தது. பிறகு அவன் திரும்பி வந்து விட்டதால் ஆனந்தமுற்று உரசியது. அவன் தோள்களைப் பற்றி இலேசாகக் கடிக்கவும் செய்தது! அதனை முதுகின் மேல் தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்தினான். புல்லெடுத்து ஊட்டினான். கொள்ளும் நீரும் அருகில் உள்ளனவா பார்த்தான். "நான் திரும்பி வந்துவிட்ட மகிழ்ச்சியில் ஒரேயடியாகத் தீனி தின்று திணறாதே! படிப்படியாக அதிகரித்துக்கொள்! உன்னைப் பராமரிப்பவனிடம் சொல்லி வைக்கிறேன்" என்று கொஞ்சலாகப் பேசினான். மேலும் சற்று நேரம் அதன் வாடிய உடலை வருடித் தந்துவிட்டுப் பிரிந்தான். அடுத்து சினன் தன் குதிரையைக் கட்டி வைக்கும் கொட்டிலை அடைந்தான். அதனை நகர்த்தி, இழுத்துக் கட்டி, தரையில் மேடிட்டுப் பரவிக் கிடந்த புல்லை அகற்றி, அதனால் மறைக்கப்பட்டுத் தரையோடு தரையாக இருந்த கதவை உயர்த்தித் திறந்தபோது முதன் முதலாகக் குவலை இந்தச் சுரங்கப் பாதை வழியே அரண்மனையில் தான் வாழ்ந்த பகுதிக்கு வந்து சேர்ந்த அந்தத் தினம் விஜயாலயனுக்கு நினைவு வந்தது! அதன் பின் எத்தனை நிகழ்ச்சிகள்! எத்தனை பயணங்கள்! எத்தனை ஆபத்துக்களைக் கடந்து எத்தனை சாதனைகள்!

இதுவரை எல்லாமே எதிர்பார்த்தபடி நடந்து வந்திருப்பது போலவே இறுதி வெற்றியும் நிகும்பசூதனி அருளால் கைவசமாக வேண்டும்!

குறுகலான படிகளில் இறங்கித் தலைக்கு மேலே கதவை மூடினான். தீப்பந்தத்தின் ஒளியில் சுரங்கப்பாதை நீண்டு நெளிந்தது மலைப் பாம்பாக. பழக்கப்பட்டவனாக நடந்து மீண்டும் செங்குத்தாக உயர்ந்த படிகளில் ஏறிக் கதவைத் தள்ளித் திறக்க முயன்றான். தரையோடு தரையாக இருந்த அந்தக் கதவு மேலே தாளிடப்பட்டிருந்ததுபோலும். சங்கேத ஒலி எழும்புமாறு விட்டு விட்டுத் தட்டினான். மும்முறை அவ்வாறு தட்டவும் தாள் திறக்கப்படும் ஓசை கேட்டது. பிறகு ஒளிச் சதுரம் தெரிந்தது. மேலே ஏறினான். திறந்த கதவையும் அதனை இதுகாறும் மறைத்திருந்து இப்போது சுருட்டப் பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தையும் பார்த்த விழிகள் மேலே உயர்ந்தன.

அங்கே இன்னொரு விஜயாலயன்! பிரதிபிம்பமா? இல்லை, தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து வந்திருந்த அந்த உருவம் எண்சாண் கிடையாக விழுந்து வணங்கித் தான் ஆகவமல்லன்தான் என்பதை மெய்ப்பித்துக் கொண்டது.

"ஆகவமல்லா! நலமா? குறை ஏதுமின்றி நடந்து கொண்டாயா?" என்று கேட்ட விஜயாலயன் தீப்பந்தத்தைச் சுவர் வளையமொன்றில் பொருத்தினான்.

"தங்கள் அந்தரங்கப் பணியாள் நுளம்பனுக்குக்கூட சந்தேகம் எழாதவாறு நடந்து கொண்டேன், பிரபோ! ஆனால்...."

"ஆனால்?"

''இளவரசே! சொல்லத் தயக்கமா யிருக்கிறது. நாக் கூசுகிறது. தங்கள் கோபத்தை எண்ணினால் அச்சமாகவும் இருக்கிறது.... தங்கள் தந்தை...''

''அறிவேன் ஆகவமல்லா! என் பிரிவைத் தாங்காமல் வாடிய உயிர்கள் இரண்டு. ஒன்று பரணி. இரண்டாவது என் தந்தை. நான் திரும்பி வந்து விட்டதால் இனி பரணியும் கொழுக்கும்; தந்தையும் உடல் தேறி விடுவார்.''

''பிரபோ, அரண்மனை வைத்தியர்கள்...''

''மருத்துவர்கள் உடல் கோளாறுகளை அளவிடுவார்கள். அவர்களுக்கு மனத்தின் மர்மங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆத்ம சக்தி பற்றி அறியார்கள். என் தந்தைக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அவருக்கு உடல் நலமில்லை என்று பேசப்படுவதையே நான் விரும்பவில்லை.''

''சித்தம் பிரபோ!''

''ஆகவமல்லா! நீ இந்த வேடத்தைக் களைய வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஆனால் வேறு பணி உனக்குக் காத்திருக்கிறது!''

''உத்தரவிடுங்கள் இளவரசே!''

''உன் துரோகத்தை மன்னித்ததுடன் பெரிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்தார் என் தந்தை.''

''இதை விடவும் பெரிய பொறுப்பாகக் கொடுங்கள். இதை விடவும் சிறப்பாக நிறைவேற்றுவேன்.''

''என் தந்தை உன்னிடம் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. எனவே நானும் உன்னை நம்புவதெனத் தீர்மானித்து விட்டேன்.''

மகள்: என்னை நிச்சயமாக் கல்யாணம் செய்திக்கிறேன்னு அவர் சொல்லி இருக்காரு. என்னைப் பத்திகவலைப் படாதிங்க அப்பா!

அப்பா: உன்னைப் பத்தி கவலைப் படலேம்மா அந்தப் பையனை நினைச்சுத்தான் கவலைப் படறேன்! —எம். வி. செல்லம்



''கற்பக விருட்சத்தினடியில் நிற்பவனிடம் காமதேனுவையும் அனுப்பி வைக்கிறீர்கள்! என்னை விடவும் பாக்கியசாலி யார்?''

''இதில் ஆபத்தும் நிறைய உண்டு. ஆனால் அவற்றை நீ வலியச் சென்று எதிர்கொள்ளக் கூடாது! சாமர்த்தியமாகச் செயல்பட வேண்டும்.''

''தங்கள் சித்தப்படி நடந்து கொள்வேன்; திட்டத்தை விவரியுங்கள்!''

''கடினமான காரியம்தான். சொல்லுகிறேன். கவனமாகக் கேட்டுக்கொள்'' என்ற விஜயாலயன் தொடர்ந்து பேசினான்:

''நான் வந்த இந்தச் சுரங்கப் பாதை வழியாக நீ திரும்பு. ஒரு நல்ல குதிரையைத் தேர்ந்தெடுத்துக்கொள். காவலர்கள் வாயத்துள் சென்று பார்வையிட்ட நான் திரும்பிச் செல்வதாக எண்ணுவார்கள். நேரே குவளையின் இல்லம் செல். அங்கு மாறு வேடம் தரித்துக்கொள். குவளைக்கு என் திட்டங்கள் தெரியும். ஒத்துழைப்பான்.''

''பிறகு...?''

''நீ காஞ்சி செல்கிறாய்.''

''சென்று...?''

''பாராசிரயன் பல்லவ சக்கரவர்த்திக்குத் தூது அனுப்பியுள்ளான். அந்த ஓலையைப் படித்துவிட்டு விடேல் விடுகு தருவார் பல்லவ வேந்திரர். அவருடைய அந்த ஆணை நான் எதிர்பார்க்கின்ற ஒன்றாகத்தான் அநேகமாக இருக்கும். அவ்வாறெனில் நீ கலையின்றித் திரும்பிவிடலாம்....''

''ஒருவேளை நீங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறான ஆணையாக இருக்குமானால்...?''


''அந்த விடேல் விடுகு பாராசிரயனை எட்டக் கூடாது! இடைவழியில் ஆணை மாறிவிட வேண்டும். பாராசிரயனுக்குக் கிடைக்கின்ற ஆணை என் மனத்திலிருக்கின்ற கட்டளையாகவே இருக்க வேண்டும்!''

''பாராசிரயனுக்குக் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பி எதிர்பார்க்கும் அந்தச் செய்தி என்ன இளவரசே! அது தெரிந்தால் தானே நான் செயல்பட முடியும்?''

''மெய்தான். கேட்டுக்கொள்! 'விஜயாலயன் படை திரட்டுவது பல்லவ மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்காக இராது; முத்தரையன் குல மகள் இவனை நிராகரித்துவிட்டதால் கோபம் கொண்டு தஞ்சை மீது விஜயாலயன் படையெடுக்கலாமென்று தோன்றுகிறது. இந்தச்சமயம் பார்த்து முத்தரையன், பாண்டியன் பக்கம் சாய்ந்து வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறான். எனவே விஜயாலயனுடைய தஞ்சைப் படையெடுப்பை நாம் நமது மேலாதிக்கப் படைபலம் கொண்டு தடுக்க வேண்டாம். விஜயாலயன் வென்றால் நாம் அவனைக்கொண்டு முத்தரையனுக்குப் பாடம் கற்பித்ததாகச் சொல்லிக் கொள்ளலாம். விஜயாலயன் தோற்றாலோ நமக்கு ஏதும் நஷ்டமில்லை. 'இனியேனும் ஆக்கிரமிப்பு முயற்சிகளைக் கைவிட்டு அடங்கி இரு' என எச்சரித்து விட்டுவிடலாம்.' — பல்லவேந்திரனின் ஆணை இத்தகையதாக இருக்க வேண்டும்.''



ADWAVE/KALI/2089



ADSERVICE-S-1315

''புரிந்துகொண்டேன் பிரபோ!''

''உன் மாறுவேடம் கலைந்துவிடாமல் கவனித்துக்கொள்! எவ்வாறாயினும் அடுத்துவரும் பௌர்ணமிக்கு நாலு தினங்கள் முன்னதாக நீ நல்ல செய்தியுடன் திரும்பிவிட வேண்டும்.''

''காரியம் முடிந்ததாகவே கருதுங்கள் இளவரசே!'' என்று கூறி ஆகவ மல்லன் விடைபெற்றான்.

● ● ●

தந்தையைக் காண இளவரசர் நள்ளிரவுக்கு மேல் வந்ததைக் காணக் காவலர் யாரும் வியப்படையவில்லை. மாறாக விஜயாலயனின் பாசத்தை எண்ணி நெகிழ்ந்தார்கள்.

உட்கார்ந்தபடியே உறங்கிவழிந்து கொண்டிருந்த வைத்தியர் விஜயாலயனால் தட்டி எழுப்பப்பட்டவுடன் பதறி எழுந்து நின்று நடுங்கினார். அவரை வெளியே அனுப்பிவிட்டுத் தீப ஒளியில் சுற்று முற்றும் பார்த்து அறையில் வேறு யாரும் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு கட்டிலில் தந்தை அருகே அமர்ந்தான் தனயன். உயரமான பஞ்சணைகளின் மேல் முதுகைச் சாய்த்த நிலையில் கால் நீட்டிப் படுத்திருந்தார் குமாராங்குசன்.

அருகில் அமர்ந்து அவர் அகன்ற மார்பின் இடப்புறத்தை இலேசாகத் தடவிக்கொடுத்தான் விஜயாலயன்.

''மகனே, வந்துவிட்டாயா?'' என்று மெலிதான குரலில் கேட்டார் தந்தை.

''எப்படித் தெரிந்துகொண்டீர்கள் அப்பா நான் ஆகவமல்லன் இல்லை என்று?''

''மைந்தனுக்கும் மாற்றானுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடுமா? என் கண் பார்வை மங்கி இருக்கலாம்; உடல் நலமும் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆயினும் பெற்ற மகனுடைய வருடலை இனம் கண்டு கொள்ளமுடியாத முட்டாளாகி விடவில்லை! நான்!''

அவர் கரங்களை எடுத்துக் கன்னங்களில் ஒற்றிக் கொண்டான். ''அப்பா! நான் திரும்பி வந்துவிட்டேனில்லையா? சீக்கிரமே உடல்நலமுற்று முன்னைப் போல் நடமாட ஆரம்பித்து விடுவீர்கள்!''

''மைந்தா! சில நாட்களுக்கு முன் இடி தாக்கினாற்போல் என் இடது தோளில் ஒரு வலி. வைத்தியர்கள் இதய நோய் என்கிறார்கள். நீண்ட காலம் நான் உயிர் வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை. அதற்காக நான் வருந்தவும் இல்லை. இந்த உலகில் என் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டேன் என்றே கருதுகிறேன். என் மகனை மாவீரனாக வளர்த்து விட்டேன். அவனுக்கு சுதந்திர ஆர்வத்தை ஊட்டியதுடன் சோழ நாடு அதன் தொன்மையான பெருமையைத் திரும்பப்பெற்றுப் பேரரசாக விளங்க வேண்டும் என்ற ஆசையையும் அவனிடத்தில் உருவாக்கி விட்டேன். என் கடமை முடிந்தது. இனி உன் பொறுப்பு!''



சீர்காழி நீங்களுமா?

ஏவிஎம். ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் நடந்த சிலம்புச்செல்வரின் எழுபத்தேழாவது பிறந்த நாள் விழா. இறை வணக்கத்தோடு ஆரம்பிக்க வேண்டிய விழா. ஆனால் சீர்காழி கோவிந்தராஜன் ம.பொ.சியை வாழ்த்திப் பாடிவிட்டுப் பின்புதான் முருகனைப் பற்றிப் பாடினார்!

- சூடாமணி

''அப்பா இப்படியெல்லாம் பேசாதீர்கள்! உங்கள் கனவுகள் நனவாவதை நீங்கள் கண்டு மகிழத்தான் போகிறீர்கள். சுதந்திர சோழ சாம்ராஜ்யத்துக்குத் தஞ்சையில் நீங்கள் அடிக்கல் நாட்டுவீர்கள்; நான் மாளிகை எழுப்புவேன்! தஞ்சையில் உங்களுக்கு மகுடாபிஷேகம் நடக்கும்; அதனைப் புதிய தலைநகராகக் கொண்டு நான் சோழ நாட்டை விசாலப்படுத்துவேன்! இதற்கெல்லாம் முதல் படியாகத் தஞ்சையைத் தாக்கிக் கைப்பற்ற எல்லா முன்னேற்பாடுகளையும் கவனித்துச் செய்து விட்டேன் அப்பா!''

கேட்கக் கேட்கக் குமாராங்குசனின் கண்களில் அசாதாரணமான ஒளி பரவியது.

''மைந்தா! நீ இவ்வளவு சொன்னதே போதும். இளவரசுப் பட்டம்சூட்டி ரவிகுல திலகன் என்று நான் உனக்கு அளித்த விருது வீண்போகாது என்ற நிம்மதியுடன் நான் எனக்கு விதித்துள்ள மிகுதி நாட்களை ஓட்டிவிடுவேன்... எனக்கு இப்போது தேவை ஒன்றே ஒன்றுதான்...''

''என்ன அப்பா? கேளுங்கள்!''

''ஒரு வாக்குறுதி.''

''கட்டளை இடுங்கள், அப்பா!''

''இல்லை, இல்லை... என் மனம் பூரண அமைதி பெற நீ இந்த வரம் தந்துதான் ஆகவேண்டும். சத்தியம் பண்ணித் தர வேண்டும்'' என்று குமாராங்குசன் வற்புறுத்தவும்,

'என்ன வாக்குறுதி கேட்பாரோ' என்று மனம் கலங்கிக் குழம்பினான் விஜயாலயன். நூறு விதமான தயக்கங்களும் அச்சங்களும் எழுந்தாலும், அந்தச் சூழ்நிலையில் அவர் கோரிக்கையைத் தட்ட முடியாதவனாக, ''அப்படியே ஆகட்டும் அப்பா! சத்தியமாக உங்கள் விருப்பம் எதுவானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான். (தொடரும்)

தீர்ந்தது தண்ணீர் கஷ்டம்!

கி. ராஜேந்திரன்





பிரிட்டனில் உள்ள தேசிய தண்ணீர் கவுன்சில் உதவியுடன் சென்னையில் தண்ணீர் பயிற்சிக் கேந்திரம் ஆரம்பமாகியுள்ளது. இத்தகைய கேந்திரம் இந்தியாவிலேயேமுதன் முதலாகத் தொடங்கப்படுவது இங்குதான்!

இந்தக் கேந்திரத்தில் பயிற்சி அளிக்க வந்த திரு இளின் வாட்டர் ஓராண்டு பணி முடிந்து விடுமுறையில் லண்டன் செல்கிறார். அவரை பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் பேட்டி காண்கிறார்:

நிருபர்: மிஸ்டர் இளின் வாட்டர்! சென்னையில் தண்ணீர் பயிற்சிக் கேந்திரம் நிறுவி நிறையக் கற்றுத் தந்தீர்களா?

வாட்டர்: கற்றுத் தந்தேன். ஆனால் அதை விடவும் கற்றுக் கொண்டதுதான் அதிகப்! தமிழர்கள் ரொம்பக் கெட்டிக்காரர்கள். அவர்களுடைய அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லாரும் அபார திறமைசாலிகள்.

நிருபர்: அப்படியா? அமைச்சரின் திறமைக்கு ஒரு சான்று கூற முடியுமா?

வாட்டர்: ஓ யெஸ்! ஆரம்ப நாள் விழாவன்றே அவர் ஆற்றலை உணர்ந்து விட்டேன். 'சென்னை நகரின் தண்ணீர் விநியோகத்தில் இனி வெட்டு இல்லை' என்று அறிவித்தார்!

நிருபர்: இனி வெட்டு இல்லை என்றால் ஏற்கனவே வெட்டு இருந்தது என்றுதானே பொருள்! இதில் திறமை என்ன இருக்கிறது?

வாட்டர்: என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! அமைச்சர் இப்படி அறிவித்தபோது சென்னை நகரின் பெரும்பாலான வீடுகளில் குழாயில் தண்ணீரே வரவில்லை; அல்லது கண்ணீர்ச் சொட்டுக்களாக உதிர்ந்துகொண்டிருந்தது. இந்த நிலையில் 'இதற்கு மேல் வெட்டு இல்லை' என்று அறிவிக்க எத்தனை கெட்டிக்காரத்தனம் வேண்டும்!

நிருபர்: உண்மைதான். நீங்கள் 300 புத்தகங்களையும் எட்டு லட்சம் பெறுமானமுள்ள உபகரணங்களையும் வழங்கினீர்களாமே?

வாட்டர்: ஆமாம். அவை புது மெருகு குன்றாமல் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

நிருபர்: அவர்களுடைய பொறுப்புணர்ச்சி புரிகிறது... அப்படிப் பட்டவர்கள் சென்னை நகரின் தண்ணீர் விநியோகம் அபிவிருத்தி அடைய ஏதும் செலவிடவில்லையா?

வாட்டர்: செலவிடாமலென்ன? நான் அங்கு போகு முன்னரே அதற்கு முந்திய நான்கு ஆண்டுகளில் 22 கோடி செலவழித்திருந்தார்கள். நான் அங்கு இருந்த ஆண்டில் மேலும் 10 கோடி செலவழித்தார்கள்.

நிருபர்: பேஷ்! அப்படியானால் தண்ணீர்க் கஷ்டம் தீர்ந்து போயிருக்குமே!

வாட்டர்: என்னய்யா விஷயம் புரியாமல் பேசுகிறீர்கள்! தண்ணீர் கஷ்டம் தீர அவர்கள் எப்படி அனுமதிக்க முடியும்? பிரச்னை தீர்ந்து விட்டால் நடப்பு ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் மேலும் சில கோடிகளை அவர்கள் எப்படிச் செலவிட முடியும்?

நிருபர்: அப்படியானால் பிரச்னை தீராத வகையிலேயே அவர்கள் கோடிக் கணக்கில் பணம் செலவிடுகிறார்கள் என்று சொல்

லுங்கள்! இதற்கு அபாரத் திறமை தேவை தான். சென்னை நகரின் தண்ணீர் கஷ்டத்தைத் தீர்க்க நிரந்தர பரிகாரமாக ஏதும் திட்டம் போடவில்லையா?

வாட்டர்: போடாமலென்ன, வீராணம், கிருஷ்ணா, கட்டளை என்று திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். சென்னை நகரைச் சுற்றியுள்ள ஏரிகளின் நீரைப் பயன்படுத்தலாம் என்ற புதிய யோசனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிருபர்: திட்டங்கள் போட்டால் மட்டும் போதுமா? நிறைவேற்ற வேண்டாமா?

வாட்டர்: கூடாது! கூடவே கூடாது! அதில்தான் இருக்கிறது சாமர்த்தியம்.

நிருபர்: சற்று விளக்கமாகக் கூறுங்கள்.

வாட்டர்: 'திட்டம் வைத்திருக்கிறேன்' என்று தலைவர் சொல்லிக் கொண்டே இருந்தால் மக்களும் நம்பிக்கையுடன் காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பார்கள். திட்டம் நிறைவேறி விட்டால் — தண்ணீர் கஷ்டம் தீர்ந்து விட்டால் மக்கள் மனம் இதைவிடவும் பெரிய பிரச்னையில் திரும்பும். தங்கள் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். குடும்பத்துக்கு ஒரு இல்லம், அதில் ஒரு டூ இன் ஒன், டீ.வி. எல்லாம் வேண்டும் என்பார்கள்! எதற்கு வம்பு? அடிப்படைத் தேவையான தண்ணீர்ப் பிரச்னையே தீராமல் இருந்தால் பெரிய ஆசைகளுக்கு இடமில்லை பாருங்கள்!





நிருபர்: ஒண்டர்ஃபுல்! இத்தனை முன் யோசனையா தமிழகத் தலைவர்களுக்கு! அது சரி, தண்ணீர் கஷ்டம் மிகுதியாக இருந்தால் அதனால் நோய்கள் பரவாதா?

வாட்டர்: ஓ, மை காட்! நீங்கள் நினைப்பதற்கு நேர் மாறாகத்தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக நோய்கள் அங்கு குறைவு!

நிருபர்: அதெப்படி? ஆச்சர்யமாய் இருக்கிறதே!

வாட்டர்: சுத்தமான குடிநீரை வாட்டர் ஒர்க்ஸிலிருந்து அனுப்பினாலும் சென்னை நகரின் வீதிகளுக்கு அடியில் குடிதண்ணீர் குழாயும் ஒழுகும், சாக்கடைக் குழாயும் கசியும். இரண்டும் கலந்து விடுவதால் விநியோகமாகும் குடி தண்ணீரில் ஏகப்பட்ட கிருமிகள். ஜாண்டிஸ் தொடங்கி டயரியாவரை பலப்பல வியாதிகள் இதனால் பரவுகின்றன. தண்ணீரைக் குறைவாக விடுவதால் குறைவாகத்தானே பயன்படுத்த முடியும்? அந்த அளவுக்கு வியாதிகளும் குறையத்தானே செய்யும்? தாராளமாகக் குடிநீர் விநியோகித்தால் ஆஸ்பத்திரிகளில் இடம் காணாது!

நிருபர்: மக்களின் ஆரோக்கியம் பேணுவதில் அத்தனை அக்கறையா தமிழகஅரசுக்கு! ஆனால் குடி தண்ணீர் விநியோகம் அபிவிருத்தி அடையாமலே இருந்தால் அமைச்சர்களும் அதிகாரிகளும் சோம்பி இருப்பதாக எண்ணம் பரவாதோ!

வாட்டர்: ஒரு நாளும் பரவாது! ஏனென்றால் முதலமைச்சர் 'சோம்பலுக்கு இடம் தரக் கூடாது' என்று சொன்னதாக அமைச்சர் ஆரம்ப விழாவன்று அறிவித்துவிட்டார்!

நிருபர்: ஓ! அப்படியானால் அமைச்சர்கள் சுறுசுறுப்பாக இயங்குகிறார்களா?

வாட்டர்: ஓ யெஸ்! முன்பு ஒரு நாளில் ஒரு மீட்டிங்கில் பேசினார்களென்றால் இப்போதெல்லாம் மூன்று நிகழ்ச்சிகளில் சொற்பொழிவாற்றுகிறார்கள்!

நிருபர்: இதனால் மக்களின் தண்ணீர் கஷ்டம் எப்படித் தீரும்?

வாட்டர்: இது தெரியலையா? முன்பு மக்கள் ஒரு சொற்பொழிவைத்தான் காலைப் பத்திரிகையில் படித்தார்கள்; இப்போது மூன்று சொற்பொழிவுகளைப் படித்து முடிக்க அதிக நேரம் பிடிக்கிறது. ஆபீஸுக்குத் தாமதமாகி விடுகிறது. பெரியாரைப் பின்பற்றிக் குளிக்காமலே பஸ் பிடிக்க ஓடி விடுகிறார்கள்! இதனால் ஏராளமான தண்ணீர் மிச்சமாகிறது! தண்ணீர் கஷ்டத்தைத் தீர்க்க இதைவிடச் சிறந்த வழி எது?

திரைஞானி

சினிமா

சினிமா



நன்றி! மீண்டும் வருக!

கோபம் கோபமாக வருகிறது 'அம்னீஷியா' வியாதியைத் திரையில் பார்க்கும் போது. இதை வியாதி ஸ்ரீதேவிக்கு வந்த போது எத்தனை அழகாக இருந்தது! இதில் சுகாசினிக்கு. நேர் விரோதம்.

''இவருக்கு இப்போ என்ன ஆயிற்று? நன்றாகத்தானே பேசுகிறார். பின்னே ஏன் டாக்டர் தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறார்'' என்று கேட்க வைக்கிறார்கள்.

முதல் பிரதாப், காதலுக்கு 'ஜே' போடும் அசட்டுப் பைத்தியம். நல்ல வேளை! கதை ஆரம்பத்திலேயே அந்த காரெக்டர் செத்துத் தொலைந்ததால் கொஞ்சம் பிழைக்கிறோம்.

அடுத்த பிரதாப் வருகிறார் — படா கெடுபிடி பிலிம் ஸ்டாராக! டாக்டர் தம்முடைய ட்ரீட்மெண்டில் நம்பிக்கை இல்லாமல் ''ஆனந்த் மாதிரியே தோற்றமுள்ள இவர் வந்தால்தான் உங்கள் பெண்ணுக்கு நினைவு திரும்பும்'' என்று சொன்னதும் சுகாசினியின் அப்பா அவரை அழைத்து வரப் படாதபாடு படுவது வேடிக்கை. வந்த நடிகர் எரிந்து விழுவதும் தனக்குப் பிடிக்காத பாலைக் குடித்து விட்டு முணு முணுப்பதும்... போர்ட்டிக்கோ தூணை எட்டி எட்டி உதைத்து ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதும் அதைவிட அழகாகத்தான் இருக்கிறது. என்றாலும் கோபத்துக்குத் தகுந்த 'பர்ஸனாலிடி' அவருக்கு இல்லாதபோது நமக்கும் எரிச்சல் வருகிறது.

சுகாசினியைப் படுக்கையில் கிடத்தி அவரது நடிப்பாற்றலையும் 'படுக்க' வைத்து விடுகிறார்கள். ஆரம்பக் கட்டங்களில் அவரை ஊருக்கு உபகாரியாகக் காட்டி சென்ஸஸ் கணக்கெடுப்பில் அனைவரும் 'ஜானு' பெயரைச் சொல்லும் அளவு 'பொதுச் சொத்தாக' உயர்த்திக் காட்டியிருப்பது பின்னால் வரும் அம்னீஷியா காரெக்டருக்கு எப்படிப் பொருந்தும்?

காமிராவைத் தூக்கிக்கொண்டு ஜெய்சங்கர், ஜெயமாலினி, ஸ்மிதா, ரஜினிகாந்த், ஜெய்சித்ரா இப்படிப் பல நட்சத்திரங்களைச் சுட்டிருக்கிறார்கள். அவற்றுள் ரஜினிகாந்தின் திருமண அட்வைஸ் நினைவில் நிற்கிறது.

படமெடுக்க வந்த பால்கார ப்ரொட்யூசரின் மாட்டு மந்தையைக் காட்டி 'ஸ்டோரி டிஸ்கஷன்' என்றதும் அதில் பாதி காணமல் போவதைக் காட்டியிருப்பது நயமாகத் தெரிந்தாலும் கதை ஓட்டத்திற்கு இடைச் செருகல்தானே?

சாருஹாஸன் இன்ஸ்பெக்டரை ஓட வைத்துத் திருடனைத் துரத்தச் சொல்லிப் படப்பிடிப்பு நடத்திய 'ஜோக்'கை ரசிக்கலாம்.

மௌனிக்குத் தனித் தனிக் காட்சிகளை ஜோடிப்பதில் இருக்கும் சாமர்த்தியம் முழுப் படத்தை ஒட்டு மொத்தமாக அலங்கரிப்பதில் இல்லை.

நன்றி மட்டும்.



தாய் மூகாம்பிகை

மூகாம்பிகை அம்மனின் திருக்கோயிலைக் காமிரா துருவித் துருவிக்காட்டிக் கொண்டே போகும் ஆரம்பக் காட்சிகளில் இருக்கும் கம்பீரம் போகப் போகக் குறைந்து கொண்டே போகிறது.

அம்பிகையின் வரலாற்றை — அருள் பெற்ற கதைகளைத் திரையில் பார்க்கப் போகிறோம் என்னும் ஆர்வத்துடன் படம் பார்ப்பவர்களுக்கு லாட்டரி டிக்கெட் முடிவில் ஏற்படுகிற மாதிரி பெருத்த ஏமாற்றம்.

ஆதி சங்கரர் காலத்தில் சுயம்பு தோன்றிய வரலாற்றையும் திருக்கோயில் எழுந்த கதையையும் விநயமாகக் காட்டி முடித்த அடுத்த காட்சிகளில்...

சிங்கப்பூரில் சிவகுமாரும் பூர்ணிமா ஜெயராமும் டூயட் பாடிக் கொண்டே மோட்டார் படகுகளில் விரைவதும் காட்டு வாசிகளுக்கு நடுவே சிக்கி நடனமாடித் தப்புவதும் கண்டு கண்கள் சோர்ந்து விடுகின்றன.

ஆரம்பக் காட்சிகளில் மூகாம்பிகை கோவிலில் ஜாதிப் பிரச்னையை எழுப்பி யிருப்பது அத்திருத்தலத்தின் புனிதத்தைக் குறைத்து விடுகிறது. தீண்டத் தகாத பெண் என்று சொல்லி, தேங்காய் விஜயாவைக் கோவில் பிராகாரத்திற்கு வெளியே உந்தித் தள்ளும் போது கோவில் பட்டர் அதை ஆமோதிக்கிறார். இப்படிப்பட்ட புண்ணுக்கு மருந்து போட்டிருக்கிறார் சுஜாதா. ஹரிஜனப் பெண்ணைத் தொட்டுத் தூக்கித் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவளிக்கிறார். அவள் இறந்த பிறகு பட்டரின் எதிர்ப்பையும் மீறி 'சம்ஸ்காரம்' செய்யவும் துணிகிறார்.

அம்மனுக்கும் கே. ஆர். விஜயாவுக்கும் ஒரு நல்ல ராசி. முந்தைய படங்களைப் போலவே மனித உருக் கொண்ட அம்மனாக வருகிறார். பாட்டுப் போட்டியில் அந்தப் பக்கம் மனோரமா இந்தப் பக்கம் சரிதா. நடுவில் 'நிற்கிறார்' — நடிப்பில்!

பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் மனோரமாவுக்கு மறைவில் நின்றுகொண்டு 'பா' எனப் பாடி அசல் ஊமையைப் போலவே ஒலி எழுப்பும் இடம் சரிதாவுக்கே உரியது.

அப்பாவித்தனமான கதாபாத்திரங்களில் கார்த்திக் சோபிப்பார் என்பதற்கு இப்படம் ஓர் உதாரணம்.

ஜெகதீசன் வசனங்களில் ஆன்மீக உணர்வுகளைச் சற்று ஆழமாகவே தொட்டுள்ளார்.

'ஜனனி... ஜனனி' பாடலை இளையராஜா பாடாமல் ஜேசுதாஸ் பாடியிருந்தால் இன்னமும் சிறப்பாக இருந்திருக்கும்.

தரிசனத்தில் நிறைவு காண முடியாத குற்றத்துக்கு டைரக்டர் கே. சங்கர் பொறுப்பாகிறார்.

ஓ

அகர வரிசைப் பேட்டி :

சாந்தி கிருஷ்ணா

ஒப்பனை

நான் ஆறு மலையாளப் படங்களிலும், ஐந்து தமிழ்ப் படங்களிலும் நடித்திருக்கிறேன். மேலும் நான்கு படங்களில் நடித்து வருகிறேன். ஆனால் ஒரு தமிழ்ப் படத்துக்காக மட்டுமே ஒப்பனை செய்து கொண்டுள்ளேன். என் முதல் படமான 'பன்னீர் புஷ்பங்கள்' படம் அது. என்னைப் பொறுத்தவரையில் மேக்கப் தேவையில்லை என்றே நினைக்கிறேன்.



ஒட்டகம்

'சிம்லா ஸ்பெஷல்' படத்துக்காக வி.ஜி.பி.யில் நான், பாஸ்கர், கமல், சேகர் நால்வரும் ஒட்டக வண்டியில் சவாரி செய்வது போன்ற காட்சியைப் படமாக்கினார்கள். வண்டி நகரும்போது மற்ற மூவரும் எழுந்து நின்றார்கள். நான் மறுத்து விட்டேன். ஒரே பயம்.

ஒன்று

ஒன்றாவது மாதம் ஒன்றாம் தேதி எனக்கு மகிழ்ச்சியான நாள். அன்று வருஷப் பிறப்பு என்பது மட்டுமல்ல. மறுநாள் எனக்குப் பிறந்த நாள் வரும். ஜாலியாகக் கடைக்குச் சென்று பொருள்கள் வாங்குவேன்.

குவைத் நாட்டில் இந்தியா – பாகிஸ்தான் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு படித்தது நன்றாக நினைவிருக்கிறது.

ஒலியும் ஒளியும்

டீ. வி.யில் நான் நடித்த பாடல் காட்சியை ஒரே ஒரு முறைதான் பார்க்க நேர்ந்தது. 'மணல் கயிறு' பாடல் காட்சி அது. சமீபத்தில் என்னை ரொம்பவும் கவர்ந்த பாடல் காட்சி 'செல்வம்' படத்திலிருந்து ஒளிபரப்பப்பட்டதாகும்.

ஒப்பாரி

படத்திற்காக நான் நிறைய அழுதிருக்கிறேன். எல்லாப் படத்திலும் நான் அழாமல் இல்லை. வரப்போகிற 'இலையுதிர் காலம்' படத்தில்தான் எப்படி – எத்தனை வகை வகையாக அழவேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். 'கிளிசரைன்' இல்லாமல் எனக்கு அழத் தெரியாது. ஆனால் 'சின்ன முள் பெரிய முள்' படத்தில் ஒரே ஒரு காட்சியில் கிளிசரைன் இல்லாமல் டைரக்டர் அழச் சொல்லிவிட்டார். அழ வராமல் ரொம்ப அவஸ்தைப் பட்டேன். ரொம்பக் கஷ்டப்பட்டுப் பிறகு அழுதேன்.

நான் ஒப்பாரி வைத்த ஒரே படம் 'சிவப்பு மல்லி' தான்.

ஒலிம்பிக்

எனக்குப் பிடித்த விளையாட்டு ஜிம்னாஸ்டிக். பள்ளியில் படிக்கும்போதே கற்றுக் கொண்டேன். மற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு இல்லை.

காமிராவைச் சுற்றி

ஏ.வி.எம். ஸ்டுடியோ எட்டாவது ஃப்ளோருக்கு அந்தப் பக்கம் ஒரே கும்பல். பரபரத்துக்கொண்டிருந்தார்கள் பலர்.

''சகல கலா வல்லவன்'' படத்துக்காகப் போடப்பட்டுள்ள மூன்று லட்ச ரூபாய் செலவுள்ள செட்டை எரிக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள்.

பகுதி எரிவதைப் பார்ப்பதை விட மனிதனுக்கு ஆனந்தம் வேறு என்ன இருக்கிறது?

வேடிக்கை பார்த்தேன். மூன்று கோணங்களில் மூன்று காமிராக்களை ரெடியாக நிறுத்தியிருந்தார் காமிராமேன் பாபு.

ஏராளமான பஞ்சு மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. ஜூடோ ரத்தினம் அதன்மீது பெட்ரோலைத் தெளித்துக் கொண்டிருந்தார். மாடி மீதும் பஞ்சு பரப்பப்பட்டது.

''சரக் கோணி ரெடியா?''

''தீ வெச்சதும் மாடியிலேருந்து கீழே வந்துடு.''

''தண்ணி பாய்ச்சற ஆளை ரெடியா நிக்கச் சொல்லு.''

''கார் வேகமாக வந்து விட்டை. இடிச்சதும் காருக்குள்ளே இருக்கிறவர் வெளியே ஓடிவர வழி இருக்கா?''

—இப்படியாக டைரக்டர் எஸ். பி. முத்துராமனும் அவரது உதவியாளர்களும் அதை வரையும் தயார்ப்படுத்த உரக்கக் கத்திக் கொண்டிருந்தனர்.


ஜூடோவின் உதவியாளர்கள் தீப்பந்தத்தைத் தூக்கிக் கொண்டு போய்ப் பஞ்சுக்குத் தீமூட்டினார்கள்.

ஐந்து வினாடி நேரத்தில் பங்களா பற்றிக் கொண்டது. தீ ஜ்வாலைகள் வானளாவ எழுந்ததும் ''ரெடி... ரெடி... ஸ்டார்ட் காமிராஸ்... ஸ்டார்ட் கார்...'' என்று கத்தினார் டைரக்டர்.

வேகமாக வந்த கார் சுவரை இடித்துக் கொண்டு உள்ளே வந்து நின்றது. கமல் உள்ளே இருந்து வேகமாக இறங்கினார்.

வினாடிக்கு முன்பு தீ வைத்தவர்களே விரைந்து போய் அணைத்துக் கொண்டிருந்தார்கள்.

''கடந்த மூன்று நாட்களாக இப்படித்தான் தீமூட்டி அணைத்துக் கொண்டிருக்கிறோம். அநேகமாக நாளை மாலை முழு செட்டையும் எரித்துவிடுவோம்'' என்றார் பாபு.



நீங்கள் கேட்டவை


✖ சுஜாதா


✖ கன்னு


✖ ராஜாஜி


✖ மாலன்

✖ ஆர். வி. கமலா, சென்னை-52

? மூளை ஜுரத்தைச் சரியாக டயக்னோஸ் பண்ணத் தெரியாமல், வெறும் ஜுரம் என்று சொல்லி அநியாயமாக என் 18 வயது மகனை மூன்றே நாளில் சாகடித்த டாக்டரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! தங்கள் துயர் எனக்குப் புரிகிறது. அனுதாபங்கள். ஆயினும், ஏழு மாதமாக மாதவிடாய் நின்று விட்டதாகவும் வயிற்றில் வலி இருப்பதாகவும் கூறிக்கொண்டு வந்த பெண்மணி கருவுற்றிருக்கிறாளா என்பதைக் கூடச் சோதிக்காமல் கர்ப்பப் பையில் ஃபைப்ராய்ட் என்று சொல்லி அதனை நீக்கியதன் மூலம் இன்னும் சில நாட்களில் பிறக்க இருந்த குழந்தையையும் சாகடித்து, தாயையும் மலடியாக்கிய புதுதில்லி டாக்டரை விடவும் உமது இந்தச் சென்னை டாக்டர் தேவலாம்தான்!

✖ ஆர். இளங்கோ, ஏந்தல்

? உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது. அரசியல்வாதி கணக்குப் பார்த்தால்...?

! நாடு நலன் பெறும். ஆனால் அவர்கள் எங்கே ஐயா கணக்குப் பார்க்கிறார்கள்?

✖ க. அன்பழகன், சேத்தூர்

? சமீபத்தில் வெளியான இலக்கியத்தரம் வாய்ந்த சிறுகதை ஒன்றைச் சொல்லுங்கள்!

! மாலன் எழுதி இந்தப் பத்திரிகையில் வெளியான 'கல்வி' என்ற சிறு கதையை (9—5—82 இதழ்) அம்மாதத்திய சிறந்த சிறுகதையாக இலக்கிய சிந்தனை தேர்ந்தெடுத்துள்ளது.

✖ வெ. பாலசந்திரன், கல்கத்தா 26

? அந்துலே போல வேறு யாராவது கூத்து அடித்துக் கொண்டிருக்கிறார்களா?

! இத்தனை பெரிய பாரதத்துக்கு ஒரு அந்துலே போதுமா என்ன? (1) பெட்ரோலியம் எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு ஹாங்காங் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதில் ஏற்பட்டுள்ள 12 கோடி நஷ்டம் பற்றி அருண் ஷோரி எழுதியுள்ளார். சர்வதேச மார்க்கெட்டில் விலை குறைந்து வந்த சமயத்தில் அதற்குத் தொடர்பின்றி அதிக விலை தருவதாக டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசு வர்த்தக ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளை ஆராயும் பார்லிமெண்டரி கமிட்டி பல தடவை சம்பந்தப்பட்ட ஃபைலைக் கேட்டும் கிடைக்கவில்லை. 15 மாத காலத்துக்குப் பிறகு அது பிரதமர் காரியாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது! இப்போது நாடாளுமன்றத்தில் இந்த விஷயம் ஏக அமளி துமளிப்படுகிறது. (2) உத்தரப் பிரதேச அரசின் உணவு இலாக்கா நேரடியாக நெல் கொள்முதல் செய்ததில் 50 கோடி ஊழல் நடந்திருப்பதாகப் பதவி துறந்த வி. பி. சிங் போகிற போக்கில் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்!

✖ எல். ஆர். சுந்தரராஜன், பட்டினப்பாக்கம்

? கன்னுவின் தோல்வி உலக அரங்கில் இந்தியாவுக்கு அவமதிப்பைத் தராதா?


! ஒரு நாளும் தராது. மாறாக நிச்சயமாகத் தோற்றுப்போவோம் என்றுதெரிந்திருந்தும் ஜனநாயக மரபு காக்க கன்னு போட்டியிட்டது காரணமாக உலக அரங்கில் நமக்குப் பெருமையே.

✱ எழிலி, கோவை ★
? புரிந்தது எது? புரியாதது எது? தெரிந்தது எது? தெரியாதது எது?
! புரிந்தது: எஸ். ஐ. இ. டி. நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் மனக் கசப்பு வளர்ந்திருப்பது. புரியாதது: ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஏன் சுமுகமான ஒரு முடிவுக்கு வரக் கூடாது என்பது. தெரிந்தது: ஒரு கல்லூரியை மூடிவிடுவது ரொம்பச் சுலபம். தெரியாதது: புதிதாக ஒரு கல்லூரியை ஆரம்பிப்பது எவ்வளவு கஷ்டம் என்பது.

✱ பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி
? முன்பொரு இதழில் ஒப்பிடுதலே பிடிக்காது என்று சொல்லிவிட்டு இந்த வாரம் கவாஸ்கர் - விசுவநாத்தை ஒப்பிட்டிருக்கிறீர்களே? (11-7-82 இதழ்)
! ஒப்புவமை இல்லாதவர்களை ஒப்பு நோக்குவது எனக்குப் பிடிக்காது.

✱ பூவை கே. சந்திரன், பாண்டமங்கலம்
? விதியை மதியால் வெல்ல முடியுமா?
! முடியும்; முடியாது! இரு சமீபத்திய செய்திகள்: முடியும்: விமானம் பறந்து கொண்டிருந்தபோது ஒரு மேக மண்டலத்தினூடே புகுந்தது. திடீரென்று நாலு இஞ்சின்களின் இயக்கமும் நின்று போயிற்று! காரணம் அந்த மேக மண்டலம் உண்மையில் எரிமலைச் சாம்பல்! நாலு இஞ்சின்களிலும் புகுந்து கொண்டது. அந்த நிலையிலும் பைலட் வெகு சாமர்த்தியமாகச் செயல்பட்டு விமானத்தைப் பத்திரமாக விமான நிலையத்தில் இறக்கினார். முடியாது: விமானம் பறந்து கொண்டிருந்தபோது என்ன நடந்தது என்று யாருக்கும் தெரிவதற்கு முன்னே அது நியூ ஆர்லின்ஸ் நகரின் வீடுகள் நிரம்பிய பகுதியில் விழுந்து நொறுங்கியதில் பயணிகள் மட்டுமின்றி பற்றி எரியும் வீடுகளில் சிக்கினவர்களும் உட்பட 153 பேர் மரணம்! புயலின் உடன்விளைவான wind shear (வெட்டும் காற்று) இதன் காரணமாய் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

✱ ஜி. வரதராஜன், மதுரை
? குமுதத்தில் நிஜர் தொடர்கதை, பிறகு கதிரில், சாவியில், தாயில் இப்போது கல்கியிலும் தொடர்கதை! மனுஷனுக்குக் குளறுபடி வராதா?
! தமிழ்ப் பத்திரிகை உலகையே தனியொருவராகத் தாங்குகிறாரோ என்று எண்ணும் அளவுக்கு எழுதிக் குவிக்கிறார் சுஜாதா. என்றாலும் தொடர் கதைகளை முன்கூட்டியே இட்டமிட்டு வைத்துக் கொள்வதாலும் சுய கட்டுப்பாட்டுடன் செயல்படுவதாலும் குளறுபடியும் இல்லை; தாமதமும் கிடையாது! ஒவ்வொரு கதையையும் முற்றிலும் வித்தியாசமான கதாபாத்திரங்கள், சம்பவங்கள், இடங்களைக் கொண்டு பின்னுவதால் அத்தனை கதைகளையும் படிப்பவர்களும் குழப்பமடைவதில்லை.



தராசு

✱ சி. சௌந்திரபாண்டியன் - இருஷ்ணகிரி
? பணத்தினால் கூட சாதிக்க முடியாதது எது?
! மூன்று லட்சத்துக்குத் தன் சிறுநீரகம் ஒன்றை விற்கத் தயார் என்று நாளிதழில் விளம்பரம் தரும் நபர் பணத்தினால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை என்று எண்ணலாம். ஆனால் ஆபரேஷன் வெற்றியடைவது, ஒரே சிறுநீரகத்துடன் அவர் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ்வது, கிடைக்கும் மூன்று லட்சத்தில் அவர் திட்டப்படி தொழில் தொடங்கிஅதைநஷ்டப்படாமல் நடத்துவது போன்ற எல்லாவற்றுக்கும் இறையருளும் தேவைதான்.

✱ எஸ். பாஸ்கரன் சென்னை-14
? மூதறிஞர் ராஜாஜியிடம் உள்ள சிறந்த குணங்கள் எவை?
! சரிதான், நீங்கள்கட்டுரை கேட்கிறீர்கள்! இருக்கட்டும், ஒரு சம்பவம் மட்டும் சொல்கிறேன். கவர்னர் ஜெனரலாக இருந்த போது படுத்தபடியே படிக்க வசதியாகத் தலைமாட்டில் உயர்ந்து தாழக்கூடிய ஒரு கட்டில் செய்து கொண்டார் ராஜாஜி. அது அவருக்கு எவ்வளவு வசதி என்று நேருஜிக்குத் தெரிந்திருந்தது. பதவி-காலம் முடிந்து சென்னை திரும்பியபோது அவர் சொந்த உடைமைகளுடன் இந்தக் கட்டிலும் மூட்டை கட்டப்படுவதைக் கண்டார் ராஜாஜி. தடுத்தபோது, அது நேருஜியின் விருப்பம் என அறிந்தார். மறுத்தால் நேருஜியின் மனம் புண்படும் என்பதால் அந்தக் கட்டிலின் கிரயத்தை அரசாங்க கஜானாவில் சேர்ப்பித்தார்!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
கணியூர் எழிலி
8/15 ஸ்டேட் பேங்க் ரோடு
கோவை 641 018



சிக்கன திலகம்

என் அருமை மனைவி கமலாவின் பலஅற்புத சிக்கன யோசனைகளைப் பலருக்கும் தெரியப்படுத்த முன்வருகிறேன். அனைவரும் பலன் பெற்று இன்புற்று இருப்பீர்களாக!

• • •

1958ல் ஒரு ரூபாய் எட்டணா கொடுத்து ஓர் இரும்புப் பக்கெட் வாங்கினுள் கமலா. சில மாதங்கள் கழித்து அடியில் ஓட்டை விழுந்து விட்டது. ரிப்பேர் செய்பவனிடம் கொடுத்து அடியை வெட்டி வேறு ஒன்று போடச் செய்தாள். இப்படி வருடா வருடம் செய்து வருகிறுள். இத்தனை வருடங்களாகியும் அதே பக்கெட் உழைக்கிறது என்ருல் கமலாவின் சிக்கன முறைதான்காரணம். (ரகசியப் பின் குறிப்பு: இத்தனை வருடங்களில் ரிப்பேருக்காக ஆன செலவு 93 ரூபாய். உலகிலேயே தாம்பாளத்துக்குக் கைப்பிடி வைத்த மாதிரி இருக்கும் பக்கெட் எங்கள் வீட்டில் மட்டும்தான் இருக்கிறது. வருஷா வருஷம் வெட்டியதில் உயரம் குறைந்துவிட்டது. இருந்தால் என்ன, முழுதாக ஒரு டம்ளர் தண்ணீர் பிடிக்கும் எங்கள் வீட்டுப் பக்கெட்டில்!)

• • •

ஒரே ஒரு கெஜம் துணி வாங்கிப் பாவாடை தைத்தாள் கமலா. என் பெண் மூன்று வருஷம் போட்டுக் கொண்டாள். தழையத் தழைய இருந்த பாவாடை, கணுக் காலுக்கு ஏறி, பாதி காலுக்கு ஏறி முழங்காலுக்கு வந்து விட்டது. அதைப் பிரித்து அரை ஸ்கர்ட்டாகத் தைத்தாள். ஒரு வருஷம் கழித்து அதைப் பிரித்து டேபிள் க்ளாத்தாகப் போட்டாள். ஆறு மாதத்துக்குப் பின் டேபிள் க்ளாத்தை ரேடியோவுக்கு உறையாகத் தைத்துப் போட்டாள். பின்னும் ஒருவருஷத்துக்குப் பிறகு அதைத்தோள் பையாகத் தைத்தாள். ஆறு மாதத்தில் தோள் பட்டை நைந்து விடவே பிரித்துச் சாதாரண கைப் பையாகத் தைத்தாள். ஒரு வருஷம் ஆயிற்று. கை பையைப் பிரித்து ஆறுபிடி துணியாகத் தைத்துச் சமையலறையில் உபயோகித்து வருகிறுள். இதுவல்லவோ சிக்கனம்! (பிரித்துத் தைப்பதற்கு மட்டும் 34 ரூபாய் செலவானதைப் பற்றி விசாரிக்காதீர்கள்!)

• • •

என் வீட்டில் மொத்தம் 67 பேனுக்கள் இருக்கின்றன. ஆனுல் ஒரு பேனுவில் கூட காப், க்ளிப், பாரல், கழுத்து, நாக்கு, நிப்பு ஒத்து இருக்காது. பழைய பேனுக்களிலிருந்து இத்தனை அசெம்பிள் பண்ணியிருக்கிறுள். ''ரொம்ப நன்னு எழுதறது. இரண்டு ரூபாய் கொடுத்து நிப் வாங்கிப் போட்டிருக்கிறேன்'' என்று அவள் கொடுக்கும் பேனுவை வாங்கி எழுதினுல் உடனே ஒரு கட்டி டாய்லெட் சோப்பும் ஒரு கட்டி வாஷிங் சோப்பும் தேவைப்படும். பேனு அவ்வளவு லீக் ஆகும். உடலிலும் துணியிலும் படும் இங்கிக் கறையைப் போக்குவதற்காக ஆகும் செலவைப் பற்றிக் கண்டு கொள்ளாதீர்கள். ''நன்னு இருக்குதே. முழுசாக எட்டணுக் கொடுத்து வாங்கின பேனுவைத் தூக்கிப் போட இங்கே என்ன சமஸ்தானமா சொத்தா கொள்ளை போகிறது?'' என்பாள்.

• • •

இங்க் போட்டதும் பேனுவைத் துடைப்பதற்கு ஒரு சின்னத் துணியையே உபயோகித்து வருகிறேன். ஆறு மாதத்துக்கு ஒரு தரம் அந்த இங்க் கறைத் துணியை ஒரு சின்ன டம்ளரில் ஊறப்போட்டு வெய்யிலில் வைப்பாள். ஒரு ஃபில்லர் அளவுக்கு நல்ல இங்கி கிடைக்கும். 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழிக்குக் கமலாவே நடமாடும் விளக்கம்.

• • •

ஒரு வத்திக் குச்சியைப் பற்ற வைத்தால் இரண்டு சுவாமி விளக்கு, இரண்டு காஸ் அடுப்பு, ஒரு ஊதுவத்தி ஆகியவைகளைக் கொளுத்துவாள். தனித் தனியாகக் கொளுத்தினுல் வீண் செலவுதானே? (ஒரு நாளைக்கு எட்டுத் தரம் அடுப்பைப் பற்றவைத்தாலும்) இத்தனையையும் பற்றவைப்பாள். ஊது வத்தி, எண்ணெய் ஆகியவற்றுக்கு ஆகும் செலவைப் பற்றிக் கேட்காதீர்கள். அது வேறு ஐட்டம். தீப்பெட்டிச் செலவில் அது வராது. சந்தேகம் இருந்தால் சார்டர்ட் அக்கவுண்டண்டிடம் கேளுங்கள்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனாமல் எளிதில் துவாரங்களுக்கும் சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராக பாதுகாப்பு தேவை.

புதிய ஃப்ளோரிகார்ட் டூத் பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப் படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் அதில் உள்ளது.

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

உலகெங்கும் உள்ள ஆராய்ச்சிசாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப் படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.




ஃப்ளோரிகார்டில் உள்ள எம் எஃப்பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM

REGISTERED No. M. 4393
Registered as a Newspaper in Sri Lanka

ராசி வண்ணம்



Adroit 173 TAM

துலா

வெண்ணிறம் வெள்ளி கார்த்த வீரியார்ஜுனன்
எண் ஆறு வைரம் நன்றிவை துலாராசிக்கு
கள்ளமில் உளத்தவர் கலா ரசிகர்
காரியம் முடிப்பர் யாரையும் அளப்பர்
துலா ராசியினர் பெருமையிங் குரைத்தேன்
நலமுடன் கவிதையில் ராசிக்கவி 'கட்டு' காண்.



ஏஷியன் பெயிண்ட்ஸ்